விலை: ரூபா 20 பக்கங்கள் 28

உதயன்

31 °C/F
தெளிவான வானம்

சுடர் 30 கதிர் 285 வள்ளுவர் ஆண்டு 2046 ஆவணி 21, திங்கட்கிழமை 07.09.2015

# எதிர்க்கட்சி தலைமைக்காக பிரயத்தனம்

## சபாநாயகரைச் சந்திப்பதற்கு மகிந்த ஆதரவுத் தரப்பு தீர்மானம்

கொழும்பு, செப்ரெம்பர் 7
ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேசிய அரசில் இணையாது எதிர்க்கட்சி வரிசையில் உள்ளவர்கள் இணைந்து எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கான அனுமதி பெறவுள்ளோம் என்று மகிந்த ஆதரவுத் தரப்பினர் அறிவித்துள்ளனர். இது தொடர்பில் சபாநாயகர் கரு ஜயசூரியவை நேரில் சந்திக்கவுள்ளோம் என்றும் அ:வர்கள் குறிப்பிட்டுள்ளனர்.
எதிர்க்கட்சி தலைவர் யார் என்பது தொடர்பில் இரகசியம் காக்கப்படுகின்றது என்று குறிப்பிட்டுள்ள அவர்கள் எதிர்க்கட்சியின் அமைப்பு மற்றும் எண்ணிக்கை குறித்து பிரதி அமைச்சர்கள் மற்றும் ராஜாங்க அமைச்சர்களின் பதவிப் பிரமாணம் நிறைவடைந்த பின்னரே உறுதிப் படுத்திக் கொள்ள முடியும் என்றும் தெரிவித்துள்ளனர்.
சிலர் சில நாள்களுக்கு முன்பு ஜனாதிபதியை சந்தித்து அம்மச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொண்டனர் என்றும் இன்னும் சிலர் பிரதி அமைச்சர் மற்றும் ராஜாங்க அமைச்சர் பதவியை கோரியுள்ளனர் என்றும் சுட்டிக்காட்டியுள்ள அவர்கள் அதனால் இந்த எண்ணிக்கையைத் தற்போது கூற முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளனர்.,

பக்கம் 02.....

### உள்ளூராட்சி தேர்தலை மார்ச்சில் நடத்தத் திட்டம்

கொழும்பு, செப்.7
உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ளது என்று அரச தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.
நாடு பூராகவுமுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் 335 இல் 301 உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் நிறைவடைந்துள்ளது. இதேவேளை ஏனைய 34 உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலம் அடுத்த மாதம் 15 ஆம் மற்றும் 31 ஆம் திகதிகளுடன் நிறைவடையவுள்ளன.
பதவிக்காலம் முடிவடைந்துள்ள உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகங்கள் விசேட ஆணையாளர்களின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. அடுத்த மாதம் பதவிக்காலம் பக்கம் 02.....

### வாக்குரிமை இழந்தவர்களை விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்து

கொழும்பு, செப்.7
நடைபெற்று முடிந்துள்ள ஜனாதிபதி தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலின் போது வாக்குரிமையை இழந்தவர்கள், அது குறித்து எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல் திணைக்களத்துக்கு அறிவிக்க முடியும் என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய அறிவுறுத்தியுள்ளார்.
இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய,
வாக்காளர் இடாப்பில் பெயர் இல்லாதவர்கள் தங்களது குடும்ப உறுப்பினர்களது முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை பக்கம் 02.....

### ஜெனிவா விவகாரம் குறித்து கொழும்பு-டில்லி ஆலோசனை

கொழும்பு, செப்.7
ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான போர்க் குற்ற விசாரணை அறிக்கை வெளியாகவுள்ள நிலையில், அது தொடர்பில் இலங்கையும் இந்தியாவும் தீவிரமாக ஆராயவுள்ளன. இலங்கைப் பிரதமரின் இந்தியப் பயணத்தின்போதே இது பற்றி பேச்சு நடத்தப்படவுள்ளது என இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து அறியமுடிகிறது. பக்கம் 02.....

### சர்வதேச விசாரணையை வலியுறுத்த ஜெனிவாவுக்கு குழு

கொழும்பு, செப்.7
இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணையை வலியுறுத்தி அதற்கு வலுச்சேர்க்கும் வகையில் ஜெனிவாவில் பரப்புரைகளை முன்னெடுப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த குழுவொன்று அங்கு செல்லவுள்ளது என்று தெரியவருகின்றது. பக்கம் 02.....

## ஐ.நாவுக்குப் பதிலளிக்க தயாராகிறது இலங்கை

### இரு குழுக்கள் உருவாக்கம்

கொழும்பு, செப்.7
ஜெனிவாவில் ஐ.நா.மனித உரிமை ஆணையாளரால் சமர்ப்பிக்கப்படவுள்ள விசாரணை அறிக்கைக்கு பதிலளிப்பது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இலங்கை அரசு இரண்டு குழுக்களை அமைத்துள்ளது என்று கொழும்பு இராஜதந்திரிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.
ஐ.நா விசாரணை பக்கம் 02.....

## மகிந்த அணியை வீழ்த்துவதற்கு உதவியது 'றோ' அல்ல 'வைபரே'

### டில்லியில் சந்திரிகா வெளிச்சம்

புதுடில்லி, செப்.7
வைபர் தொலைபேசி அழைப்புகளின் மூலமே, மகிந்த ராஜபக்சவைத் தோற்கடிப்பதற்கான சக்திகளை ஒன்று திரட்டினேன் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.
புதுடில்லியில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய போதே பக்கம் 02.....



எதிரி தோற்றதைக் கொண்டு குறைத்து மதிப்பிடக் கூடாது - மைத்திரி

பக்கம் 22

## ஜெனிவா பறக்கவுள்ளனர் மங்களவும், விஜயதாசவும்

### இலங்கைக்கான ஆதரவை மேலும் வலுப்படுத்த

கொழும்பு, செப்.7
வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும், நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்சவும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபை அமர்வுகளில் பங்கேற்க உள்ளனர் என்று அரச தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.
ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையின் 30ஆவது அமர்வுகள் இந்த மாதம் ஆரம்பிக்கவுள்ளன. இந்த அமர்வுகளில் இலங்கையில் நடைபெற்ற போர் தொடர்பிலான விசாரணை அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட உள்ளது. இந்த அறிக்கை பக்கம் 02.....

இலங்கை வரலாற்றில் உண்மையான தேசிய அரசு

பக்கம் 16

### மைத்திரி வசித்த இல்லத்துக்கு குடியேறுகிறார் மகிந்த

கொழும்பு, செப்.7
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பயன்படுத்திய இல்லம், முன்னாள் ஜனாதிபதியான மகிந்த ராஜபக்சவுக்கான உத்தியோகபூர்வ இல்லமாக வழங்கப்பட்டுள்ளது.
குறித்த இல்லத்தில் திருத்த வேலைகள் சில இருப்பதால் மகிந்த ராஜபக்ச இன்னமும் அங்கு குடியேறவில்லை எனத் பக்கம் 02.....

## சீனாவின் ஆதரவால்தான் போரை முடிக்க முடிந்தது

### பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கூறுகின்றார்

கொழும்பு, செப்.7
தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நீடித்த போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு சீனா வழங்கிய ஆதரவை மறந்து விட முடியாது என்று முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.
இறுதிப் போரில் இலங்கை இராணுவத்திற்கு இந்தியா உதவியது என்று பக்கம் 02.....

## சர்வதேச விவகாரங்கள் தொடர்பில் ஐ.தே.கவும், சு.கவும் உடன்படிக்கை

### விரைவில் கைச்சாத்திடுவதற்கு ஏற்பாடு

கொழும்பு, செப்.7
இனப்பிரச்சினை, போர்க்குற்ற விசாரணை போன்ற சர்வதேச விவகாரங்கள் தொடர்பாக, தேசிய அரசில் இடம் பெற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் பொதுவான இணக்கப்பாடு ஒன்றை எட்டவுள்ளதுடன் இதுபற்றிய புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றும் செய்து கொள்ளப்படவுள்ளது என்று ஐ.தே.க வின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரம தெரிவித்துள்ளார்.
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலக விசாரணையின் அறிக்கைக்கு பக்கம் 02.....

## 28 தனியார் காணிகளின் சுவீகரிப்புக்கள் நிறுத்தம்

யாழ்ப்பாணம், செப். 7
யாழ்.குடாநாட்டில் காணி சுவீகரிப்புக்கு அடையாளப்படுத்தப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட 28 காணித் துண்டுகளின், சுவீகரிப்பு நடவடிக்கைகளை கைவிடுமாறு, காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் செயலாளரால், யாழ்.மாவட்ட காணி சுவீகரிப்பு அலுவலருக்கு கடந்த வாரம் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் குறித்த காணிகளில் இருந்து பாதுகாப்புத் தரப்பினர் எப்போது வெளியேறுவார்கள் என்பது தொடர்பில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.
யாழ்மாவட்டத்தில் 2013 ஆம் ஆண்டு பாதுகாப்புத் தரப்பினர் பக்கம் 02.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்றங்களில் ஈடுபட்டிருந்தால் ராஜபக்சக்களைத் தண்டிக்க வேண்டும்

*தனக்கு எதிரான குற்றச்சாட்டுக்கும் பதிலளிக்கத் தயார் என்கிறார் பொன்சேகா*

கொழும்பு, செப். 7

போர்க் குற்றச் செயல்களில் ஈடுபட்டிருந்தால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவையும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்சவையும் தண்டிக்க வேண்டியது அவசியமானது என பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியில் அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.அவர் தனது செவ்வியில் தெரிவித்துள்ளதாவது:-

நாம் இராணுவத் தளபதியாக கடமையாற்றிய காலம் வரையில் புலிகளின் போலிப் பிரிவு உருவாக்கப்படவில்லை. நான் ஓய்வு பெற்றதன் பின்னரே இவ்வாறான ஓர் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவோ, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்சவோ அல்லது படையதிகாரிகளோ போர்க் குற்றச் செயல்களில் ஈடுபட்டிருந்தால் அவர்களை தண்டிப்பதில் எவ்வித தவறும் கிடையாது.

மீண்டும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மகிந்த ராஜபக்சவுடன் இணைந்து கொள்ளப் போவதில்லை. மஹிந்த ராஜபக்ச ஓர் விசப்பாம்பு. தொடர்ந்தும் அவருடன் உறவுகளைப் பேண விரும்பவில்லை.'

உள்ளக விசாரணைப் பொறிமுறைமையை வரவேற்கின்றேன். குற்றச் செயல்கள் தொடர்பில் எமக்கு எதிராக குற்றம் சுமத்தி விசாரணை நடத்தினால் அதனை வரவேற்பேன். எமக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் குறித்து பதிலளிக்கத் தாயராக இருக்கின்றேன். குமரன் பத்மநாதனுக்கு எதிராக பயங்கரவாத குற்றச்சாட்டை சுமத்தி வழக்குத் தொடர முடியாத சட்ட மா அதிபரே பயங்கரவாதி.

பிரபாகரன் தற்கொலை செய்து கொண்டதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை. எறிகணை அல்லது வேறு மோட்டார் குண்டு ஒன்றின் இரும்புப் பகுதி தலையில் பட்டு உயிரிழந்திருக்க வேண்டும். அதன் காரணமாகவே அவரது கண்கள் மூடப்படவில்லை என சரத் பொன்சேகா மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற-வ)

# தேசிய பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல்

*அச்சம் வெளியிடுகின்றது தேசிய சுதந்திர முன்னணி*

கொழும்பு, செப்.7

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணிக் கட்சியான தேசிய சுதந்திர முன்னணி தேசிய பாதுகாப்பு நிலைமை குறித்துக் கவலை வெளியிட்டுள்ளது.

எதிர்க்கட்சி தலைவராக ஆர்.சம்பந்தன் நியமிக்கப்பட்டமை, ஓமந்தை பாதுகாப்பு சோதனைச்சாவடி நீக்கப்பட்டமை மற்றும் பல முன்னாள் புலி உறுப்பினர்கள் விடுதலை செய்யப்படவுள்ளமை போன்ற காரணங்களால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முஸம்மில் குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்கிய உறுப்பினர்களுக்கு நாடாளுமன்றில் முக்கிய பதவிகள் வழங்கப்படுகின்றன என்று அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அத்துடன் ஜனவரி அமைதி புரட்சிக்கு ஆதரித்த ரணில் விக்ரமசிங்க பிரதமராவதற்கும், ஆர்.சம்பந்தன் எதிர்கட்சி தலைவராக நியமிக்கப்பட்டமைக்கும் பிரதான எதிர் கட்சி கொறடாவாக அநுர குமார திஸாநாயக்க நியமிக்கப்பட்டமைக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆதரவு வழங்கியுள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

# எதிர்வரும் தேர்தல்களுக்காக புதிய எதிரணி உருவாக்கப்படும்

## விமல் வீரவன்ஸ கூறுகின்றார்

கொழும்பு, செப்.7 -

எதிர்வரும் தேர்தல்களில் போட்டியிடுவதற்காக புதிய எதிரணி ஒன்றை ஆரம்பிக்கப்படவுள்ளது என்று விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஏற்கனவே ஐந்து கட்சிகளுடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை சேர்ந்த எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்துள்ளவர்கள் இதில் இணைய தயாராக இருக்கின்றனர் என்றும் இருப்பினும், அவ்வாறு இணையும் சந்தர்ப்பத்தில் தமது ஆசனங்களை இழந்துவிடுவோம் என்ற பயத்தில் அவர்கள் உள்ளனர் என்றும் வீரவன்ஸ கூறியுள்ளார்.

அதேவேளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை சேர்ந்த சுமார் 40 உறுப்பினர்கள் தேசிய அரசுக்கு ஆதரவாக இல்லை எனவும், இவர்கள் எதிர்க்கட்சியில் சேரவிருப்பதாகவும் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டி சொய்சா கூறியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கான அனுமதியை சபாநாயகரிடமிருந்து விரைவில் பெற எதிர்பார்த்துள்ளதாகவும், எதிர்க்கட்சி தலைவர் யார் என்பதனை மிக இரகசியமாக வைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மத்திய செயற்குழு, தேசிய அரசுக்கு ஆதரவு அளிப்பதாக முடிவு எடுத்திருந்தது. ஆனால் அது சட்டவிரோதமானது. தேர்தல் விஞ்ஞாபனமே அங்கீகரிக்கப்பட்ட ஆவணம் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த எதிர்க்கட்சியின் அமைப்பு மற்றும் எண்ணிக்கை குறித்து பிரதி அமைச்சர்கள் மற்றும் ராஜாங்க அமைச்சர்களின் பதவிப் பிரமாணம் நிறைவடைந்த பின்னரே உறுதிப்படுத்திக் கொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், சிலர் சில நாள்களுக்கு முன்பு ஜனாதிபதியை சந்தித்து அமைச்சு பதவிகளை பெற்றுக்கொண்டனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

# எதிர்க்கட்சித் தலைவர் பதவியை சம்பந்தனுக்கு வழங்கியது தவறு

*விமர்சிக்கிறார் தயான் ஜயதிலக*

கொழும்பு, செப். 7

நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் பதவி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கு வழங்கப்பட்டமை தவறானது என்று முன்னாள் இராஜதந்திரி தயான் ஜயதிலக விமர்சித்துள்ளார்.

இது தொடர்பாக இவ்வார ஞாயிறு ரிவிர சிங்களப் பத்திரிகைக்கு அவர் பத்தியொன்றை எழுதியுள்ளார். அந்த பத்தியில் தயான் ஜயதிலக்க குறிப்பிட்டுள்ளதாவது:-

1977ஆம் ஆண்டு சுதந்திரக் கட்சியை விட கூடுதல் நாடாளுமன்ற உறுப்பினர்களை தமிழர் விடுதலைக் கூட்டணி பெற்றிருந்த காரணத்தினாலேயே அமிர் தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராக முடிந்தது. எனினும் அதன் மூலம் நாட்டுக்கு தீங்குதான் விளைந்தது.

ஆனால் தற்போது சுதந்திரக் கட்சிக்கு 95 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். பொதுமக்களின் எதிர்பார்ப்பு அவர்கள் பலம் வாய்ந்த எதிர்க்கட்சியாக செயல்பட வேண்டும் என்பதுதான். அதனை மீறி தேசிய அரசில் இணைந்து அமைச்சுப் பதவிகளை பெற்றுக் கொண்டது வாக்களித்த மக்களுக்கு செய்த முதலாவது துரோகமாகும்.

அதன் பின்னர் கூட தேசிய அரசுக்கு எதிரான ஐம்பதுக்கும் அதிகமான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். அந்த வகையில் பார்த்தாலும் கூட எதிர்க்கட்சித் தலைவர் பதவி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த ஒருவருக்கே வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

அரசின் பங்காளிக் கட்சிக்கு எதிர்க் கட்சித் தலைவர் பதவி வழங்க முடியாது என்ற வாதமும் இங்கு செல்லுபடியற்றது. ஏனெனில் கடந்த ஜனவரியில் நடைபெற்ற ஆட்சிமாற்றத்தின் பின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நல்லாட்சி அரசின் பங்காளியாக மாறியுள்ளது.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனியான நிர்வாக அலகு அல்லது சமஷ்டியை வலியுறுத்தி வரும் ஒரு கட்சியாகும். அந்த வகையில் நாட்டின் அரசியல் அமைப்பை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

அப்படிப்பட்ட ஒரு கட்சிக்கு எதிர்க் கட்சித் தலைவர் பதவி வழங்குவது ஜனநாயகத்தை கேலிக்கூத்தாக்கி விடும். அத்துடன் நாட்டின் இறையாண்மைக்கும் ஆபத்தை ஏற்படுத்தி விடும்.- என்று கூறியுள்ளார். (வ)

# வட்டு. மத்திய கல்லூரி கற்றல் செயற்பாடு இன்று வழமை போன்று

யாழ்ப்பாணம், செப்.7

யாழ்.வட்டுக் கோட்டை மத்திய கல்லூரியின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் இன்று முதல் வழமைபோல நடைபெறவுள்ளது என்றும் அனைத்து மாணவர்களையும் தவறாது கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் கலந்து கொள்ளுமாறு வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் அறிவித்துள்ளார். (ற-ரி5)

# பாராட்டு விழா

யாழ்ப்பாணம், செப்.7

யாழ்.தாவடி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலையின் பழைய மாணவரும் பேராசிரியருமான க.தேவராஜா 'யாழ்.விருது 2015' பெற்றமையை அடுத்து அவருக்கு பாடசாலை சமூகத்தால் இன்று பாராட்டு விழா நடத்தப்பட வுள்ளது. காலை 8.45 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் முன்னாள் அதிபர் நா.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக திரு,திருமதி தேவராஜா கலந்து கொள்ளவுள்ளனர். (ற-ரி5)

# இனவாத அமைப்புகளை தடை செய்ய அரசு முடிவு

*அமைச்சர் மனோ கணேசன் தகவல்*

லண்டன், செப். 7

இலங்கையில் இனவாதக் கருத்துக்களை கூறி அதன் அடிப்படையிலான செயற்பாடுகளை முன்னெடுக்கும் அமைப்புகளை தடை செய்ய அரசு தயங்காது என தேசியக் கலந்துரையாடல்களுக்கான அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இனவாத செயற்பாட்டை முன்னெடுக்கும் அமைப்புகளையும் அரசியல் கட்சிகளையும் இனமத பேதமின்றி தடை செய்ய அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தேசியக் கலந்துரையாடல்களுக் கான அமைச்சர் மனோ கணேசன் பிபிசிக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்தாவது:-

நாட்டின் புதிய அரசு, இனவாதம், அடிப்படைவாதம் மற்றும் தீவிர மதவாதத்தை எவ்வகையிலும் சகித்துக் கொள்ளாது.

தேசிய நல்லிணக்கத்துக்கான ஐக்கியத் தேசிய முன்னணியின் அரசில் அங்கம் வகிக்கும் ஜாதிக ஹெல உறுமைய கட்சி கூட கடந்த காலங்களில் வெளிப்படுத்திய கருத்துக்களிலிருந்து விடுபட்டு செயற்பட்டு வருவதை காணக் கூடியதாக உள்ளது.

எனினும், அரசின் செயற்பாடுகளுக்கு குந்தகம் ஏற்படுத்தும் நோக்கில் அரசுக்குள்ளேயும் வெளியேயும் யாராவது தீவிரவாத, இனவாதக் கருத்துக்களை வெளிப்படுத்தினால் அவர்களுக்கு தக்க பதில் அளிக்கப்படும் .

நாட்டில் தேசிய நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் நோக்கிலான அரசின் கொள்கைத் திட்டம் விரைவில் வெளியிடப்படும் எனவும் அமைச்சர் மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார். (ற-வ)

# நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், செப் .7

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி.கிழக்குப் பிரதேச சபையால் பொதுமக்கள் தொடர்பாடலுக்கான நடமாடும் சேவை நடத்தப்பட வுள்ளது.

இன்று திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் பி.ப. 3 மணிவரை இருபாலை கிழக்கு ஸ்ரீமுருகன் சனசமூக நிலையம், உரும்பிராய் ஞான வைரவர் சனசமூக நிலையம் என்பவற்றிலும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை சிவசக்தி சனசமூக நிலையம் மற்றும் அச்சுவேலி மாணிக்க இடைக்காடர் சனசமூக நிலையம் என்பவற்றிலும் குறித்த நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 9 ஆம் திகதி புதன்கிழமை புத்தூர் நிலாவரையில் சிரமதான நிகழ்வும், அன்றைய தினம் உரும்பிராய் உப அலுவலக நூலகத்தில் புத்தகக் கண்காட்சியும் நடைபெறவுள்ளதுடன், மறுநாள் 10 ஆம் திகதி வியாழக்கிழமை அச்சுவேலி உப அலுவலகத்தில் புத்தகக் கண்காட்சியும் அத்துடன் பாலர் வகுப்பு மாணவர்களுக்கான போட்டிகளும் நடத்தப்படவுள்ளன.

மேற்படி நடமாடும் சேவையில் ஆதனவரி, காணிப் பெயர்மாற்றம், கட்டட விண்ணப்பம், வியாபார உரிமம் மற்றும் பொதுமக்கள் பிரச்சினைகள் தொடர்பான விடயங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என வலி.கிழக்குப் பிரதேச சபையின் செயலாளர் நா.குமணன் தெரிவித்துள்ளார். (ற-ரி5)

# எதிர்வரும் நாள்களில் எரிபொருள்களின் விலை குறையலாம்

கொழும்பு, செப்.7

எதிர்வரும் நாள்களில் எரிபொருள் விலை மீண்டும் குறைவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுகின்றது என்று பெற்றோலிய மற்றும் பெற்றோலிய வாயு அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

கண்டி தலதா மாளிகையில் மத வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகவியலாளர்களை சந்தித்து கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை இதுவரையில் 50 அமெரிக்க டொலரால் குறைவடைந்துள்ளது. கடந்த 11 வருடங்களின் பின்னர் மசகு எண்ணெய் விலை வீழ்ச்சியடைந்துள்ளமை இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2014க்குரிய வேலைத் திட்டங்கள் ஓகஸ்ட் மாதத்துடன் முடிந்தன

## வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 7

வடக்கு மாகாண சபையின் 2014 ஆம் ஆண்டு நிதியாண்டுக்குரிய வேலைத் திட்டங்கள், கடந்த ஓகஸ்ட் மாதமே முழுமையாக முடிவுறுத்தப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். கடந்த மார்ச் மாதத்திற்கு முன்னர் செய்து முடிக்க திட்டமிடப்பட்டபோதும், ஓகஸ்ட் மாதமே அவற்றைச் செய்து முடிக்க முடிந்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் கடந்த அமர்வில், எதிர்கட்சித் தலைவர் சி.தவராசாவினால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே, முதலமைச்சர் இவ்வாறு குறிப் பிட்டார்.

2013 ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபையில், 2014 ஆம் நிதியாண்டுக்குரிய வரவு – செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. அதில் குறிக்கப்பட்ட வேலைத் திட்டங்கள், 2014 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் முடிவுறுத்த வேண்டும். இருப்பினும், 690.7 மில்லியன் ரூபாவுக்குரிய 128 வேலைத் திட்டங்கள் குறித்த திகதியில் முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை.

இந்தநிலையில், 2014 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி இடம்பெற்ற 21 ஆவது அமைச்சரவைக் கூட்டத்தில், இந்த ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் செய்து முடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

'குறித்த வேலைத் திட்டங்கள் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் முடிவுறுத்தப்பட்டதா? அவ்வாறு முடிவுறுத்தப்படவில்லை எனில், குறித்த திகதியின் பின்னர் மேற்படி வேலைகளைத் தொடர்வதற்கு அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டதா? அவ்வாறு அனுமதி பெறப்படவில்லையாயின் தொடர் வேலைகள் எவ்வாறு செயற்படுத்தப்பட்டன. குறித்த வேலைத் திட்டங்கள் இப்போது செய்து முடிக்கப்பட்டுள்ளதா?' போன்ற கேள்விகளை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா முன்வைத்திருந்தார்.

இதற்குப் பதிலளித்த முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்,

அமைச்சரவை கூட்ட முடிவின் படி முடிவுறுத்தப்படாத வேலைத் திட்டங்களுக்கான நிதி பொது வைப்புக் கணக்குக்கு மாற்றப்பட்டிருந்தது.

இவ் வேலைகளை இந்த வருடம் மார்ச் 31 ஆம் திகதிக்குப் பின் தொடர்வதற்கு அனுமதி பெறப்படவில்லை.

மேற்படி வேலைத் திட்டங்கள் யாவும் 2014 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட போதும் தவிர்க்க முடியாத சில காரணங்களினால் குறித்த நிதியாண்டுக்குள் முடிவுறுத்தப்படாமையை கருத்தில் கொண்டு மாகாண விதி 162 இற்கு அமைவாகவும், இலங்கை அரச சட்டத்தின் பிரகாரம் 215 இற்கு அமைவாகவும் பொது வைப்புக் கணக்குக்கு மாற்றப்படுவதனால், உரிய திணைக்களங்கள் விரைவாகவும் செய்து முடிக்க வேண்டும் என்ற காரணத்தினால், மார்ச் 31 ஆம் திகதிக்குள் முடிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது

பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டு செய்யப்படும் வேலைத் திட்டங்கள் அடுத்த நிதியாண்டில் குறிப்பிடலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி வேலைகளை மார்ச் 31 ஆம் திகதியின் பின்னர் நிறைவேற்ற அமைச்சரவை அனுமதி தேவை இல்லை.

கடந்த ஓகஸ்ட் 31 ஆம் திகதி அறிக்கையின் படி வேலைத் திட்டங்கள் முற்றுமுழுதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. கணக்கீட்டு புதிய வேலைத் திட்டங்களின் படி பொது வைப்புக் கணக்கு, மாற்றப்பட்ட காலப் பகுதியில், 2014 ஆம் ஆண்டுக்கான டிசெம்பர் மாதத்திற்குரிய செலவினமாக கணக்கு வைக்கப்பட்டு இணையத் தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது – என்று தெரிவித்தார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த, எதிர்க்கட்சித் தலைவர், மார்ச் 31 ஆம் திகதி முடிவடையாத வேலைத் திட்டம் தொடர் வேலைத் திட்டங்களாக கணக்கில் வைக்கப்பட்டிருந்தாலும், அதன் செலவினங்கள் 2014 கணக்கிலேயே செலவினங்களாகப் பதியப்பட்டிருக்கின்றதாகவும் குறிப்பிட்டுள்ளீர்கள். அது கணக்கீட்டுத் தவறு. பௌதிக ரீதியில் முடிவடையாத வேலையை, பௌதிக ரீதியாக முடிவடைந்தது என்று கணக்கில் காட்டுவது தவறு. கட்டடம் கட்டப்படாமல், அதை ஒரு திணைக்களத்துக்கு கொடுத்து விட்டு கட்டடம் கட்டப்பட்டதாக கணக்கில் காட்டு வது தவறு.

மேலும் அமைச்சரவைப் பத்திரத்தில், குறித்த வேலைகளை தொடர்வதற்கு நிர்வாக ஏற்பாடு சொல்லப்பட்டுள்ளது. அதை மீண்டும் நீடிக்க நிர்வாக ஏற்பாடு செய்திருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

மீண்டும் கருத்து தெரிவித்த முதலமைச்சர், தவிர்க்க முடியாத காரணங்களினால் குறித்த நிதியாண்டுக்குள் முடிவுறுத்தப்படாத வேலைக்குரிய நிதியை பொது வைப்புக்கு மாற்றம் செய்ய சட்டத்தில் ஏற்பாடு உண்டு. இருப்பினும், நீங்கள் குறிப்பிடும் விடயங்களை கவனத்தில் எடுக்கின்றோம் – என்றார். (ந–5)

# வடக்கு வேலையற்ற பட்டதாரிகள் இன்று கவனவீர்ப்புப் போராட்டம்

யாழ்ப்பாணம், செப்.7

வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகளுக்கு விரைவில் அரச வேலைவாய்ப்பை வழங்கக் கோரி இன்று கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது. மு.ப 10 மணியளவில் யாழ்.மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக இந்த கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது என்று வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சமூகத்தின் தலைவர் இ.பிரதாபன் தெரிவித்துள்ளார்.

இந்த போராட்டத்திற்கு வடக்கு மாகாணத்திலுள்ள வேலையில்லா உள்வாரி, வெளிவாரி, தேசிய உயர் தொழில்நுட்ப பட்டதாரிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

அரச வேலைவாய்பை வழங்கக் கோரி கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் வடமாகாண வேலையற்ற பட்டதாரிகளால் பல தடவைகள் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் மக்கள் பிரதிநிதிகளிடம் மனுக்கள் கையளிக்கப்பட்டன. அது தொடர்பில் இதுவரை சாதகமான பதில் எதுவும் கிடைக்கப்பெறவில்லை.

இந்த நிலையில் இறுதியாக கடந்த சித்திரை மாதம் யாழ். மாவட்ட செயலகத்துக்கு முன்பாக தொடர்ச்சியாக இரவு பகலாக இரண்டு நாள்கள் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் வடமாகாண வேலையற்ற பட்டதாரிகளால் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது வடமாகாண அமைச்சுக்களின் கீழ் வேலையற்ற பட்டதாரிகளை சேவையில் இணைத்துக் கொள்வதற்காக புதிதாக ஆளணி வெற்றிடங்கள் உருவாக்கப்படவுள்ளது என்றும் அதற்கு ஒரு மாதகால அவகாசம் தேவை எனவும் மேலும் குறித்த பிரச்சினை தொடர்பில் மத்திய அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று தீர்வு பெற்றுத்தருவதாகவும் வடமாகாண சபை அமைச்சர்கள் தெரிவித்தனர். இதனையடுத்து இரண்டு நாள் ஆர்ப்பாட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டது.

இதற்கமைய ஆயிரத்து 478 புதிய ஆளணி வெற்றிடங்கள் வடமாகாண அமைச்சரவையின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது என்றும் அதற்கான அனுமதியை பெற முகாமைத்துவ சேவைப் பிரிவுக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் மற்றும் வடமாகாணத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகளின் விவரத்தை உத்தியோகபூர்வமாக வடமாகாண சபையில் பதிவுசெய்ய நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் குறித்த வடமாகாண அமைச்சர்களால் எமக்குத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கடந்த அரசால் தேசிய ரீதியில் 2012 மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பட்டம் பெற்ற 5ஆயிரத்து 500 பட்டதாரிகளை அரசவேலை வாய்ப்பில் உள்ளீர்ப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அத்தகைய அறிவுறுத்தல்களின் பிரகாரம் எதுவித வேலை வாய்ப்பும் வழங்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறான நிலையில் புதிய அரசு தற்போது ஆட்சி அமைத்துள்ளது. இந்நிலையில் தேசிய ரீதியில் காணப்படும் வேலையில்லாப் பட்டதாரிகளின் பிரச்சினைகளை புதிய அரசு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அத்துடன் வடமாகாண அமைச்சரவையின் கீழ் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஆளணி வெற்றிடத்திற்கான அனுமதியை உடனடியாக வழங்கி வடமாகாண வேலையற்ற பட்டதாரிகளை அரச வேலை வாய்ப்பில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும் என் பதை வலியுறுத்தியே எமது போராட்டம் அமைதியான முறையில்முன்னெடுக்கப்படவுள்ளது. – என்றார். (ந–10)

# கத்திக் குத்தில் இளைஞன் காயம்

கரணவாய், செப்.7

இனம் தெரியாத நபர்களின் கத்திக் குத்துக்கு இலக்கான நிலையில் இளைஞர் ஒருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலயில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 11 மணிக்கு வல்லைப் புறாப்பொறுக்கிப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் இமையாணன் கலைமகள் வீதியைச் சேர்ந்த தங்கவடிவேல் ரதீஸ்வரன்(வயது–30) என்பவரே இனந்தெரியாத நபர்களின் கத்திக் குத்துக்கு இலக்காகி காலின் தொடைப்பகுதியிலும் கையிலும் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு குறித்த இளைஞர் தொண்டமானாற்றிலுள்ள தமது நண்பர்களுடன் உரையாடி விட்டு வல்லை வெளியினூடாக வந்து கொண்டிருந்த போது வல்லை மண்டான் சந்திக்கும் புறாப் பொறுக்கிப்பகுதிக்கும் இடைப் பட்ட பகுதியில் வைத்து வழிமறித்த 4 பேர் கொண்ட குழு அவரை சரமாரியாக கொட்டன்கள், சைக்கிள்செயின் என்பவற்றால் கடுமையாகத் தாக்கியதுடன் மறைத்து வைத்திருந்த கத்தியால் குத்தியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதை அடுத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந–108)

# 25 ஆண்டுகள் கையகப்படுத்தியிருந்த வீட்டை ஒப்படைத்தது இராணுவம்

யாழ்ப்பாணம், செப்.7

25 வருட காலமாக கடற்படையினரின் கட்டுப்பாட்டிலிருந்த வீடு ஒன்று கீரிமலையில் கடந்த வாரம் விடுவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் அதனுடன் இணைந்து கைப்பற்றப்பட்டிருந்த எஞ்சிய எட்டு வீடுகள் கடற்படையினரின் வசமே தொடர்ந்தும் உள்ளது.

1990 ஆம் ஆண்டு இடப்பெயர்வைத் தொடர்ந்து, வலி.வடக்கில் ஏற்படுத்தப்பட்ட உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக, இளவாலை வடமேற்கு கிராம அலுவலர் பிரிவில் 9 வீடுகள் கடற்படையினரின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டிருந்தது. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து கீரிமலையில் இந்திய வீடு ஒன்றைக் கையளித்திருந்தார். அந்த வீட்டுக்கு முன்பாக – கடற் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த வீடே தற்போது உரிமையாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை, கடற்படையினரால் உத்தியோகபூர்வமாக அந்த வீட்டின் உரிமையாளரிடம் வீடு கையளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எஞ்சிய எட்டு வீடுகளையும் கடற்படையினரிடமிருந்து மீட்டுத் தருமாறு அந்த வீடுகளின் உரிமையாளர்கள், பிரதேச செயலாளரிடம் மனுக் கையளித்துள்ளனர். (ந–5)

# சைக்கிள் பாதுகாப்புக்கு தினம் ஒரு கட்டணம்

யாழ்ப்பாணம், செப்.7

நல்லூர் ஆலய திருவிழாவை முன்னிட்டு சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில் தினம் ஒரு கட்டணம் அறவிடப்படுகின்றது என்று பக்தர்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் மாநகர சபையினர் இதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை எனவும் அவர்கள் விசனம் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பொது[illegible] கையில்,

நல்லூர் ஆலய [illegible] முன்னிட்டு ஆலய சூழலில் அமைக்கப்பட்டிருக்கும் வாகனப் பாதுகாப்பு நிலையங்களில் ஆரம்பம் முதல் மோட்டார் சைக்கிள்களுக்கு 10ரூபாவும் சைக்கிள்களுக்கு 5 ரூபாவும் அறவிடப்பட்டது. 15ஆம் திருவிழாவில் இருந்து இந்தத் தொகையானது அதிகரிக்கப்பட்டு மோட்டார் சைக்கிள்களுக்கு 20 ரூபாவும் சைக்கிள்களுக்கு 10 ரூபாவும் அறவிடப்படுகின்றது. எனவே இவ்வாறு [illegible] மாநகர சபையினர் உடன் தலையிட்டு நிறுத்த வேண்டும் என்றனர். (ந–10,101)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டவிரோத கருங்கல் அகழ்வு

## நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை



முல்லைத்தீவு, செப்.7

முல்லைத்தீவு மாவட்டத்தில் பல பகுதிகளிலும் சட்ட விரோதமான முறையில் கருங்கல் அகழும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று குற்றஞ்சாட்டப் படுகின்றது.

துணுக்காய் பிரதேசம் ஒட்டுசுட்டான் பிரதேசத்தின் தட்டயமலை, முத்தையன்கட்டு, வாவெட்டிமலை 14ஆம் கட்டை உள்ளிட்ட பகுதிகளிலேயே இந்தச் சட்டவிரோத நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

சூழல் பாதுகாப்புச் சட்டங்களையும், விதிமுறைகளையும் மீறி சட்ட விரோதமாக கருங்கல் அகழ்வு நடைபெற்று வருகின்றது என்றும் நிர்ணயிக்கப்பட்ட ஆழத்தை விட கூடுதலான ஆழத்துக்கு கருங்கல் தோண்டப்படுவதால் சூழ உள்ள பிரதேசங்களில் நிலத்தடி நீர் வற்றிப் போகின்றது என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. அத்துடன் வெடி வைத்து தகர்க்கப்படும் அதிர்வுகளால் கட்டடங்களில் விரிசல் ஏற்படுகின்றது என்றும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

முத்தையன்கட்டு குளத்தை அண்டிய பகுதியில் நடைபெறும் கருங்கல் அகழ்வால் குளத்தின் நீர்தாங்கும் கற்பாறையில் சேதம் ஏற்படும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்றும் முல்லைத்தீவில் மேற்கொள்ளப் பட்டுவரும் முறையற்ற கருங்கல் அகழ்வைத் தடுப்பதற்கு அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் முன்வராதமை கவலை தருகின்றது என்றும் பொதுமக்கள் தெரிவித்தனர். (ந–402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவுக்கு சிறப்புரிமைகள் வழங்கப்படுவது சரியானதா?

## உருவெடுக்கின்றது சர்ச்சை

கொழும்பு, செப்.7

நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகியுள்ள மகிந்த ராஜபக்சவுக்கு முன்னாள் ஜனாதிபதிக்கான சலுகைகள் வழங்கப்படுவது சட்ட ரீதியானதா எனக் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ஒருவருக்கு வசதிகளை வழங்க வேண்டியது அவசியமானதாகும். எனினும், அவர் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகியுள்ள விடயம் சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு அரசால் வழங்கப்படவேண்டிய உத்தி யோகபூர்வ இல்லம் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டது என்று அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு – 07, விஜயராம மாவத்தையில் அமைந்துள்ள வீடு ஒன்றே இவ்வாறு வழங்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னதாக இந்த வீட்டை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பயன்படுத்தியிருந்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கொழும்பு பிரிஜட் வீதியில் அமைந்துள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் குடியேறியதை அடுத்து, இந்த இல்லம் மகிந்த ராஜபக்சவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை வரலாற்றில் ஜனாதிபதிப் பதவியை வகித்தவர்கள் அப்பதவியிலிருந்து விலகிய பின்னர் பொதுத்தேர்தலில் போட்டியிடவில்லை. எனினும், இரு தடவைகள் ஜனாதிபதிப் பதவியை வகித்த மஹிந்த ராஜபக்ஷ பொதுத்தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.

எனவே, அவருக்கு முன்னாள் ஜனாதிபதிக்குரிய சலுகைகளை வழங்குவது சிக்கலாகியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.(ற–சி)

# நல்லூர் கந்தன் பெருந்திருவிழா சிறப்புற நடப்பதற்கு ஒத்துழைக்குக

## இந்து சமயப் பேரவை வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செப்.7

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி கோயில் பெருந் திருவிழா இனிவரும் நாள்களில் பக்தி பூர்வமாக இடம்பெறவுள்ளன. திருவிழாக்கள் சிறப்புற இடம்பெற சகல தரப்பினரும் தங்களது பரிபூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று இந்து சமயப் பேரவையின் செயலாளர் சக்திகிரீவன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

வரலாற்றுப் புகழ்மிக்க நல்லூர் கந்தசுவாமி கோயில் பெருந்திருவிழா மிகுந்த பக்தி பூர்வமாக நடந்தேறி வருகின்றது, எனினும் கடந்த காலங்களில் நிகழ்ந்த சம்பவங்களை இன்னொருமுறை மீட்டுக் கொள்வது நம்மவர் அனைவருக்கும் நன்மை பயக்கும் என்பது தெளிவு. பக்தி பூர்வமான சூழலிலும், கடந்த காலங்களில் சில விசமிகள் இந்தச் சூழ்நிலையைத் திட்டமிட்டு குழப்பி வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. குறிப்பாக முருகப்பெருமான் தீர்த்தோற்சவத்துக்கு தீர்த்தக்கேணிக்கு எழுந்தருள முடியாத அளவுக்கு சில விசமிகள் அடாவடித்தனமாக நடந்து கொள்வதும், தீர்த்தக்கேணியில் இறங்கி தீர்த்தக்கேணியிலுள்ள தீர்த்தத்தை பொலித்தீன் பைகளில் அள்ளி ஏனையோரை அசௌகரியப்படுத்தும் வகையில் அவர்கள் மீது வீசி எறிவதும், மேலும் பல விரும்பத்தகாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதும் தொடர்ந்து கொண்டே இருந்தது. இதனால் 2013 ஆம் ஆண்டில் இருந்து ஆலய வளாகத்தினுள் பொலிஸார் வரவழைக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

நல்லூர் முருகன் ஆலயத்தினுள் ஆண்கள் மேலங்கியுடன் செல்வது தடைசெய்யப்பட்டுள்ளமை யாவரும் அறிந்ததே. எத்தகைய உயர் அந்தஸ்து பெற்றவராயினும் மேலங்கியுடன் செல்லக்கூடாது என்பது மிக இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. தீர்த்தோற்சவத்தில் கோமாளித்தனம் புரியும் சில இளைஞர்களின் அடாவடித்தனத்தால் அதை அடங்குவதற்காக பொலிஸார் மேலங்கியின்றி கடமையில் ஈடுபட்டு வருவது வரவேற்புக்குரியதாகும்.

இந்த நிலை தொடராதிருக்க வேண்டுமாயின் கோமாளித்தனம் புரியும் இளைஞர்களை பெற்றோர்கள் புத்திமதி கூறித்திருத்த வேண்டியது அவசியமாகும். பாதுகாப்புக்காக செயற்படுபவர்கள் அடித்தார்கள், தங்களைப் பிடித்தார்கள் என்று கூறுவதை நிறுத்தி தத்தமது ஒழுக்கத்தை தாமே உறுதி செய்து கொள்ள வேண்டும்.

இது இவ்வாறிருக்க சில சமூக ஆர்வலர்கள் இந்தச் சம்பவம் தொடர்பாக மேற்கொண்ட ஆய்வில் இளைஞர்களின் கோமாளித்தனத்தின் பின்புலத்தில் சில மாற்றுச் சமயக்குழுக்களின் ஆதரவு இருப்பதாக அறிய வந்துள்ளது. ஆகையால் தயவு செய்து உற்சவ காலங்களில் இடையூறு விளைவிப்பவர்களும், இடையூறு விளைவிப்பதற்கு ஆதரவு வழங்குபவர்களும் இந்து மத வழிபாட்டுக்கு எதுவித தடைகளையும் ஏற்படுத்தாது செயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றோம். – என்றுள்ளது. (ற–ரி2)

# கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

கொழும்பு, செப்.7

புத்தளம் மாவட்டத்தின் முந்தல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மதுரங்குளி–முக்குத் தொடவாய்ப் பகுதியில் பெரியளவில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த இடம் ஒன்றை முந்தல் பொலிஸார் நேற்றுமுன்தினம் மாலை சுற்றி வளைத்து அங்கு இருந்து பல இலட்சம் ரூபா பெறுமதியான கசிப்பு மற்றும் பொருள்களை கைப்பற்றியுள்ளதாக தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து கசிப்பு உற்பத்தி செய்யப்பட்டு வந்த இடத்தை சுற்றி வளைத்த போது அங்கிருந்து 496 போத்தல் கசிப்பு மற்றும் 75 ஆயி ரத்து 304 கிராம் கோடா மீட்கப்பட்டது என்றும் கசிப்பு உற்பத்தி செய் வதற்கான பயன்படுத்தப்பட்ட காஸ் அடுப்பு, காஸ் சிலிண்டர் வயர்கள் என்பனவும் கைப்பற்றப் பட்டன என்று பொலிஸார் தெரி வித்தனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை கைது செய்வதற்கான நடவடிக்கையில் முந்தல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)



வவுனியா வேப்பங்குளம் பட்டக்காட்டுப் பகுதியில் பெரும் எண்ணிக்கையான தூக்கணாங்குருவிக் கூடுகளைக் காணமுடிகின்றது. அந்த அழகிய காட்சி கண்களுக்கு விருந்தாக அமைந்துள்ளது. (ற–402)

# கையெழுத்து வேட்டை திருகோணமலையில்

சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறைக்கான தமிழர் செயற்பாட்டுக் குழுவின் கையெழுத்து திருகோணமலையில் இன்று நடைபெறவுள்ளது. பி.ப 3 மணிக்கு திருகோணமலை நகரில் சிவன்கோவில் முன்பாக நடைபெறும் இந்த நிகழ்வில் திருகோணமலை மறைமாவட்ட முன்னாள் போராயர் வணக்கத்திற்குரிய கிங்ஸ்லி சுவாம்பிள்ளை கலந்து கொள்ளவுள்ளார். நடைபெறவுள்ள இந்தப் போராட்டத்தில் இலங்கை அரசு தமிழ் மக்கள் மீது புரிந்த சர்வதேச மனிதாபிமான சட்டமீறல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் முழுமையான சர்வதேச குற்றவியல் பொறிமுறை ஒன்றின் ஊடாகவே விசாரணை நடத்தப்பட வேண் டும், எந்த வடிவிலானதொரு உள்ளக பொறிமுறை மீதும் எமக்கு நம்பிக்கை இல்லை போன்ற விட யங்கள் வலியுறுத்தப்படவுள்ளன. யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டம் இன்று முதல் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இடம்பெறவுள்ளன. (ற–10)

# பாம்புக் கடிக்கு இலக்காகி 4 பேர் வைத்தியசாலையில்

திருகோணமலை, செப்.7

பாம்புக் கடிக்கு இலக்கான நான்கு பேர் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

நேற்றுமுன்தினம் மாலை முதல் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை வரை நான்கு பேர் பாம்புக் கடிக்கு இலக்காகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

கல்கடவெல–கோ மரங்கடவெல பகுதியைச் சேர்ந்த சிவில் பாதுகாப்பு உத்தியோகஸ்தர் எஸ்.மஹிந்த பால (வயது 48), நிலாவெளியைச் சேர்ந்த என்.பைரூஸ் கான் (வயது 27), கிளிவெட்டி பகுதியைச் சேர்ந்த சரோஜா (வயது 39) மற்றும் கந்தளாய் பகுதியைச் சேர்ந்த 11 வயதுச் சிறுவனுமே பாம்புக் கடிக்குள்ளாகியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)



வவுனியா மீள்குடியேற்ற கிராமமான ஈஸ்வரிபுரத்தில் நான்கு கால்களுடன் கோழிக் குஞ்சு ஒன்று பொரித்துள்ளது. நியூட்டன் என்பவரது வீட்டிலேயே இந்த அதிசயக் கோழிக் குஞ்சு பொரித்துள்ளது. இந்த அதிசயக் கோழிக்குஞ்சை பெருமளவான மக்கள் பார்வையிட்டுச் செல்கின்றனர். (ற)

# 2 அடி உயர சிவலிங்கம் வளலாயில் கண்டெடுப்பு

அச்சுவேலி, செப். 7

வளலாய் மீள் குடியேற்றப் பகுதியில் பாதுகாப்புத் தரப்பினரால் அமைக்கப்பட்டிருந்த மண் அரணை மட்டப்படுத்தும்போது புராதனமான சிவலிங்க சிலை ஒன்று கண்டெடுக்கப்பட்டது. இரண்டடி உயரமானது ஒரே கருங்கல்லில் உருவாக் கப்பட்டுள்ளது. நாகம் சுற்றிய நிலையில் உள்ள சிவலிங்கம் ஆவுடையாடும் லிங்கமும் என வேறுபடுத்தப்படாமல் ஒன்றாக உருவாக்கப்பட்டுள்ளது.

தொன்மையானது எனக் கருதப்படும் சிவலிங்கம் வளலாய் பெரிய நாகதம்பிரான் கோயிலில் ஆலமரத்தின் கீழ் பிரதிஷ்டை செய்யப்பட்டு பூசை வழிபாடு நடைபெறுகின்றது. சிவலிங்கத்தை பெரிய நாகதம்பிரான் ஆலய ஆலமரத்தின் கீழ் பிரதிஷ்டை செய்யும் வைபவம் கடந்த மாதம் 28 ஆம் திகதி ஆவணி திருவோணத்தில் நடைபெற்றது.

1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இராணுவத்தினர் பாதுகாப்பு அரண் அமைக்கும்போது மக்கள் குடியிருப்புப் பகுதியில் இருந்த சிவலிங்கத்தையும் மண்ணோடு அள்ளிக் கொண்டு வந்து பாதுகாப்பு அரணில் புதைத்திருக்கலாம் எனக் கூறப்படுகின்றது. (ற–11)

# காணாமற்போன 158 பேரை நினைவு கூர்ந்து பிரார்த்தனை

வந்தாறுமூலை, கிழக்கு பல்கலைக் கழக அகதி முகாமில் தஞ்சமடைந்திருந்த வேளையில் இராணுவச் சுற்றிவளைப்பின் பின்னர் காணாமற்போனதாகக் கூறப்படும் 158 தமிழர்களின் 25ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு, பூசை வழிபாடுகளுடன் நேற்று ஞாயிற்றுக்கிழமை உறவினர்களினால் நினைவுகூரப்பட்டது.

1990ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 5ஆம் திகதி கிழக்கு பல்கலைக் கழகத்தில் பாதுகாப்பு நிமித்தம் தஞ்சமடைந்திருந்தபோது, சுற்றி வளைப்புச் செய்து விசாரணைக்காக பஸ் வண்டிகளில் அழைத்துச் செல்லப்பட்ட 158 பேரை நினைவு கூர்ந்து உறவினர்களினால் வீடுகளிலும் கோவில்களிலும் பிரார்த்தனைகள் முன்னெடுக்கப்பட்டன.

ஏறாவூர் 4ஆம் குறிச்சி வரசித்தி விநாயகர் கோவிலிலும் இவர்களை நினைவுகூர்ந்து பூஜை வழிபாடுகள் நடைபெற்றது. இதன்போது, கோவில் வளவில் காணாமற்போனோரின் நினைவாக தென்னைமரக்கன்றுகள் நடப்பட்டன. இந்த நிகழ்வில் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் கலந்துகொண்டனர்.

1990ஆம் ஆண்டு செப்டெம்பர் 5ஆம் திகதி கிழக்கு பல்கலைக் கழகத்தில் அகதி முகாமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த அகதி முகாமில் மட்டக்களப்பு மாவட்டத்தை சேர்ந்த சுமார் 45 ஆயிரம் தமிழர்கள் தஞ்சமடைந்திருந்தனர் என்று அந்நேரம் அந்த முகாமை நிர்வகித்த பல்கலைக்கழக அதிகாரிகள் தெரிவித்தனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சித் தலைவர் தெரிவில் சபாநாயகர் மீது தவறில்லை

## உதய கம்மன்பில தெரிவிப்பு



கொழும்பு, செப்.7
எதிர்க்கட்சித் தலைவர் நியமனம் தொடர்பில் சபாநாயகர் கரு ஜயசூரிய மீது எந்தத் தவறும் இல்லை என பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை பெற்றுக்கொள்ளும் எதிர்பார்ப்பு இல்லை என முன்னணியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனையின் பிரகாரம் பொதுச் செயலாளர் விஸ்வ வர்ணபால, சபாநாயகரிடம் கடிதம் ஒன்றைக் கையளித்துள்ளார் என்றும் கம்மன்பில குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களின் அனுமதியைப் பெறாமல் அந்தக் கடிதம் வழங்கப்பட்டிருந்தது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிச் செயலாளரின் கடிதத்தை அடிப்படையாகக் கொண்டு நாடாளுமன்றத்தில் அடுத்த பெரிய கட்சியாக இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்க சபாநாயகர் தீர்மானித்தார் என்றும் கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இதனால், எதிர்க்கட்சித் தலைவர் தெரிவு தொடர்பில் சபாநாயகர் மீது எந்தத் தவறும் இல்லை என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ற)

# கட்சியின் முடிவின்படியே அமைச்சுப் பதவியேற்றேன்

## தயாசிறி ஜெயசேகர தெரிவிப்பு

கொழும்பு, செப்.7
சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்தியக் குழுவின் தீர்மானத்தின்படியே தேசிய அரசில் அமைச்சுப் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன் என்று தயாசிறி ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

பொதுத்தேர்தல் முடிவுகளின்படி எந்தக் கட்சியும் தனித்து அரசு அமைக்க முடியாது. இந்தநிலையிலேயே சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் இரண்டு வருட இணக்கத்துடன் தேசிய அரசு அமைக்கப்பட்டது என்று அவர் கொழும்பின்ஊடகம்ஒன்றுக்குதெரிவித்துள்ளார்.

தேசிய அரசில் தாம் இணையப்போவதில்லை என்று சில ஊடகங்கள், பொய்யான தகவல்களை வெளியிட்டன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆயினும் தாம் ஒருபோதும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணையப்போவதில்லை என்றும் தயாசிறி குறிப்பிட்டுள்ளார். (ற)

# ஐ.நாவுக்கு எதிராக அமரசேகர வழக்கு!

கொழும்பு, செப்.7
ஐக்கிய நாடுகள் சபைக்கு எதிராக வழக்குத் தொடர உள்ளதாக தேசப்பற்றுடைய தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமர சேகர தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படும் போர்க்குற்றச் செயல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையினால் மேற் கொள்ளப்பட்ட விசாரணைகள் சட்டவிரோதமானவை. இந்த விசாரணை அறிக்கையை இரத்துச் செய்யுமாறு கோரி வழக்குத் தொடரப்பட உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விசாரணை அறிக்கையை இரத்துச் செய்யுமாறு கோரி இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் அமைப்பின் பிரதிநிதி சுபீ நெண்டிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்றும் – ஏற்கனவே இது குறித்து நெண்டிக்கு நிபந்தனைக் கடிதமொன்றை குணதாச அமரசேகர அனுப்பி வைத்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. சட்டத்தரணி கபில கமகே ஊடாக இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் பான் கீ – மூன் மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின்ஆணையாளர்சயிட்அல்ஹுசெய்ன் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப் பட் டுள்ளன.

2012ஆம் ஆண்டு முதல் இலங்கை தொடர்பில் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் ஒரு தலைப்பட்சமானவை. பதிலளிப்பதற்கான சந்தர்ப்பத்தை இலங்கைக்கு வழங்கவில்லை.

இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட விதம் ஐக்கிய நாடுகள் பிரகடனங்களுக்கும் புறம்பானது எனவும் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

இந்த பிழையை ஒப்புக் கொண்டு விசாரணை அறிக்கையை இரத்துச் செய்து மன்னிப்பு கோராவிட்டால் வழக்குத் தொடர நேரிடும் என்று குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார் என்று கொழும்பு வார இறுதிப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ற)

# இனவாதத்துக்கு இனி நாட்டில் இடமில்லை

## அமைச்சர் மனோ

கொழும்பு, செப்.7
நாட்டுக்குள் மீண்டும் எந்தச் சந்தர்ப்பத்திலும் இனவாதத்துக்கு இடமில்லை என்று தெரிவித்துள்ளார் தேசிய கலந்துரையாடல்கள் தொடர்பான அமைச்சர் மனோ கணேசன்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது நல்லாட்சி நடைபெற்று வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரான மனோ கணேசன், கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணியின் கீழ் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டு தெரிவு செய்யப்பட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக மனோ சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். (ற)

# கூட்டு அரசு அமைப்பதில் உடன்பாடு கிடையாது

## அமைச்சர் தலதா அதுகோரல தெரிவிப்பு



கொழும்பு, செப்.7
கூட்டு அரசில் தமக்கு உடன்பாடு கிடையாது என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அதுகோரல தெரிவித்துள்ளார்.

சிங்கள வார இறுதிப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எமது பிரதமர் அளித்த வாக்குறுதி காரணமாக நாம் கூட்டு அரசுக்கு சம்மதம் தெரிவித்தோம்.


அரசியல் ரீதியான விமர்சனங்கள் முரண்பாடுகள் காணப்பட்டாலும், எதிர்க்கட்சியின் எவருடனும் தனிப்பட்ட ரீதியான குரோதமோ முரண்பாடுகளோ கிடையாது.

அரசியல் என்பது சண்டை பிடித்துக் கொள்ள வேண்டிய இட மில்லை என்பதே எனது கருத்தாகும்.

எவருக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் இருந்தாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பா? ஐக்கிய தேசியக் கட்சியா? எனத் தராதரம் பாராது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

நல்லாட்சியில் நாம் இதனையே எதிர்பார்க்கின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)



# 20 ஆம் திருவிழா

## வள்ளியின் மணவாளன்

தெய் வானையின் மணவாளனே
தேவர் குலம் காத்தவனே
நல்லையில் வாழும் குமரனே
நல்லதை அருள்வாய் வடிவேலா

வள்ளியினை களவாய் புணர்ந்தவனே
வல்லதமிழின் மெய்பொருளே
வாசம் வீசும் முகத்தவனே
வேல்கொண்டு வினை தீர்ப்பாய்

மாம்பழக் கதைக்காய்
ஆண்டியின் கோலமுற்றாய்
ஔவையின் பாட்டிலே
உள்ளத்தை பறிகொடுத்தாய்

சுவாமியறையில் காக்கும்
தெய்வமானாய் வேல்கொண்டு
ஓம் நாமத்தினுள்
ஒளிர்ந்து கொண்டாய்

*வே.தரணிகா,*
*மருதங்கேணி*

## தமிழர் பெருமை காத்திடுவாய்

நல்லூரின் நாயகனே
நன்மைகளைத் தருபவனே
எல்லோரும் போற்றிடும்
பல்துறை வித்தகனே

அடியார் குறைகளை
அன்பினால் நோக்கியே
கடிதென நீக்கிடுவாய்
கன்மனம் கரைந்திடவே

முத்தமிழின் நாயகனே
செந்தமிழின் காவலனே
முத்தாக நீயிருந்து
நம்தமிழைக் காத்திடுவாய்

தமிழோடு விளையாடி
தமிழினத்தை உயர்த்தியவனே
தமிழர்தம் பெருமைதனைத்
தரணியிலே காத்திடுவாய்

*திருமதி சி.கிருஷ்ணவேணி,*
*வயாவிளான்.*

## வரங்கள் ஈர்ந்திடுவாய்

நல்லை நகர் மீதிலமர்
எல்லையற்ற கந்தா!
தொல்லைகளை நீக்கியருள்
சோதிமிக்க நாதா!
சொல்லைக் கவியாக்கி
துதிபாடும் பக்தரிடை
இல்லை எனாதளிக்கும்
ஈயும் வரம் தாராய்

*எம்.சுகா, அச்சுநகர்.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய முயற்சி மூலம் இலாபம் உண்டாகும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். மாணவர்கள் கண்ணும் கருத்துமாக ப்படிப்பர்.

**இடபம்:** இனிய பேச்சால் அனைவரையும் கவர்வீர் கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் படிப்படியாக உய ரும். தாய்வழி உறவினர்களின் உதவி கிடைக்கப் பெறு வீர்கள். மனைவியின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**மிதுனம்:** எதிர்கால வளர்ச்சி குறித்து திட்டமிடுவீர் கள். தொழில், வியாபாரத்தில் போட்டி குறுக்கிட்டாலும் இலாபம் குறையாது. பெற்றோரின் தேவை அறிந்து நிறை வேற்றுவீர்கள்.

**கடகம்:** தவறைத் திருத்திக் கொள்ள முயல்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் அதிகரிக்கும். மனைவி விரும்பிய பொருளை வாங்கித் கொடுப்பீர்கள். மாணவர்கள் ஆர்வமுடன் படித்து வளர்ச்சி காண்பர்.

**சிங்கம்:** சமூக அந்தஸ்தைப் பெற்று மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தை விரிவுபடுத்தும் முயற்சி வெற்றி பெறும். அரசியல்வாதிகள் பயணத்தால் இனிய அனுபவம் காண்பர். பெண்கள் விருப்பம் போல் ஆடை, ஆபரணம் வாங்குவார்கள்.

**கன்னி:** கடந்த கால உழைப்பின் பயனைப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் மந்த நிலை மாறி இலாபம் கூடும். பெண்கள் தாய்வழியில் சொத்து கிடைக்கப் பெறுவர். மாணவர்கள் பெற்றோர் மகிழும் விதத்தில் படிப்பார்கள்.

**துலாம்:** சாதுரியமாகச் செயற்பட்டு பிரச்சினையில் இருந்து விலகுவீர்கள். தொழில், வியாபார ரீதியாக வெளி யூர் செல்ல நேரிடும். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்க னத்தைக் கடைபிடிப்பர். மாணவர்கள், ஆசிரியர் அறி வுரையை ஏற்பது நல்லது.

**விருச்சிகம்:** பலரும் பாராட்டும் விதத்தில் செயற் படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அமோக இலாபம் கிடைக்கும். தாயின் தேவை அறிந்து நிறைவேற்றுவீர்கள். மாணவர்கள் போட்டியில் பங்கேற்று வெற்றி பெறுவர்.


**தனுசு:** சிறிய முயற்சிக்கும் பெரிய பயன் கிடைக்கப் பெறு வீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். குடும்பத்தில் சுபவிடயம் குறித்த பேச்சு உண் டாகும். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் நன்மதிப்பை பெறுவர்.

**மகரம்:** மற்றவர் விடயத்தில் தலையிடாமல் இருப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள் ஆடம்பர விடயங்களில் ஆர்வம் காட்டுவர். மாணவர்கள் பாதுகாப்பு குறைந்த இடத்துக்குச் செல்லவதை தவிர்க்கவும்.

**கும்பம்:** குடும்பத்தினரின் ஆதரவு ஓரளவே கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் நிர்வாகச் சீர்திருத்தங்களை மேற்கொள்வீர்கள். பெண்கள் பயணத்தின் மூலம் இனிய அனுபவம் பெறுவர். உடல்நலன் குறித்த விழிப்புணர்வு உண்டாகும்.

**மீனம்:** புத்துணர்ச்சியுடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமித வளர்ச்சியால் இலாபம் கூடும். உறவினரின் இல்ல சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள். புத்திரர் விருப்பம் அறிந்து நிறைவேற்றி மகிழ்வீர்கள்.

# பழைய படங்களின் மறு வருகை



ரஜினிகாந்தின் பழைய படபெயர்களைத் தங்கள் படங்களுக்கு சூட்டிக்கொள்ள கதாநாயகர்கள் ஆர்வம் காட்டுகின்றனர்.

ஏற்கனவே ரஜினியின் பில்லா படபெயர் அஜீத் படத்துக்கு சூட்டப்பட்டது. பில்லா–2 படத்திலும் அவர் நடித்தார்.

இது போன்று ரஜினியின் மாப்பிள்ளை படத்தலைப்பு தனுஸ் படத்துக்கு வைக்கப்பட்டது. நான் மகான் அல்ல என்ற பெயரைக் கார்த்தி தனது படத்துக்குப் பயன்படுத்தினார். முரட் டுக்காளை தலைப்பு சுந்தர். சி

படத்தில் பயன்படுத்தப்பட்டது. ரஜினியின் பாயும்புலி படத்தலைப்பில் விஷால் நடித்துள்ளார்.

இந்தப் படம் வெளியாகவுள்ளது. இந்த நிலையில், ஜீவாவும் தனது படத்துக்கு ரஜினியின் போக்கிரிராஜா தலைப்பை தற்போது வைத்துள்ளார். போக்கிரிராஜா படம் ரஜினி காந்த், ஸ்ரீதேவி ஜோடியாக நடித்து 1982 இல் வெளியானது. ஏவி. எம். நிறுவனம் தயாரித்தது. போக்கிரிக்கு போக்கிரி ராஜா, விடியவிடிய சொல்லித்தருவேன், வாடா என் மச்சீகளா... போன்ற இனிமையான பாடல்களும் இடம்பெற்ற படம் அது.

இந்தத் தலைப்பைக் கேட்டு ஜீவா உள்ளிட்ட படக்குழுவினர் ரஜினிகாந்தையும், ஏவி.எம். நிறுவனத்தையும் அணுகினர். அவர்களும் போக்கிரி ராஜா தலைப்பைப் பயன்படுத்த பெருந்தன்மையோடு அனுமதி அளித்தனர் என்று தயாரிப்பு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் படத்தில் ஜீவாவுக்கு ஜோடியாக ஹன்சிகா நடிக்கிறார். இன்னொரு கதாநாயகனாக சிபி நடிக்கிறார். ராம்பிரகாஷ் இயக்குகிறார். இதன் படப்பிடிப்பு விரைவில் புதுச்சேரியில் ஆரம்பமாகவுள்ளது.



எல்லோரையும் நம்புவது ஆபத்தானது. ஒருவரையும் நம்பாமல் இருப்பது இன்னும் ஆபத்தானது.

– ஆபிரகாம் லிங்கன்

# பேஸ் புக்கில் பிடித்தவை...








## காதலிய அழ விடாதீங்கடா



அவ கண்ணீரைத் துடைக்க பல பேரு ரெடியா இருக்காங்க.



மணல் திருட்டின் மேலாதிக்கமாக கிணறே மிதக்குது

# கொஞ்சம் சிரிங்க பாஸ்...



**ஆசிரியர்:** பொய் சொல்லக் கூடாது, பிறர் பொருள் மேல் ஆசை வைக்கக் கூடாது, பிறர் மனம் நோகப் பேசக் கூடாது.

**மாணவன்:** இந்த உலகத்திலேயே வாழக் கூடாது என்றும் சொல்லுங்க சார்...

**டாக்டர்:** இன்னும் நான் உங்களுக்கு ஊசியே போடலியே அதற்குள் ஏன் கத்துறீங்க?

**வந்தவர்:** உங்க நர்சைப் பார்த்ததும் எனது மனைவி ஞாபகம் வந்திடுச்சு டாக்டர்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கில் சுற்றுலா பணியகம் அமைப்பதற்கு அனுமதி

திருகோணமலை, செப்.7
கிழக்கு மாகாணத்தில் சுற்றுலா பணியகம் அமைப்பதற்கான அங்கீகாரத்தை கிழக்கு மாகாண நியதிச் சட்டக்குழு வழங்கியுள்ளது என்று மாகாண சபை பேரவை செயலாளர் எம்.சீ.எம். சரீப் தெரிவித்தார்.
கிழக்கு மாகாணசபையின் நியதிச் சட்டக் குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் பொதுநூலக கேட்போர் கூடத்தில் குழுவின் தலைவரும் மாகாண சபை உறுப்பினருமான சட்டத்தரணி ஆரிப் சம்சுதீன் தலைமையில் இடம்பெற்றது.
இதன் நிறைவில், குறித்த கூட்டம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே மாகாண சபை பேரவை செயலாளர் எம்.சீ.எம்.சரீப் இவ்வாறு தெரிவித்தார். முன்பள்ளிப் பாடசாலைத் திருத்தமும் அங்கீகாரத்திற்கு வந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.
இந்தக் கூட்டத்தில், குழுவின் செயலாளர் எம்.சீ.எம். சரீப், கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் சட்டத்தரணி கி. துரைராஜசிங்கம், உறுப்பினர்களான கோ. கருணாகரன், ஜே.எம். லாஹீர் ஆகியோர் கலந்து கொண்டனர். குறித்த அங்கீகாரங்கள் மாகாண சபையின் அங்கீகாரத்துக்கு விடப்பட்டு, மாகாண ஆளுநரின் இணக்கப்பாட்டுடன் அங்கீகரிக்கப்படும் என செயலாளர் மேலும் தெரிவித்தார். (ற)

# கிழக்கு வெற்றிடங்களுக்கு விரைவில் புதியவர்கள்


கொழும்பு, செப்.7
கடந்த மாதம் நடைபெற்ற 8ஆவது நாடாளுமன்ற தேர்தலில் வெற்றியீட்டிய கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு பதிலாக புதிய உறுப்பினர்களாக கட்சிகளின் பட்டியலில் அடுத்த நிலையிலுள்ள உறுப்பினர்கள் நியமிக்கப்படலாமென கிழக்கு மாகாண சபையின் பேரவை செயலாளர் எம்.சீ.எம்.சரீப் தெரிவித்தார்.
அதனடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்ட அலிசாஹிர் மௌலானாவின் இடத்துக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு பட்டியலில் அடுத்த நிலையிலுள்ள தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் செயலாளர் பூபாலப்பிள்ளை பிரசாந்தன் நியமிக்கப்படலாம் என தெரிவிக்கப்படுகின்றது.
அம்பாறை மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி பட்டியலில் வெற்றி பெற்ற தயா கமகேயின் இடத்துக்கு பட்டியலில் அடுத்த நிலையிலுள்ள கே.சில்வாவும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் வெற்றி பெற்ற விமலவீர திசாநாயக்காவின் இடத்திற்கு எஸ்.தேவாரப்பெருமவும் நியமிக்கப்படவுள்ளனர்.
திருமலை மாவட்டத்தில் ஐக்கியதேசிய கட்சி சார்பில் வெற்றிபெற்ற இம்ரான் மஹ்ரூபின் இடத்துக்கு பட்டியலில் அடுத்த நிலையிலுள்ளவர் எம்.ஏ.எம்.மஹ்ரூப் அவரும் நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளதால் அதற்கு அடுத்த நிலையிலுள்ள எம்.அருண நியமிக்கப்படுவாரென எதிர்பார்க்கப்படுகின்றது.
குறித்த கட்சிகளின் செயலாளர்களினாலேயே இந்த நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. இன்னும் ஒருமாத காலத்தினுள் இந்த நியமனங்கள் பூர்த்தியடைந்து விடுமென செயலாளர் மேலும் தெரிவித்தார். (ற)

## போலிக் கடவுச் சீட்டில் பயணம்: கட்டுநாயக்காவில் 6 பேர் கைது

கொழும்பு, செப்.7
போலி கடவுச் சீட்டுக்களைப் பயன்படுத்தி வெளிநாடு செல்ல முயன்ற ஆறு பேர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
அவர்களில் நான்கு இலங்கையர்கள் போலி கடவுச்சீட்டைப் பயன்படுத்தி கட்டார், ரஷ்யா மற்றும் அபுதாபி போன்ற நாடுகளில் இருந்து வந்து மீண்டும் பிரான்ஸ், ரஷ்யா மற்றும் இத்தாலி போன்ற நாடுகளுக்கு பயணம் செய்ய முயன்ற சந்தர்ப்பத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
மேலும் 22 வயதான கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவர் கட்டாரில் இருந்து வந்து, போலியான ஜேர்மன் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி பிரான்ஸுக்குச் செல்ல முயன்ற வேளையில் கைது செய்யப்பட்டுள்ளார்.
களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த மற்றொரு 35 வயதான ஒருவர், கட்டாரில் இருந்து வந்து கிரீஸ் நாட்டின் கடவுச்சீட்டை பயன்படுத்தி, பிரான்ஸுக்குச் செல்ல முயன்ற வேளையில் கைது செய்யப்பட்டுள்ளார்.
மட்டக்களப்பு மற்றும் மன்னார் போன்ற இடங்களைச் சேர்ந்த 26 மற்றும் 45 வயதான சந்தேக நபர்கள் ரஷ்யா மற்றும் அபுதாபியில் இருந்து வந்து போலியான கிரேக்கம் மற்றும் இந்திய கடவுச் சீட்டுகளை பயன்படுத்தி கிரீஸ் மற்றும் இத்தாலி நாடுகளுக்கு பயணம் செய்ய முயன்ற போது, கைது செய்யப்பட்டுள்ளனர்.
சுற்றுலா நுழைவிசைவின் மூலம் வந்த, 19 வயது, சிரிய பிரஜை ஒருவர், போலியான ஸ்பெயின் கடவுச்சீட்டை பயன்படுத்தி இங்கிலாந்துக்கு பயணம் செய்ய முயன்ற வேளையில் கைது செய்யப்பட்டுள்ளார்.
முல்லைத்தீவைச் சேர்ந்த மற்றொரு 28 வயதான சந்தேகநபர், போலியான ஜேர்மன் கடவுச் சீட்டைப் பயன்படுத்தி, ஜேர்மனிக்கு பயணம் செய்ய முயன்ற போது கைது செய்யப்பட்டுள்ளார்.
சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.(ற)

# சோதனைகளை சாதனையாக்கி சாதித்தார் ரணில் விக்கிரமசிங்க

### அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் புகழாரம்



கொழும்பு, செப்.7
ஐக்கிய தேசியக் கட்சியை ரணில் விக்கிரமசிங்க வழிநடத்தாமல் இருந்திருந்தால், கட்சி பல பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்திருக்கும் என ஐக்கிய தேசியக் கட்சியின் உபதவிசாளரும், மீள் குடியேற்ற மற்றும் இந்து விவகார அமைச்சருமான டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.
ரணில் விக்கிரமசிங்க பல சவால்களையும், பிரச்சினைகளையும் எதிர்கொண்டு சாதுரியமான முறையில் செயற்பட்டதனால் இன்று ஐக்கிய தேசியக் கட்சியின் அரசொன்று அமையப் பெற்றுள்ளது என்றும் அவர் கூறினார்.
ஐக்கிய தேசியக் கட்சியின் 69 ஆவது ஆண்டு விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். (ற)


**வீடு விற்பனைக்கு**
யாழ்ப்பாணம்,நல்லூர்,பருத்தித்துறை வீதி "சயன்ஸ் அக்கடமி" ரியூசன் சென்ரருக்கு அருகில் வீடு கிணற்றுடன் சேர்ந்த மூன்று பரப்பு ஆதனம் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்பு: 077446 9371 நரேஸ்
சந்திரதாசன் 077 610 6760
Fax (416) 845 8509

**வேலையாள் தேவை**
யாழ் நகரப் பகுதியில் இயங்கும் பெண்களிற்கான தையல் நிலையம் ஒன்றுக்கு சாறிச்சட்டைகள் வெட்டித் தைக்கத் தெரிந்த பெண்பிள்ளை தேவை.
தொடர்பு: 077 6497251

**கடைக் கட்டடத்துடன் காணி விற்பனைக்கு**
மீசாலை ஏ -9 வீதியில் புகையிரத நிலையத்திற்கு எதிரில் உள்ள கடைக்கட்டடத்துடனான 2பரப்பும் 15.5 குளியும் கொண்ட காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 139 2448

**காணி விற்பனைக்குண்டு**
மீசாலை மேற்கு, மீசாலை பங்களாரோட்டில் உள்ள 40 தென்னை மரங்களுடன் வருமானம் உள்ள 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு

**காணி,வீடு விற்பனைக்குண்டு**
மீசாலை வடக்கு வீரசிங்கம் மத்திய கல்லூரிக்கு அருகில் உள்ள 4பரப்புடன் வீடு விற்பனைக்குண்டு. பாவித்த ஓடுகள், மரங்கள் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
077 917 1362 , 077 597 7210

**விற்பனையாளர் தேவை**
யாழ் நகரில் உள்ள மிகவும் பிரபல்யமான புடைவை விற்பனை நிலையத்துக்கு அனுபவமுள்ள/ பழக விரும்பும் ஆண்,பெண் விற்பனையாளர் உடன் தேவை.
மேலும் சிட்டை எழுதுநர் பெண் 18-30 வயது
குறிப்பு : யாழ் குடாநாட்டில் வசிப்பவர்களாக இருக்க வேண்டும்
தொடர்பு 077 555 6904
077 915 7883
(c 18628) (12.15)


# சர்வதேச விசாரணையொன்று இலங்கைக்குத் தேவையற்றது

### இது தமது கட்சியின் நிலைப்பாடு என்கிறார் சந்திரகாந்தன்

கொழும்பு, செப்.7
சர்வதேச விசாரணையொன்று இலங்கைக்கு தேவையில்லையென்பதே தமது கட்சியின் நிலைப்பாடு என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.
மட்டக்களப்பில் உள்ள தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சித் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். இதன்போது கருத்து தெரிவித்த சிவநேசதுரை சந்திரகாந்தன்:–
இந்த நாட்டில் போர் நடைபெற்றது. போர் என்றால் அங்கு ஈவிரக்கம் என்ற பேச்சுக்கு இடமில்லையென்பதை போராளியாக இருந்தவன் என்ற அடிப்படையில் கூறுகின்றேன்.
விடுதலைப் புலிகளும் மிகப்பெரும் குற்றங்களை செய்துள்ளனர். பெருமளவானோரை படுகொலை செய்துள்ளார்கள். எங்களுக்கு சாதகமானோரை கொன்றொழித்துள்ளார்கள்.
இந்த நாட்டில் விடுதலைப் புலிகள் அழிந்த பின்னர் தான் ஒரு சமாதானம், நிம்மதி வரும் என்று நாங்களும் உறுதியாக நம்பினோம். ஆனால் அந்த போரின் போது தமிழ் மக்கள் கேடயமாக பயன்படுத்தப்பட்டு அழிந்தது வேதனையான விடயம்.
போர்க் காலப் பகுதியில் கொத்துக் கொத்தாக மக்கள் கொல்லப்பட்டபோது நாங்கள் சரத் பொன்சேகாவிடம் பசில் ராஜபக்ஷவிடம் இந்திய உயர்ஸ்தானிகரிடம் எல்லாம் இதனை நிறுத்த நடவடிக்கையெடுக்குமாறு கூறியிருந்தோம்.
இதனை சிங்கள இராணுவம் செய்தது என்பதற்கு அப்பால் அதற்கான சந்தர்ப்பத்தை தமிழர்களேதான் வழங்கினார்கள்.
இந்த அழிவுகள் எதிர்காலத்தில் வராமல் தடுக்கவேண்டுமேயொழிய இது தொடர்பில் ஒருசாராரை மட்டும் தூக்கிலிட வேண்டும் என்பதில் நான் மாறுபட்டகருத்து கொண்டவன்.
தற்போது உள்ள சூழலில் விசாரணையொன்று நடைபெற்று அறிக்கை வந்துள்ளது. உள்நாட்டு பொறிமுறையூடாக சிங்கள மக்கள் மத்தியில் குரோதம் வளராத வண்ணம் தமிழர்களுக்கு தீர்வு வழங்க வேண்டும் என அரசாங்கத்திடம் கோருகின்றோம்.
இந்த எண்ணத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்பு தற்போதைய எதிர்க்கட்சி தலைவருக்கு வந்துள்ளது.
தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியை பொறுத்த வரையில் சர்வதேச விசாரணை தேவையற்ற ஒன்றாகவே பார்க்கின்றோம்.
இங்கு ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டு பல அறிக்கைகள் வந்துள்ளது. காணாமல்போனவர்கள் தொடர்பிலான அறிக்கைகள் வந்துள்ளது.
அதேபோன்று தற்போதைய ஆட்சிமாற்றத்தில் கடந்த கால ஆட்சியாளர்கள் ஓரங்கட்டப்பட்டு தற்போது உள்ள ஆட்சியாளர்கள் உள்ளக விசாரணை மூலம் தீர்வைப் பெற்றுக் கொடுப்போம் என்று உறுதியளித்துள்ளனர்.
இதுதான் எதிர்காலத்தில் இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு பாதுகாப்பாகும். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு எங்களை புறக்கணித்து வருவதனால் தொடர்ந்து அவர்களுடன் இயங்க முடியா நிலைமை ஏற்பட்டுள்ளது.
இது தொடர்பில் நாங்கள் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளோம். அதற்கு பதில் கிடைக்காத சந்தர்ப்பத்தில் அவர்களுடன் இயங்க முடியாத நிலையே ஏற்படும். எதிர்வரும் பிரதேச சபை தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தனித்து தமது படகுச் சின்னத்திலேயே போட்டியிடும்.– என்றார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாணத்தில் மாத்திரம் 42 ஆயிரம் மாற்று திறனாளிகள்

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

வவுனியா, செப்.7
போர் காரணமாக வடக்கு மாகாணத்தில் மட்டும் சுமார் 42ஆயிரம் பேர் விசேட தேவைக்குட்பட்டுள்ள நிலையில் உள்ளனர் என்று தெரிவித்தார் வடக்கு சுகாதார அமைச்சர் வைத்தியர் ப.சத்தியலிங்கம்.

வடமாகாண சபை உறுப்பினர்களுக்கு குறித்து ஒதுக்கப்பட்ட கொடை நிதியின் கீழ் வாழ்வாதாரத் திட்டம் வழங்கும் நிகழ்வுகள் இரு கட்டங்களாக வவுனியா தெற்கு இலுப்பைக்குளம் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றன. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது:-

வடமாகாண சுகாதார அமைச்சின் கீழ் மேலும் மூன்று அமைச்சுக்கள் புனர்வாழ்வு, பெண்கள் விவகாரம், சிறுவர் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு என்பன செயற்படுகின்றன. வடமாகாணத்தில் 42 ஆயிரம் பேர் மாற்றுத் திறனாளிகளாக உள்ளனர். அவர்களுக்கான கொடுப்பனவுகள் தபாலகங்கள் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன.

நாற் சக்கர வண்டியில் இருப்பவர்களுக்கு சாதாரண மலசல கூடத்தைப் பயன் படுத்த முடியாது. அவர்களுக்கு வசதியான மலசல கூடத்தை அமைப்பதற்கு ஒரு லட்சம் ரூபாவரை கொடுப்பனவை வழங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக ஒரு கோடி இருபது லட்சம் ரூபா வடமாகாண சபையால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

560கிராமங்கள் வவுனியா மாவட்டத்தில் உள்ளதாகவும் வடமாகாண அமைச்சு, வடமாகாணசபை உறுப்பினர்கள் நிதி ஒதுக்கீட்டில் கோவில்கள், பாடசாலைகள், வீதிகள், விளையாட்டு மைதானம் என்பன புணரமைப்பு செய்யப்படுவதாகவும் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு தையல் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளன.- என்றும் அவர் தெரிவித்தார். (ற)

# ரக்னா லங்கா விவகாரம் குறித்து மேலும் 26 பேரிடம் விசாரணை!

கொழும்பு, செப்.7
ரக்னா லங்கா பாதுகாப்பு நிறுவனம் தொடர்பில் இடம்பெறுகின்ற விசாரணைகளின் பொருட்டு மேலும் 26 பேரிடம் சாட்சியங்கள் பதிவுசெய்ய வேண்டியுள்ளது என்று பாரிய மோசடிகள் மற்றும் ஊழல் விசாரணை ஜனாதிபதி ஆணைக் குழுவின் செயலாளர் லெசில் டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பில் இது வரை நால்வரிடம் சாட்சியங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன என்றும் ஆணைக்குழுவின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதன்போது ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்த இராணுவத்தின் முன்னாள் மேஜர் ஜெனரல் ஒருவர் தாம் உண்மைக்குப் புறம்பான வாக்குமூலம் வழங்கியுள் ளதை ஏற்றுக்கொண்டுள்ளார் என்றும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

குறிப்பாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் முன்னிலையில் தம்மால் உண்மையை கூறமுடியாமல் போனதாகவும் அந்த இராணுவ அதிகாரி குறிப்பிட்டிருந்தார் என்று ஆணைக்குழுவின் செயலாளர் லெசில் டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து ஆணைக்குழுவால் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ரக்னா லங்கா பாதுகாப்பு நிறுவனத்திற்கு எதிராக பெரும் மோசடிகள் மற்றும் ஊழல் விசாரணை ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய, ஆரம்பக்கட்ட விசாரணை மற்றும் குறுக்குக் கேள்விகளை கேட்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

ரக்னா லங்கா பாதுகாப்பு நிறுவனத்தின் சுமார் 500 ஊழியர்கள் கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் என்று குறிப்பிட்ட ஆணைக்குழுவின் செயலாளர், அதற்குப் பதிலாக சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் 150 க்கும் அதிகமான ஊழியர்கள் கடமைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர் என்றும் தெரிவித்துள்ளார்.

இதன்போது சிவில் பாதுகாப்பு திணைக்கள ஊழியர்கள் தமக்குரியசீருடைக்குப்பதிலாகவேறொரு வகையான உடையுடன் கடமையில் அமர்த்தப்பட்டிருந்தன என்று தெரிவிக்கப்பட்டுள்ள முறைப்பாடு தொடர்பிலேயே விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பெரும் மோசடிகள் மற்றும் ஊழல் விசாரணை ஜனாதிபதி ஆணைக் குழுவின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

## மரண அறிவித்தல்

### திருமதி சுபாலினி இளங்கோ

(சிரேஷ்ட விரிவுரையாளர்- விலங்கியல் விவசாயபீடம் கிழக்குப்பல்கலைக்கழகம்)



அராலி தெற்கைப் பிறப்பிட மாகவும்,மாதகல் மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுபாலினி இளங்கோ 05.09.2015 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் Dr. இளங்கோவின் (போதனா வைத்திசாலை மட்டக் களப்பு) அன்பு மனைவியும், தங்கராசா- விஜயலட்சுமி (அராலி) தம்பதியரின் பாச மிகு மகளும் தியாக ராஜா- புவனேஸ்வரி (மாதகல்) தம்பதியரின் அன்பு மருமகளும் சுதர்சினி (கனடா), சிவாஜினி(சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் துஸ்யந்தன்(USA) மதுராந்தகி (London),செந்தூரன் (ஆசிரியர் மாதகல் நுணசை மகா வித்தியாலயம்), நிர்மலராஜா (கனடா),பாலமுருகன் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும் , சுரேஸ்சின் (லண்டன்) உடன் பிறவாச் சகோதரியும் பிரதீபா (USA) ,மீராம்பாள் ஆகியோரின் சகலியும் கிருத்தீஸ்,கிருஷ்னுகா, அபிகாந்த், கவிஸ்னுகா, அனிஷ்,தஷ்விதன் ஆகியோரின் சிறிய தாயும் அபிரா, ஜமீரா, சஞ்சீரா ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மாதகல் காஞ்சிபுர இல்லத்தில் இன்று (07.09.2015) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதகல் போதி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

காஞ்சிபுரம்,
மாதகல்
077 360 0251

தகவல்
Dr.T இளங்கோ
(கணவர்)

(12.15.18)

## மரண அறிவித்தல்

### அந்தோனிப்பிள்ளை சாமிநாதன் (பொங்கலன்)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பை வசிப்பி டமாகவும் கொண்ட அந் தோனிப்பிள்ளை சாமிநாதன் 05.09.2015 காலமாகி விட்டார்

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - சிசிலியா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அழகரெட்ணம் - சிவஞானமணி தம்பதிகளின் மருமகனும் காலஞ் சென்ற சோதிமலரின் அன்புக் கணவரும் றூபன், ஜெயா, றூபி,றூபினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று 07.09.2015 மட்டக்களப்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

பாண்டியன்தாழ்வு
யாழ்ப்பாணம்.

(12.15.18)

தகவல் :
சகோதரர்(றூபர் ஜென்றிக்)

# மகிந்த ஆதரவுத் தரப்பு சுயாதீனமாக இயங்குமாம்

கொழும்பு, செப்.7
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆதரவுத் தரப்பினர் நாடாளுமன்றில் தனித்து இயங்கத் தீர் மானித்துள்ளனர்.சிலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு தொகுதியினர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தேசிய அரசில் இணைந்து கொண்டுள்ளனர். இதில் சிலருக்கு அமைச்சு பதவிகள் வழங்கப்பட்டுள்ளதுடன், பிரதி மற்றும் ராஜாங்க அமைச்சுப் பதவிகளும் வழங்கப்பட உள்ளன.

எனினும், இந்த இணக்கப்பாடு மீது நம்பிக்கையில்லாத மகிந்த ராஜபக்சவுக்கு விசுவாசமான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சியில் சுயாதீனமாக இயங்கத் தீர்மானித்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தவிர்ந்த ஏனைய கூட்டணி கட்சிகள் எதிர்க்கட்சியாகவே இயங்க உள்ளதாக சுதந்திரக் கட்சியின்சிரேஸ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். பிவித்துரு ஹெல உறுமய, மக்கள் ஐக்கிய முன்னணி, ஜே.என்.பி. போன்ற கட்சிகள் தனித்து இயங்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி பத்மநாதன்



கோண்டாவில் குமரகோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பத்மநாதன் 04.09.2015 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வைத்தி லிங்கம் மற்றும் மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற அருந்ததிதேவியின் அன்புக் கணவரும் சரஸ்வதி கந்தையா (கனடா), பாலசிங்கம், புவனேஸ்வரி தங்கராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் பர்வதவர்த்தினிதேவி, இராஜேஸ்வரன், சரவணபவான் (ஜேர்மனி), பவானந்தன் (லண்டன்), கோதைநாயகி நடராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் பத்மசிறி (கனடா), நிரஞ்சன் (பிரான்ஸ்), அகிலன் (கனடா), கார்த்திகா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயராசா (கனடா), தட்சாயினி (பிரான்ஸ்), கிருஸ்ணவேணி (கனடா), பத்மநாதன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் வனிஷா, பபிஸ், பிரதியும்னன், ஸ்ருதிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2015)திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது குமரகோட்டம் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

குமரகோட்டம், கோண்டாவில்
தொ.பே.021 205 3603

தகவல்.
மகன். ப.நிரஞ்சன்.

## மரண அறிவித்தல்

### சிங்கராசா துரையப்பா



பத்தமேனி, அச்சுவேலி யைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சி.துரையப்பா 05.09.2015 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிங்கராசா செல்லாச்சி தம்பதிகளின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான ஆறு முகம் சேதுப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் கண வரும் கிருஸ்ணலிங்கம் (கனடா), லிங்கேஸ்வரி (கனடா) காலஞ்சென்ற பரசோதிலிங் கம் மற்றும் உதயதாரகை , சிவசோதிலிங்கம் (கனடா), ஜெயசோதி லிங்கம் (லண்டன்) காலஞ்சென்ற கோமேஸ்வரி மற்றும் குணசோதிலிங்கம் (லண்டன்), கமலேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் லோகேஸ் வரி இராசரத்தினம் ஸ்ரீபாஸ்கரன், தயா நந்தினி, சத்தியவேணி, அனிதா, லவன் ஆகியோரின் அன்பு மாமனாரும் நிருபா, தனுசா, பிரதீப், தர்மிகா, ஜெயதீப், நிவாதீப், தர்சிகா, நிதர்சன், தர்மிலன், பானுசன், கஜானன், ஆருஜன், அனோஜ், நிவேத், ரக்ஷனா, நிதுர்சன், நிவேதன் ஆகி யோரின் பேரனும் காலஞ்சென்ற நாகம்மா மற்றும் பொன்னம்மா காலஞ் சென்ற தங்கம்மா மற்றும் சற்குணம் ,செல்வராசா (லண்டன்), மகேஸ்வரி (கனடா) ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற தவராசா மற்றும் சிவானந்தம், கமலாதேவி, கண்மணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2015) திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தீர்த்தாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

விமான நிலைய வீதி,
பத்தமேனி, அச்சுவேலி.

தகவல் :
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் நிரப்பு நிலையங்கள் நாடு முழுவதும் ஒரே கட்டமைப்பில்

## பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பிராந்தியப் பதில் முகாமையாளர் தெரிவிப்பு

அச்சுவேலி,செப்.7

எரிபொருள் நிரப்பு நிலையங்கள் நாடளாவிய ரீதியில் ஒரே கட்டமைப்பில் நிறுவப்பட்டுள்ளன. இதன் மூலம் பாவனையாளர்களுக்கு உரிய வசதிகள் செய்யப்பட்டிருப்பதோடு ஊழியர்களுக்கான வாய்ப்புக்கள் வசதிகள் என்பன செய்யப்பட்டிருக்கின்றன. எனவே எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்கள் எரிபொருள் நிலைய கட்டமைப்புக்கள் மற்றும் கட்டடங்களை உரிய முறையில் பேணிப் பராமரிக்க முன்வர வேண்டும். அதன் மூலமே அவற்றின் சேவையை நீண்ட காலத்துக்கு பெற்றுக்கொள்ள முடியும். – இவ்வாறு கூறினார் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பிராந்திய பதில் முகாமையாளர் எஸ்.சிவதரன்.

அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் செலவில் புனரமைப்புச் செய்யப்பட்ட அச்சுவேலி எரிபொருள் நிரப்பு நிலையத்தின் திறப்பு விழா சங்கத்தின் தலைவர் இ.சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

திறப்பு விழாவில் விருந்தினராக கலந்து கொண்ட பிராந்திய பதில் பொது முகாமையாளர் தொடர்ந்து உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

எரிபொருள் நிரப்பு நிலையங்களின் வசதியீனங்களைக் கருத்தில் கொண்டே கடந்த காலத்தில் வாகனச்சாரதிகள் மற்றும் பாவனையாளர்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களைப் பயன்படுத்தி வந்தனர். தற்பொழுது எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஒரேமாதிரியான கட்டுமானங்களுடன் வசதிகளை உள்ளடக்கியதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இந்தக் கட்டமைப்பில் கொழும்பு, யாழ்ப்பாணம் என்ற வேறுபாடோ கிராமம், நகரம் என்ற வேறுபாடோ இல்லை நாடளாவிய ரீதியில் ஒரே கட்டமைப்பில் நிறுவப்பட்டுள்ளது. இதன்மூலம் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் வருமானம் அதிகரித்துள்ளது. இதனால் எரிபொருள் நிரப்பு நிலைய பணியாளர்களின் வருமானமும் அதிகரித்துள்ளது.

கட்டடங்களை மற்றும் கட்டுமானங்களை நவீன முறையில் நிர்மாணித்தால் மட்டும் போதாது. அவற்றின் நாளாந்த பராமரிப்பு முறையிலேயே அவற்றின் சேவை நிலை தங்கியுள்ளது. அதனைக் கருத்தில் கொண்டு எரிபொருள் நிரப்பு நிலைய பணியாளர்கள் உரிய முறையில் பராமரிக்க முன்வர வேண்டும். – என்றார். (ந–11)

# அருள்நெறி விழாவின் 20ஆம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப்.7

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் அருள்நெறி விழாவின் இருபதாம் நாள் நிகழ்வு இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் பி.ப 3 மணிமுதல் பி.ப 6 மணி வரை நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கணக்காளர் எம்.ஜி.காண்டீபன் தலைமை வகிக்கவுள்ளதோடு, பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் பி.செந்தில்நந்தனர் கலந்துகொள்ளவுள்ளார்.

நிகழ்வில் மாதகல் காந்திஜி அறநெறிப் பாடசாலை மாணவி அ.நிதுசாவின் பேச்சு, நெல்லண்டை அம்மன் அறநெறிப் பாடசாலை மாணவி வி.ஜசிந்தாவின் பேச்சுஇ ப.பிரியங்கா, த.அபிநயா, த.அஜந்தா ஆகியோரின் தனி நடனம், தெல்லிப்பளை துர்க்கை அம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் வில்லிசை நாடகம், சூராவத்தை முத்துமாரியம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பண்ணிசை, நவாலி முருகானந்தா அறநெறிப் பாடசாலை மாணவி பா.சோனியாவின் பேச்சு, கட்டுடை அரசடி விநாயகர் அறநெறிப் பாடசாலை மாணவி ந.தர்சினியின் பேச்சு, ஸ்ரீகிருஸ்ணா அறநெறிப் பாடசாலை மாணவர்களின் குழுநடனம் போன்ற கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ந–10)

# முன்னாள் போராளிகள், மாவீரர்களின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள்

முல்லைத்தீவு, செப்.7

முல்லைத்தீவு விஸ்வமடு தேராவில் தமிழ் வித்தியாலயம் மற்றும் முல்லைத் தீவு வள்ளுவர்புரம் பாரதி வித்தியாலயங்களில் கல்வி கற்கும் முன்னாள் போராளிகள், மாவீரர்களின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் சாந்தநாயகி நற்பணி மன்றத்தால் 45 மாணவர்களுக்கு அந்தந்தப் பாடசாலைகளில் வைத்து அவை வழங்கப்பட்டுள்ளன.

தேராவில் தமிழ் வித்தியாலயத்தில் அதிபர் யோகராசா தலைமையிலும், பாரதி வித்தியாலயத்தில் அதிபர் சற்குணசீலன் தலைமையிலும் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார் (கண்ணன் ), செயலாளர் மாணிக்கம் ஜெகன் வள்ளுவர்புரம் செல்லமுத்து வெளியீட்டக உரிமையாளரும் ,சமூக சேவையாளருமான கவிஞர் யோ.புரட்சி மற்றும் ஆசிரியர்கள், சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டு கற்றல் உபகரணங்களை வழங்கினர். (ந)

# பொதுக் கூட்டம்

கொடிகாமம் – தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய பொதுக் கூட்டமும் புதிய இயக்குநர் சபைக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் நிகழ்வும் எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு தலைமைச் சங்கத்தின் மேல்மாடியில் இடம்பெற உள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சங்கத்தின் தலைவர் செ.அமரசேகரம் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சு.கணேசு கலந்து கொள்ளவுள்ளார். அன்றைய தினம் புதிய இயக்குநர் சபைக்கு 7 பேர் தெரிவு செய்யப்பட உள்ளனர். இவர்களில் 2 பேர் 18 – 35 வயதுக்கு உட்பட்டவர்கள் ஆவர். இந்தக் கூட்டம் தொடர்பான அறிவித்தல்கள் சங்கச் செயலாளரால் பொதுச் சபை அங்கத்தவர்களுக்கு தபாலில் தற்சமயம் அனுப்பப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந–122)

# காலபோக நெற்செய்கைக்கான கூட்டங்கள்

முல்லைத்தீவு,செப்.7

முல்லை மாவட்டத்தில் உள்ள கமநலச் சேவை நிலையங்களின் கீழ் உள்ள சிறுகுளங்களின் காணிகளுக்கான 2015/2016 காலபோக நெற்செய்கைக்கான கூட்டங்கள் அந்தந்தப் பகுதி கமநலச் சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர்களால் நடத்தப்படவுள்ளதாக கமக்கார அமைப்புக்களுக்கு அறிவித்தல் விடுக்கப் பட்டு வருகிறது.

இந்த காலபோகக் கூட்டங்களின்போது அனைத்து விவசாய பங்காளர்களும் முக்கியமாகக் கலந்து கொண்டு அதற்கான தீர்மானங்களை எடுத்து உரிய காலத்துக்குள் விவசாயத்தை மேற்கொள்ள உதவுமாறு கமக்கார அமைப்புக்கள் கேட்டுள்ளன.

அதன் பிரகாரம் 31/08/2015 அன்று கற்சிலைமடு பெரிய குள வெளிக்கள காலபோகச் செய்கைக் கூட்டம் பிற்பகல் 3மணிக்கு பெரும்பாக உத்தியோகத்தர் எஸ்.குணநேசன் தலைமையில் இடம்பெற்று, புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றதுடன் விதைப்புக்கான தீர்மானங்களும் எடுக்கப்பட்டன. (ந–500)


**திறப்பு விழா அழைப்பு**

டேவிற் பீரிஸ் மோட்டார் கம்பனியின் (plt)

Bajaj வாகனங்களின் விற்பனை முகவர்

**"Arul Motors"**

No. 230, கண்டி றோட்,

சாவகச்சேரியில்

இன்று 07.09.2015 முற்பகல் 10.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

"அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்"

முகாமையாளர் : 077 322 2700


**MINISTRY OF PROVINCIAL COUNCILS AND REGIONAL DEVELOPMENT**

**North East Local Services Improvement Project – NELSIP**

North East Local Services Improvement Project – NELSIP (Inter Divisional Rural and Small Township Development Initiative for the Northern Province) is a development intervention launched by the Government of Sri Lanka with the assistance of the World Bank which is to be implemented in Northern and Eastern Provinces during 2010 – 2016. The primary development objective of the project is to support Local Government Authorities in North and East to deliver services and local infrastructure in a responsive and accountable manner involving an investment of US $ 86 million.

Applications are invited by the Northern Provincial Council from qualified candidates who posses the qualifications and experience for the following post.

| Position | Salary Scale | Qualification |
|---|---|---|
| District Civil Engineer (01) | Salary Scale Rs.75,000.00 – 90,000.00 per month (level C of the Management Circular No.33 of 2007) | 1. Should be Citizen of Sri Lanka<br>2.Charted/ Corporate Membership of Recognized professional Institution or Postgraduate Qualification. (Masters / Diploma) in the field of Civil Engineering and minimum of 5 years of post-qualification experience in the relevant field.<br>Or<br>An officer of the Government All Island Services Class II or above or similar status. Priority will be given to those having qualifications in the field of Civil Engineering or similar status in the relevant field with minimum of 5 years experience in Class II Level.(if no suitable applicants with full qualifications, qualified Engineer with less qualification will be considered) |

**General Conditions :**

- ❖ Age limit is 60 years at the date of closing applications and applicant physically fit for working any area of Northern Province.
- ❖ Posts are temporary and the appointments are on contract basis initially for one year.
- ❖ The extension of contract for further period will be considered based on the performance.
- ❖ The officer has to visit the respective project areas within the appointed Ditricts.
- ❖ Priority will be given to the applicants who have prior experience in foreign funded projects.
- ❖ Applicants should have excellent communication skill in English and knowledge of both Tamil and Sinhala would be advantageous.
- ❖ Computer literacy is desirable.

Applicants are requested to prepare the application indicating full name, address, date of birth, educational qualifications, professional qualifications, past experience etc with justification why he / she is the best candidate for the post applied for photocopies (certified copies) of the following documents should be attached with the application.

a) Birth Certificate

b) Educational and Professional Certificates

c) Evidence of past experience

The application should be emailed to chiefsecnpc@gmail.com and then sent under registered post to reach the Chief Secretary, Chief Secretary's Secretariat, Northern Province, 63, Nallur Cross Road, Nallur, Jaffna on or before **18th September 2015**. The post applied for should be written on the left top corner of the application.

Mr. A. Pathinathan,
Chief Secretary,
Northern Province.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்றி நெல்லை அழிக்க உதவுமாறு கோரிக்கை

முல்லைத்தீவு,செப்.7

முல்லைமாவட்டத்தில்உள்ளதண்ணி ரூற்று முறிப்பு மற்றும் பூதன்வயல் வயற்காணிகளில் பன்றி நெல் ஆதிக் கத்தால் நெற்செய்கை பாதிக்கப் படுகின்றது என்றும் அதனை அழிப் பதற்கு ஆலோசனைகள் வழங்கு மாறும் விவசாயிகள் விவசாயத் திணைக்களத்தை நாடியுள்ளனர்.

தண்ணிரூற்று, முறிப்பு பூதன்வயல் போன்ற பகுதி விவசாய நிலங்களில் பன்றி நெல் ஒருவகை நெல்லினம் முளைப்பதால் விதைக்கப்படும் நெல் லினங்களை முற்றாகவே பாதிப் படையச் செய்கின்றன. இதனால் விவசாயிகள் பல ஏக்கர் காணி களை அறுவடை செய்யாது கைவிட் டுள்ளனர்.

குறிப்பாக காலபோகத்தால் அந்த நெல்லினம் உற்பத்தியாகின்றது. பண்படுத்தலுக்காக நேரகாலத் தோடு உழுதாலும் அந்த நெல்லின மானது காலம் தாழ்த்தி முளைப் பதால் புல்லினங்களுக்கு விசிறப் படும் மருந்து வகைகளுக்கும் கட்டுப்படுவதில்லை. குறிப்பிட்ட நெல்லினம் மீண்டும் மீண்டும் பெருகுவதால் பல காணிகளில் விவசாயத்தை மேற்கொள்ள முடி யாத நிலை ஏற்பட்டு வருகிறது. எனவே இதனை இல்லாதொழிக்க விவசாயத் திணைக்களம் ஆலோ சனை வழங்க வேண்டுமென விவ சாயிகள் கேட்டுள்ளனர்.(ற-500)

# நெல் கொள்வனவு இடைநிறுத்தம்: காத்திருந்த விவசாயிகள் ஏமாற்றம்

முல்லைத்தீவு, செப்.7

முள்ளியவளையில் நெல் கொள் வனவு இடைநிறுத்தப்பட்டுள்ளமை யால் தாம் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக விவசாயி கள் தெரிவித்துள்ளனர்.

முள்ளியவளையில் அமைந்துள்ள நெல் சந்தைப்படுத்தும் சபைக்குரிய நெற் களஞ்சியசாலையில் இரு பெரும் களஞ்சிய கட்டடங்கள் உள் ளன. அதில் ஒரு கட்டடத்தை உலக உணவுத்திட்ட நிறுவனத்தினர் தமது பாவனையில் வைத்துள்ளனர். அத னால் நெல் சந்தைப்படுத்தும் சபை யினர் விவசாயிகளிடமிருந்து கொள் வனவு செய்யும் நெல்லை ஒரு களஞ் சிய கட்டடத்தில் மட்டுமே களஞ் சியப்படுத்தக்கூடிய வசதிகள் உள் ளன.

தற்பொழுது பெருமளவான விவ சாயிகள் நெற் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதால் அறுவடை செய்யும் நெல்லைக் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்த முடியாத நிலை யில் நெல் சந்தைப்படுத்தும் சபை யினர் உள்ளனர். இம்முறை சிறு போகத்தின்போது விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்ட நெல்லைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கை யில் ஈடுபட்டபோதும் போதிய களஞ் சிய வசதியின்மையால் தாம் கொள் வனவு செய்யும் நடவடிக்கையை இடை நிறுத்தியுள்ளனர் என்றும், ஆனாலும் மட்டுப்படுத்தப்பட்ட அள வில் வெள்ளை அரிசி நெல்லை மட் டும் கொள்வனவு செய்து வருவ தாகவும் நெல் சந்தைப்படுத்தும் சபையினர் தெரிவித்தனர்.



நெல் கொள்வனவு திடீரென இடை நிறுத்தப்பட்டமையால் நெல்லை சந்தைப்படுத்துவதற்காக இரண்டு மூன்று நாள்கள் காத்து வரிசையில் நின்ற நூற்றுக்கணக்கான உழவு இயந்திரங்களுடன் விவசாயிகள் திருப்பிச் சென்றுள்ளனர்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.சிவநேசன் நேரில் சென்று நிலை மையை ஆராய்ந்த பின்னர் மாவட் டச் செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனுடன் தொடர்பு கொண்டு கலந்துரையாடியுள்ளார். அதை யடுத்து களஞ்சியசாலைக்குச் சென்ற மாவட்டச் செயலக உதவித் திட்ட மிடல் பணிப்பாளர் வி.முகுந்தன் நிலைமைகளை விவசாயிகளிட மும் களஞ்சிய முகாமையாளரி டமும் கேட்டறிந்தார்.

அத்துடன் ஒட்டுசுட்டான் பகுதி விவ சாயிகள் தமது உற்பத்தி நெல்லை மாங்குளத்திலுள்ள நெல் சந்தைப் படுத்தும் சபையின் களஞ்சிய சாலையில் கொடுப்பதற்கும் உரி மாற்று ஒழுங்குகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன என்றும் தெரிவிக் கப்பட்டது. (ற-102)

# தெய்வீக இசைப்பேருரை

யாழ்ப்பாணம், செப்.7

நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நடைபெறும் கந்தபுராண தெய்வீகத் தொடரிசை பேருரையில் இருபதாம் நாளான இன்று 'திருப்பெருவடிவம்' இடம்பெறவுள்ளது. நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் மாலை 6.45 மணிக்கு இடம்பெறும் நிகழ்வில் நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை.நித் தியானந்தசர்மா பக்க வாத்தியசகிதம் இசைப்பேருரை ஆற்ற வுள்ளார். (ற-10)

# வரி செலுத்துவதில் விவசாயிகள் மும்முரம்

வரணி, செப்.7

சாவகச்சேரி கமநல சேவை நிலையத்தில் தற்சமயம் ஏக்கர் வரி செலுத்தும் நடவடிக்கைகளில் விவசாயிகள் ஈடுபட்டிருப் பதை நாளாந்தம் காணமுடிகின்றது. சுமார் 2 மாதங்களுக்கு முன்பு ஏக்கர்வரியை செலுத்து மாறு கமநல சேவை நிலையம் பிரதேச விவசாய அமைப்புக்கள் ஊடாக தகவல் வெளியிட்டிருந்தது.

இருந்தும் பெரும்பாலான விவசாயிகள் அந்த சமயம் ஏக்கர்வரி செலுத்துவதில் அக்கறை கொண்டிருக்கவில்லை. தற்சமயம் 2015 – 2016 6 ஆம் ஆண்டுகளுக்கு அமைய உரமானிய பதிவு கள் பிரிவு விவசாய சங்கங்களால் ஆரம் பிக்கப்பட்டதை அடுத்து, விவசாயிகள் ஏக்கர் வரி செலுத்தும் நடவடிக்கையில் ஈடுபடுவதை உரிய கமநல சேவை நிலையத்தில் காண முடிகின்றது. (ற-122)

# மாசேரி - குடத்தனை வீதியில் ஒளிராத வீதி விளக்குகள்

வரணி, செப். 7

சாவகச்சேரி பிரதேச சபையால் கடந்த மாத முற்பகுதியில் வரணிப் பிரதேசத்தில் வீதி விளக் குகள் பொருத்தப்பட்டி ருந்த நிலையில் – மாசேரி குடத்தனை பிரதான வீதி யில் பொருத்தப்பட்ட 3 வீதி விளக்குகள் பொருத் தப்பட்ட நாளில் இருந்து ஒளிரவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர் பில் சாவகச்சேரி பிரதேச சபைக்குத் தெரியப்படுத் தப்பட்டது என்றும், எனி னும் ஒரு மாத காலமாகி யும் அவை சீர்செய்யப் படவில்லை என்றும் பொது மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கு மாறு அந்தப் பகுதி மக் கள் கோரிக்கை விடுத் துள்ளனர். (ற-122)

## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி எலிசபெத் சந்தியாப்பிள்ளை

மண்ணில் 20.12.1931 விண்ணில் 07.09.2014

எம்மோடு என்றும் வாழும் இறைவா எம் அன்புத்தாய் வழியாக நீர் எமக்குச் செய்த நன்மைத் தனங்களுக்காக உமக்கு நன்றி
உமது அளவில்லா அன்பினால் அவரது ஆன்மாவிற்கு
அமைதி அளித்து இன்பவான் வீட்டில் இடமளித்தருள வேண்டுகின்றோம்.

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் 21 ஆம் அணியைச் சேர்ந்த எமது அன்பு நண்பன்
வைத்திய கலாநிதி
தி. இளங்கோ அவர்களின் துணைவியார்
**திருமதி சுபாலினி இளங்கோ**
(சிரேஷ்ட விரிவுரையாளர் விவசாயபீடம் கிழக்குப்பல்கலைக்கழகம்)
அவர்களின் மறைவு குறித்த துயரில் பங்கெடுத்து எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆன்மா இறைவனடி சேரப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ் மருத்துவ பீடம் (62843) (14.15) 21 ஆம் அணி நண்பர்கள்

## கண்ணீர் அஞ்சலி



எமது ஆலயத்தின் பரிபாலன சபையின் செயலாளராகிய சின்னத்தம்பி பத்மநாதன் 04.09.2015 அன்று இறைவனடி சேர்ந்ததையிட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். எமது ஆலயத்திற்கு அவர் ஆற்றிய தொண்டுகளையும் சேவையையும் நினைவு கூருவதுடன் அன்னாரின் இழப்பால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

குமரகோட்டம் ஞானவைரவர்
ஆலயபரிபாலன சபையினர்,
குமரகோட்டம் கோண்டாவில்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர் கார்த்திகேசு நடராசா

முருகமூர்த்தி கோயில் வீதி,
கிராம்புவில்
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

## நீங்கா நினைவுகளுடன்

முதலாம் ஆண்டு 9 ஆம் ஆண்டு



மண்ணில் 03.11.1930 விண்ணில் 20.08.2014
திதி: தசமி (07.09.2015)
இளையதம்பி துரைசிங்கம்



மண்ணில் 24.10.1957 விண்ணில் 25.04.2006
துரைசிங்கம் சிவராசா

(62842) (14.15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மொட்டோ எக்ஸ் போஸ் ஸ்மார்ட் கைப்பேசி

மோட்டோலா நிறுவனத்தின் புத்தம் புதிய ஸ்மார்ட் கைப்பேசியான மொட்டோ எக்ஸ் போஸ் தொடர்பான புகைப்படங்கள் உட்பட அதன் சிறப்பம்சங்கள் வெளியிடப் பட்டுள்ளன.
5.43 அங்குல அளவு, 2560 x 1440 Pixel Resolution உடைய Quad HD தொடு திரையைக் கொண்டுள்ளதுடன், Octa Core Snapdragon 810 Processor, பிரதான நினைவகமாக 3GB RAM என்பனவற்றுடன் 32GB அல்லது 64GB சேமிப்பு நினைவகங்களைக் கொண்ட இரு பதிப்புக்களாக வெளியிடப்படவுள்ளது. மேலும் 21 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமரா, 5 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமரா, 3%60 mAh மின்கலம் என்பவற்றையும் கொண்டுள்ளது.

## கூகுளின் புத்தம் புதிய லோகோ!

இணைய உலகை தொடர்ந்தும் கலக்கிக் கொண்டிருக்கும் கூகுள் நிறுவனம், புதிய லோகோவை வெளியிட்டுள்ளது. 1998 ஆண்டு செப்ரெம்பர் மாதம் 4 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட கூகுள் நிறுவனம் தனது 17 ஆண்டு காலப் பூர்த்தியை முன்னிட்டு இப் புதிய லோகோவை வெளியிட்டுள்ளது. மேலும் குறித்த கால இடைவெளிகளில் தொடர்ச்சியாக தனது லோகோவை கூகுள் நிறுவனம் மாற்றி வந்துள்ளமை தெரிந்ததே. இந்தப் புதிய லோகோ மாற்றப்பட்ட செய்தியை கூகுள் டூடுள் ஊடாக நேற்றைய தினம் தனது அனைத்து பயனர்களுக்கும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

**புதிய லோகோவில் உள்ள பத்து முக்கிய அம்சங்கள் இதோ!!**

1. இந்த புதிய லோகோ கூகுளின் ஏழாவது லோகோ.
2. கூகுள் லோகோவை மாற்றுவது புதிதல்ல.ஆனால் கூகுள் முதல் முறையாக லோகோ மாற்றம் பற்றி தனது முகப்பு பக்கத்தில் டூடுல் சித்திரம் மூலம் உலகுக்கு தகவல் தெரிவித்துள்ளது. முகப்பு பக்கத்தில் உள்ள டூடுலை (லோகோ) கிளிக் செய்தால் இது பற்றிய விவரத்தைக் காணலாம்.
3.இந்த புதிய லோகோவில் ஒருவித முழுமையையும், எளிமையையும் கவனிக்கலாம். கணிதவியல் வடிவத்தின் தூய்மை மற்றும் பாடசாலைப் புத்தகத்துக்கான அச்சு வடிவம் இரண்டின் கலவையே இதற்கு காரணம்.
4. கூகுளின் பழைய லோகோவில் பாருங்கள். இ எனும் எழுத்து சற்று சாய்வாக இருக்கும். புதிய லோகோவிலும், இ எழுத்து சாய்ந்தே இருக்கும். கூகுளின் எதையும் வித்தியாசமாக செய்யும் கலாச்சாரத்தின் அடையாளம் இது.
5.புதிய லோகோ மட்டும் அல்ல, புதிய எழுத்துருவும் உருவாக்கப்பட்டுள்ளது. கூகுளின் புதிய சேவைகளை அறிவிக்க இந்த எழுத்துரு பயன்படுத்தப்படும். லோகோ மற்றும் சேவை அறிவிப்புகளுக்கு இடையிலான தனித்தன்மை தொடர்ந்து கடைபிடிக்கப்படும்.
6. இதற்கு முன்னர் செல்போன்களில் குறைந்த வேக இணைப்பு எனில் அதற்கேற்ற கூகுள் லோகோ இடம்பெறும். இனி எல்லா இணைப்புகளிலும் ஒரே லோகோ தான்.
7.பழைய லோகோவின் நிறை தெரியுமா? 14,000 பைட்கள். புதிய லோகோ மிகவும் இலேசானது. 305 பைட் தான் இதன் நிறை.
8. புதிய லோகோவில் சிவப்பு, மஞ்சள்,பச்சை மற்றும் நீலம் ஆகிய வண்ணங்களின் துடிப்பான தன்மை லோகோவின் முழுமைக்கேற்ப பயன்படுத்தப்பட்டுள்ளது.
9. கூகுள் மேற்கொண்டுள்ள லோகோ மாற்றங்களில் இதுதான் மிகவும் பெரியது. இதற்கு முந்தைய மாற்றங்கள் சிறிய அளவிலானவையே.
10. லோகோவின் சுருக்கமான வடிவத்தை குறிக்கும் ஆங்கில எழுத்தான சிறிய ஜிக்கு பதிலாக பெரிய ஜி உருவாக்கப்பட்டுள்ளது. இந்த எழுத்தில் சிவப்பு, மஞ்சள்,பச்சை மற்றும் நீலம் ஆகிய நான்கு வண்ணங்களும் இருக்கும்.

## முடிவுக்கு வருகிறது விண்டோஸ் 10

இயங்குதள வடிவமைப்பில் முன்னணியில் திகழும் மைக்ரோசொப்ட் நிறுவனம் அண்மையில் விண்டோஸ் 10–ஐ அறிமுகம் செய்திருந்தது.
இந்த இயங்கு தளத்துக்கான அப்டேட் மற்றும் ஏனைய உதவிகள் வழங்குவதை 2025 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 14 ஆம் திகதியுடன் முடிவுக்கு கொண்டுவரவுள்ளதாக அந் நிறுவனம் அறிவித்துள்ளது.
அதாவது குறித்த இயங்கு தளத்துக்கான அன்டி வைரஸ் அப்டேட்கள், குறைபாடுகள் நீக்குதல், மேம்படுத்தல்கள் என்பவற்றை நிறுத்தவுள்ளது. இதேவேளை– விண்டோஸ் 7 இங்கு தளத்துக்கான அப்டேட் மற்றும் உதவிகளை 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14 ஆம் திகதியுடனும், விண்டோஸ் 8.1 இங்கு தளத்துக்கான அப்டேட், உதவிகளை 2023 ஆம் ஆண்டு ஜனவரி 10 ஆம் திகதியுடனும் நிறுத்தவுள்ளதாக மேலும் தெரிவித்துள்ளது. இதற்கிடையில் புதிதாக அறிமுகம் செய்யப்படும் விண்டோஸ் இயங்குதளம் 2025 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பாவனையில் இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.




## நல்லூர்த் திருவிழாவை முன்னிட்டு வவுனியாவிலிருந்து பாதயாத்திரை



வவுனியா, செப்.7
நல்லூர் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு வவுனியாவில் இருந்து நேற்று பாதயாத்திரை ஆரம்பமானது.
வவுனியா வேப்பங்குளம் அருள் மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவிலிலிருந்து வேல் தாங்கிய நடை பாதை யாத்திரை காலை 8.30 மணிக்கு ஆலயத்திலிருந்து பூசை வழிபாடுகளின் பின்னர் ஆரம்பமானது.
வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வவுனியா பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் இ. நித்தியானந்தன், கலை இலக்கிய நண்பர்கள் வட்ட தலைவர் தமிழ்மணி அகளங்கன், மற்றும் நிர்வாக அங்கத்தவர்கள், பக்தர்கள்எனப்பலரும்கலந்து கொண்டு சிறப்புப் பூஜை வழிபாட்டை ஆரம்பித்து வைத்தனர்.
வவுனியாவிலிருந்து ஆரம்பித்துள்ள பாதையாத்திரை மன்னார் வீதி ஊடாக வவுனியா நகர் வழியாக யாழ்.வீதியை வந்தடைந்து பின்னர் நல்லூர் நோக்கி செல்லவுள்ளது.
வவுனியாவிலிருந்து யாழ் நல்லூர் செல்லும் வழியில் இருக் கும் ஆலயங்களில் தரித்து அங்கிருக்கும் பக்தர்களையும் அழைத்துக்கொண்டு செல்லவுள்ளதுடன் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நல்லூரை பாதயாத்திரை சென்றடையும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற)



இலங்கை வங்கியின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு முள்ளியவளை இலங்கை வங்கியின் நெறிப்படுத்தலில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள இலங்கை வங்கிக் கிளைகளின் ஊழியர்கள் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையின் இரத்த வங்கியுடன் இணைந்து குருதிக் கொடை வழங்கியுள்ளனர். கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வில் வங்கியின் ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் எனப் பலரும் குருதிக்கொடை வழங்கினர்.
அன்றைய தினம் இரத்த வங்கிப் பிரிவால் சிறந்த குருதிக் கொடையாளர்கள் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். (ற)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசாமில் பெரும் வெள்ளம்

## வெள்ளத்தில் மூழ்கியுள்ள 2000 கிராமங்கள்: 50 பேர் சாவு



புதுடில்லி,செப்.7
இந்தியாவின் அசாம் மாநிலத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக ஏற்பட்ட பெருவெள்ளத்தில் சிக்கி 46 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 16 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 2.26 லட்சம் பேர் பேரிடர் நிவார முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர். அங்குள்ள பிரம்மபுத்திரா ஆறு கரைபுரண்டு ஓடுவதால் 6 மாவட்டங்களில் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பெருவெள்ளத்தினால் 2000 கிராமங்கள் முற்றிலுமாக நீர் சூழ்ந்து காணப்படுகிறது.

பாதிக்கப்பட்ட மக்களுக்காக அசாம் அரசு 300க்கும் மேற்பட்ட நிவாரண முகாம்களை மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் அமைத்துள் ளது. பார்பேட்டா மாவட்டத்தில் உள்ள நகுச்சிபதர் கிராமம் பெரு வெள்ளத்தில் சிக்கி முற்றிலுமாக துண்டிக்கப்பட்டுள்ளது.

விவ்சாயம் மற்றும் மீன்பிடித்தலை முக்கிய தொழில்ாக கொண்ட அசாமின் கிராமப்புறங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. மேலும் அப்பகுதி மக்கள் தண்ணீரால் பரவும் நோய்களாலும் தாக்கப்பட்டுள்ளனர். (ஐ)



கனடா அரசு மேலதிகமான அகதிகள் மற்றும் குடிவரவாளர்களை ஏற்கவேண்டும் எனக் கோரி நூற்றுக்கணக்கான மக்கள் யங் வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு பேரணி ஒன்றை நடத்தியுள்ளனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்கள் பேரணியை யங்–டன்டாஸ் சதுக்கத்தில் இருந்து விக்ரோரியா வீதியில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் அகதிகள் சபையை நோக்கி நடத்தினர்.(ஐ)

## ஐ.நா.மன்றத்தின் தூதர்களாக பிரபலங்கள் நியமனம்



புதுடில்லி,செப்.7
ஐ.நா.மன்றத்தின் சிறப்பு இலட்சிய இலக்குகளை மக்களிடம் எடுத்துரைக்கும் பொருட்டு அதன் தூதர்களாக ஏ.ஆர். ரஹ்மான் உள்ளிட்ட 3 பேரை நியமிக்கப்பட்டுள்ளனர். வறுமை ஒழிப்பு, உணவுப் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, எரிசக்தி பாதுகாப்பு, பாலின பாகுபாடு களைதல், அனைவருக்கும் சமவாய்ப்பு உள்ளிட்ட 17 அம்சங்களைக் கொண்ட சிறப்பு இலட்சிய இலக்குகளை ஐக்கிய நாடுகள் மன்றம் நிர்ணயம் செய்துள்ளது. இவைகுறித்து மக்களிடம்எடுத்துரைக்கும்பொருட்டுசர்வதேச அளவில் பிர பலமானவர்களை பரப்புரைத் தூதர்களாக ஐ.நா. மன்றம் நியமித்து வருகிறது.

அந்தப் பட்டியலில்இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான், பொலிவூட் நடிகர் அக்ஷய் குமார், ஹிருத்திக் ரோஷன் ஆகியோர் இணைந்துள்ளனர். அவர்கள் தவிர அமைதிக்கான நோபல் பரிசு வென்ற மலாலா, மைக்ரோசொப் நிறுவுநர் பில்கேட்ஸ், விஞ்ஞானி ஸ்டீபன் ஹாக்கிங் உட்படப் பலர் விளம்பரத் தூதர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (ஐ)

## தாயார் போதையில் குழந்தைக்குப் பால் கொடுக்கும் நாய்

சாண்டியாகோ,செப்.7
லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஒன்றான சிலியில் பெண் ஒருவர்; எந்நேரமும் போதையில் மிதக்க – எலும்பும் தோலுமாக கிடக்கும் அவரது குழந்தைக்கு ஒரு நாய் தாய்ப்பால் ஊட்டிக் கொண்டிருந்த காட்சியை கண்ட மனித உரிமை ஆர்வலர்கள் கொதிப்படைந்துப் போயுள்ளனர். சிலி நாட்டின் தலைநகரான சாண்டியாகோவில் இருந்து சுமார் ஆயிரம் மைல் தூரத்தில் உள்ள ஒரு ஊரில் இருக்கும் மெக்கானிக் ஷெட் அருகில் இந்த நெஞ்சைப் பிழியும் சோகக் காட்சியை கண்ட ஒருவர், சுமார் இரண்டு வயது மதிக்கத்தக்க அந்தக்குழந்தையின்பரிதாபநிலையைக் கண்டு கொதிப்படைந்து, அந்தக் குழந்தையை தூக்கிச் சென்று குழந்தைகள் நல்வாழ்வுத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளார். போதிய போசாக்கு இல்லாமல், எலும்பும், தோலுமாக காணப்படும் அந்தக் குழந்தை, தோல் வியாதியால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டது. சில மணி நேரத்துக்குப் பின்னர் குடி போதையில் தள்ளாடியபடி வந்த குழந்தையின் தாயாரை மருத்துவமனை ஊழியர்கள் அடித்து விரட்டியுள்ளனர். (ஐ)

# ஆப்கானிஸ்தானில் 13 பேர் சுட்டுக்கொலை



காபூல், செப்.7
ஆப்கானிஸ்தானில் பால்க் மாகாணத்தில் ஹசாரா இன மக்கள் நேற்று வாகனங்களில் வந்து கொண்டிருந்தனர். அப்போது துப்பாக்கி ஏந்திய தீவிரவாதிகள் 2 வாகனங்களைத்தடுத்து நிறுத்தினர். அதில் பயணம் செய்த ஆண்களை கீழே இறக்கி வரிசையாக நிற்க வைத்தனர். பின்னர் அவர்களை சரமாரியாக துப்பாக்கியால் சுட்டுக் கொன்றனர். இத்தாக்குதலில் 13 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவத்துக்கு தலிபான்கள் பொறுப்பு ஏற்கவில்லை. எனவே எந்தத் தீவிரவாத அமைப்பு தாக்குதல் நடத்தியது எனத் தெரியவில்லை.

பொதுவாக பால்க் மாகாணம் வன்முறையின்றி மிகவும் அமைதியாக இருந்து வந்துள்ளது. அங்கு கொடூரத் தாக்குதல் நடந்திருப்பது அந்தப் பகுதி மக்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது. (ஐ)

## யேமன் ஆயுத கிடங்கில் தாக்குதல் இராணுவ வீரர்கள் 45 பேர் சாவு

யேமனில் கடந்த 6 மாதங்களாக உள்நாட்டு போர் நடைபெற்று வருகிறது. ஷியா பிரிவைச் சேர்ந்த ஹவுதி கிளர்ச்சியாளர்கள் அரசுக்கு எதிராகத் தாக்குதல் நடத்தி வருகின்றனர். சவூதி அரேபியா தலைமையிலான ஐக்கிய அரபு எமிரேட் இராணுவம் அங்கு முகாமிட்டு அவர்கள் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. எனவே, அவர்கள் கிழக்கு மாகாணத்தில் உள்ள மாரிப் இராணுவத் தளத்தில் தங்கியுள்ளனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் அங்குள்ள ஆயுதகிடங்கில் திடீரென வெடிவிபத்து ஏற்பட்டது.

இதனால் அங்கிருந்த குண்டுகள், ரொக்கெட் குண்டுகள், வெடி பொருளகள் வெடித்து சிதறித் தீப்பிடித்தன. அங்கு தங்கியிருந்த ஐக்கிய அரபு எமிரேட்டைச் சேர்ந்த 45 வீரர்கள் உடல் கருகி உயிரிழந்துள்ளனர். யேமனில் முகாமிட்ட 6 மாதங்களில் நடந்த தாக்குதலில் ஐக்கிய அரபு எமிரேட் இராணுவத்துக்கு இதுவே மிகப்பெரிய இழப்பாக கருதப்படுகிறது. எனவே, அங்கு 3 நாள் துக்கம் கடைப்பிடிக்கப்பட்டது. (ஐ)

## பணத்தின் மதிப்பைக் குறைக்க ஜி-20 நாடுகள் எதிர்ப்பு



அங்காரா,செப். 7
ஜி–20 நாடுகளின் நிதி அமைச்சுக்கள் மற்றும் மத்திய வங்கி தலைவர்களின் 2 நாள் மாநாடு, துருக்கி நாட்டின் தலைநகர் அங்காராவில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. மாநாட்டின் நிறைவில், ஒரு பிரகடனம் வெளியிடப்பட்டது. அதில், நாடுகள் போட்டிபோட்டு தங்களது நாட்டுப் பணத்தின் மதிப்பைக் குறைக்கக்கூடாது என்றும், பணத்தின் மதிப்பைச் சந்தையே தீர்மானிக்கட்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. அண்மையில் சீனா தனது பணமான யென் மதிப்பைகுறைத்தமை உலகம் முழுவதும் அதிர்வுகளை ஏற்படுத்தியது. அந்த முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இந்தப் பிரகடனம் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், வரி ஏய்ப்புக் குறித்த தகவல்களை தாங்களாகவே பரிமாறிக் கொள்ளும் முறையை உடனே நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும். தீவிரவாத எதிர்ப்புத் தான், அனைத்து நாடுகளின் முன்னுரிமைப் பணி. எனவே, தீவிரவாதத்துக்கு நிதி வரும் வழியை அடைப்போம்.

தீவிரவாதிகளின் சொத்துக்களை முடக்குவது தொடர்பாக நாடுகளிடையே ஒத்துழைப்பை அதிகரிப்போம் என்றும் அந்தப் பிரகடனத்தில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிகள் வாழ்வில் புதிய மாற்றம்

## ஆஸ்திரியாவில் அதிரடி






வியட்நாம்,செப்.7
உலகின் மனசாட்சியை உலுக்கிய சிரியாவைச் சேர்ந்த 3 வயதுச் சிறுவனின் சாவுக்குப் பின்னர் அகதிகளின் வாழ்வில் புதிய மாற்றம் சிறிய அளவிலேனும் ஆரம்பித்துள்ளது. இதுவரை ஹங்கேரியிலிருந்து பஸ் மூலம் பயணம் செய்து வந்த அகதிகளைப் பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டுத் தடுத்து வந்த ஆஸ்திரிய அரசு, அண்மையில் அய்லன் என்ற 3 வயதுச் சிறுவன் துருக்கிக் கடற்கரையில் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் சூடு பிடித்ததை அடுத்து, அதிகரித்த நெருக்கடி காரணமாக த்னது கொள்கையைச் சற்றுத் தளர்த்தியுள்ளது சிரிய. உள்நாட்டுப் போரில் இருந்து தப்பி வந்த அகதிகள் 4 ஆயிரம் பேர், நேற்று முன்தினம் புடாபெஸ்ட்டில் இருந்து பஸ்கள் மூலம் ஆஸ்திரியாவின் எல்லையிலுள்ள நிக்கல்ஸ்டோர்ப் நகரை வந்தடைந்தனர். அவர்களுக்குத் தேவையான உணவு மற்றும் சூடான போர்வைகளை வழங்கி ஆஸ்திரியாவின் செஞ்சிலுவைச் சங்கம் அந்த அகதிகளை வரவேற்றது. மேலும் தமது நாட்டுக்கு வந்து சேர்ந்துள்ள அகதிகள் விரும்பினால் தமது நாட்டிலேயே தஞ்சம் கோரலாம் அல்லது ஜேர்மனிக்குச் செல்லலாம் என ஆஸ்திரிய அரசு அறிவித்துள்ளது.

இதேவேளை– ரயிலில் செல்லத் தங்களை அனுமதிக்காததால் 100 மைல் தூர நடைபயணத்தில் ஆயிரக்கணக்கான அகதிகள் ஆஸ்திரியாவைச் சென்றடைந்துள்ளனர். இந்த அகதிகள் ஆஸ்திரியாவுக்கு அழைத்துச் செல்லப்படுவதாகக் கூறி அவர்களில் சிலரை அகதிகள் முகாமில் அடைக்க ஹங்கேரி அரசு முயன்றது. இதனால் ஆத்திரமடைந்த அகதிகள் இனியும் ஹங்கேரியை நம்பிப் பயனில்லை என ஆஸ்திரியாவுக்கு நடந்து சென்றுள்ளனர்.

இதுகுறித்து அந்த நாட்டின் உள்துறை அமைச்சர் ஜோகன்னா மிக்லிட்னர் வெளியிட்டுள்ள செய்தியில், 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அகதிகள் நேற்று முன்தினம் ஆஸ்திரியா வந்துள்ளனர். அவர்கள் அனைவரும் தஞ்சம் கோரி விண்ணப்பிக்கலாம். தற்போது, 10 அகதிகள் தஞ்சம் கோரி விண்ணப்பித்துள்ளனர். எங்களது நாட்டுப் பொலிஸார் இந்த மக்கள் மீதும், அவர்களின் குடும்பம் மற்றும் குழந்தைகள் மீதும் எந்தவிதமான அடக்கு முறையையும் பிரயோகிக்கமாட்டார்கள் என்பதை அழுத்தத்துடன் குறிப்பிடுகிறேன்– எனத் தெரிவித்துள்ளார். (ஐ)

## ஒரே பாடசாலையில் 23 இரட்டையர்கள்



டான்லி,செப்.7
ஹாண்டுராஸ் நாட்டில் உள்ள டான்லி நகரத்தில் ஒரே பாடசாலையில் 23 இரட்டையர்கள் படித்து வருவது நகர வாசிகளுக்கு பெருமிதம் தரும் அதிசயமாக விளங்குகிறது. அந்தப் பாடசாலை மாணவர்களுக்கு வகுப்பறை, உணவகம், விளையாட்டு மைதானம் என எந்தப் பக்கம் திரும்பினாலும் ஏதேனும் இரட்டையர்களைப் பார்க்கக்கூடிய வாய்ப்புக் கிடைக்கிறது. இரட்டைப் பிறவிகளில் சகோதரன், சகோதரியாக பிறந்தவர்களும் உள்ளனர். இவர்களின் குண இயல்புகள் மூலம் பிரித்து அடையாளம் காணமுடியும் என சில மாணவர்கள் தெரிவிக்கின்றனர். அதேவேளை, இரட்டையர்களாக பிறந்தவர்கள் தங்கள் பெற்றோராலேயே தம்மை அடையாளம் கண்டு பிடிக்க முடியவில்லை என்றும் கூறு கின்றனர். ஒருவருக்குப் பதில் இன்னொருவர் பரீட்சை எழுதும் மோசடிக் குறும்புகள் அரங்கேறுவதாக பாடசாலை நிர்வாகத்தினரும் தெரிவித்துள்ளனர்.

உருவ ஒற்றுமையால் சில குழப்பங்கள் நிலவிய போதிலும், இரட்டையர்கள் அதிக எண்ணிக்கையில் இருப்பது அதியம் என்றும் கடவுளின் ஆசீர்வாதம் என்றும் டான்லி நகர வாசிகள் தெரிவித்துள்ளனர்.(ஐ)

## மீண்டும் எபோலா அச்சம்

### *தனிமைப்படுத்தப்பட்டுள்ள கிராமம்*



சியோல்,செப்.7
எபோலா கொள்ளை நோயிலிருந்து சியேரா லியோன் நாடு முற்றாக விடுபட்டு விட்டதாக அறிவிக்கப்பட இருந்த நிலையில் பெண் ஒருவர் அந்த வைரஸால் பாதிப்புற்றுள்ளார்.

சியேரா லியோனில் எபோலா வைரஸ் தொற்றியிருப்பதாக உறுதி செய்யப்பட்ட பெண் ஒருவர் உயிரிழந்ததை அடுத்து, அங்கு கிட்டத்தட்ட ஆயிரம் பேர் தனிமைப்படுத்தப் பட்டுள்ளனர்.

வடக்கில் உள்ள கிராமம் ஒன்றில் மூன்று வாரங்களுக்கு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள இந்த தனிமைப்படுத்தல் நடவடிக்கையின்படி, ஊரில் உள்ள மக்கள் ஒரு வீட்டிலிருந்து இன்னொரு வீட்டுக்குப் போக முடியாத வகையில் ஊரடங்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. சியேரா லியோன், கினி மற்றும் லைபீரியா ஆகிய நாடுகளில் எபோலா நோய்த் தொற்றுக்கு இதுவரை சுமார் 11 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## உலகிலேயே குள்ளமான மனிதர் சாவு



லண்டன்,செப்.7
உலகிலேயே மிகவும் குள்ளமான மனிதரான நேபாள நாட்டைச் சேர்ந்த சந்த்ரா பகதூர் டான்ஜி என்பவர் உடல் நலக் குறைவால் சாவடைந்துள்ளார். இவர் உலகின் சாதனைகளைப் பதிவு செய்யும் புத்தகமான கின்னஸ் புத்தகத்தில் கடந்த 2012 ஆம் ஆண்டில் உலகின் குள்ள மனிதன் என்று பதிவாகிப் புகழ்பெற்று விளங்கினார். இவரின் உயரம் 54.6 செ.மீ. ஆகும். நேபாளியான இவர் நேபாள நாட்டின் ரீம் கோலி என்ற கிராமத்தில் வசித்து வந்தார். கடந்த பல மாதங்களாக உடல் நலக் குறைவு ஏற்பட்டதை அடுத்து வெளி நாட்டில் தங்கிச் சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில் சிகிச்சை பயனளிக்காமல் அவர் சாவடைந்துள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இர.விஜய்
காங்கேசனூர்

# 'தொண்டராசிரியர்' பிரச்சினைகள் தீரப் போவது எப்போது?





சுட்டெரிக்கும் வெயில் அந்தச் சுடு கதிரின் தாக்குதலையும் தாங்கிக் கொண்டு தார் வீதியில் சுலோகங்களுடன் அமர்ந்தபடி பல பெண்களும்... பல ஆண்களும்... எங்கிருந்து வந்தானோ தெரியாது ஒரு பாதுகாப்பு ஊழியன்... அங்கே அமர்ந்திருப்பவர்கள் ஆசிரியர்கள் என்பதையும் பொருட்படுத்தாது..தாக்கிவிட்டு அடித்து மூடுகிறான் இரும்புக் கதவுகளை. அந்தத் தாக்குதலில் ஒரு பெண் ஆசிரியருக்கு முழங்காலில் பலத்த அடி... இதுதான் தொண்டராசிரியர்களின் அவல வாழ்வு... இந்த உதாரண சம்பவம் ஒன்று மட்டுமல்ல.. இன்னும் பலப்பல... அவமானங்களையும் வடுச்சொற்களையும் கல்வித் திணைக்கள அதிகாரிகளிடம் இருந்தும் கல்வி அமைச்சுக்குப் பொறுப்பானவர்களிடம் இருந்தும் பெற்றுக் கொண்டுதான்... தம்நியமனங்களுக்காகக் கால்கள்தேய அலைகிறார்கள் அந்த அரும் பெரும் சேவையாளர்கள்...

சரி... யார் இந்தத் தொண்டராசிரியர்கள்? இவர்களுக்கு ஏன் நியமனம்? என்று முணுமுணுப்பவர்களுக்கு சில விடயங்களைத் தெளிவுபடுத்த வேண்டிய தேவை எமக்குண்டு. ஆசிரிய நியமனம் பெறும் ஒருவர் வடக்குக் கிழக்கில் மட்டும் அல்ல இலங் கையின் எப்பாகங்களுக்கும் சென்று கடமை யைப் பொறுப்பேற்க வேண்டும் என்ற நிபந் தனையுடனேயே பணியை, பதவியைப் பொறுப்பேற்கிறார்கள். ஆனால் எத்தனைபேர் அவ்வாறு சென்று தம் கடமையை பொறுப்பேற்கிறார்கள் என்றால்...... அதற்கான விடை கல்வித்திணைக்களத்துக்கும்... கல்வியமைச்சின் அதிகாரிகளுக்கும் மட்டுமே தெரியும்... நாம் அறிந்தவரை பெரும்பாலானவர்கள் அதுவும் அரசியல் செல்வாக்கு உள்ளவர்கள் அவ்வாறு தூர இடங்களுக்கும் அதிகஷ்டப் பிரதேசத்துக்கும் செல்வது மிகமிகக் குறைவு. எனவே அவர்களின் பணியை, கடமைகளை அந்தப் பிரதேசங்களில் செய்து முடிப்பதற்கு அதிபர்களும் ஆசிரியர்களும் சேர்ந்து உருவாக்குபவர்களே இந்தத் தொண்டராசிரியர்கள் ஆவார்கள்.

இந்தத் தொண்டராசிரியர்கள் எழுந்தமானமாக பாடசாலைகளில் சேர்க்கப்படுபவர்கள் அல்லர். அவர்களது கல்வித் தாராதரம், கற்பிக்கும் திறன் போன்றவற்றை கருத்தில் கொண்டே சேர்க்கப்படுகிறார்கள். கற்பிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்படுகிறார்கள்... இருப்பினும் அவர்களுக்கு அந்தப் பாடசாலை அதிபர்களால் வழங்கப்படுகின்ற வேதனம் என்பது ரூபா மூவாயிரத்தைத் தாண்டாது. அதுவும் ஒழுங்காக வழங்கப்படுவதும் இல்லை. சில அதிபர்கள் சம்பளங்களை வழங்காமல் நியமனம் கிடைக்க வழி செய்கிறேன்... கடிதம் தருகின்றேன் என்று நம்பிக்கை வார்த்தைகளைக் கூறி அவர்களைப் பணியில் தொடரச் செய்கிறார்களே தவிர இது தேவையில்லை என்று எந்த அதி பரும் இது நாள் வரை கூறியதில்லை...

அதிபர்களும், பாடசாலைகளின் சூழ்நிலைகளும் இப்படி இருக்கையில் கல்வித் திணைக்களமோ இதை வெளிப்படையாக விரும்ப மாட்டாது போல நடந்தாலும்... கடந்தகால வரலாறுகளை எடுத்து நோக்கும் போது தொண்டராசிரியருக்கு நியமனங்களை அரசியல் வாதிகள் பெற்றுக்கொடுத்தாலும் அதற்குப் பின்புலமாக, உந்துதலாக, பக்கபலமாக இருந்து வந்துள்ளதை மறுத்துவிட முடியாது. அப்படி இருக்க இந்தமுறை தொண்டராசிரியர்கள் நியமனத்துக்கு கவனவீர்ப்புப் போராட்டங்களை நடத்தியபோது, ஏன் கடும் நடவடிக்கைகளை, மனநோகும் செயற்பாடுகளை எடுக்கிறார்கள் என்பதுதான் புரியாத புதிராக உள்ளது.

தொண்டராசிரியர்கள் தாமாகவோ வலுக்கட்டாயமாகவோ இந்தப் பணியைத் தொடரவில்லை. எனவே அவர்களைச் சேர்த்துக் கொள்ள முன் ஏன் தெளிவான ஒரு முறைப்பாட்டை கல்விசார் அதிகாரிகள் வெளிப்படுத்தவில்லை. அரசும் ஏன் இந்த விடயத்தில் ஒரு வர்த்தமானி அறிவிப்பை வெளியிடாமல் சுற்றறிக்கைகள் மூலம் மட்டும் அறிவிக்கின்றது. அதிபர்களுக்கு அனுப்பப்படுகின்ற இந்த சுற்றறிக்கைகளை எத்தனை அதிபர்கள் பகிரங்கப்படுத்தி தொண்டராசிரியர்களுக்கு நிலைமையை விளங்கப்படுத்தி இருக்கிறார்கள். என்றால் அது இல்லை எமது பதிலாகும்.

எனவே, தம் கடமைகளை இவர்களைக் கொண்டு செய்துமுடிக்க கறிவேப்பிலையாகப் பயன்படுத்திவிட்டு தூக்கி ஏறிவதுதான் அனைவரது கடமையும் போல உள்ளது. மனுநீதி பற்றி போதித்த கல்வி அதிகாரிகள் இவர்கள் மீது காட்டுத்தர்பாரை கட்டவிழ்த்து விடுவது எந்த வகையில் நியாயமாகும்?

அது மட்டுமல்ல, இந்தத் தொண்டராசிரியர் நியமனம் அனுமான் வால் மாதிரி நீண்டுகொண்டு செல்ல நியமனங்களில் இடம்பெறுகின்ற குளறுபடிகளும் காரணமாகும். ஒவ்வொரு தடவையும் தொண்டராசிரியர் நியமனம் வழங்கப்படமாட்டாது எனக் கூறும் அரசுகள், நியமனங்களை வழங்கும் போது, பணியிலுள்ள அனைவரையும் நியமனத்துக்குள் உள்வாங்காது (இது திறைசேரிக்கு மேலும் சுமை என்பது தெரியும்) வருடங்களின் அடிப்படையிலும், செல்வாக்குகளின் அடிப்படையிலும் உள்வாங்கும் போதுதான் இந்த நியமனங்கள் தமக்கும் வேண்டும் என்று பாதிக்கப்பட்டவர்கள் கேட்பதில் என்ன அநீதி உள்ளது. கடந்த தடவை தொண்டராசிரியர் நியமனமானது ஒரு அரசியல் கட்சியினால் வழங்கப்பட்டபோது, வன்னி மாவட்டத்தில் பல தொண்டராசிரியர்கள் புலி முத்திரை குத்தப்பட்டும், புலிகளின் ஆதரவாளர்கள் என்று அடையாளம் காணப்பட்டும் பணியில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. 2009 போர் முடிவடைந்த பின்னர் செட்டி குளம் மெனிக்பாம் முகாம்களில் மக்கள் அடைக்கப்பட்டுக் கிடந்தபோது, நியமனம் பெற்ற ஆசிரியர் வளம் அங்கு இல்லாத போதும், அங்கு கல்விப் பணியை வழங்கிய தொண்டராசிரியர்கள் இன்று வரை நியமனத்துக்கு ஏங்குகிறார்கள் என்பதை எத்தனைபேர் ஈரநெஞ்சத்தோடு பார்க்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் ஏன் நியமனம் அன்று வழங்கப்படவில்லை. அன்று வழங்கப்பட்டு முடிவுக்கு இந்தப் பிரச்சினையை கொண்டு வந்திருந்தால் ஏன் இந்தப் போராட்டங்களும், கவனவீர்ப்புகளும் .

ஆனால், நியமனங்கோரி தொண்டராசிரியர்கள் அரச தரப்பு வேட்பாளர் இராமநாதன் அங்கஜனை நாடிய போது, அவர் இந்தச் சிக்கலை நன்கு உணர்ந்தவர்போலவே கதைத்து அவர்களை ஆறுதல்படுத்தி உள்ளார். அவரது கூற்றுப்படி இந்த முறையோடு ஆண்டுவேறுபாடு இன்றி, அனைவரது நியமனங்களையும் பெற்றுக் கொடுத்து, இனி வரும் காலங்களில் தொண் டராசிரியர் பிரச்சினை ஒன்றை இருக்காமல் செய்ய வழி ஏற்படுத்துகின்றேன் என்று கூறியுள்ளமை பிரச்சினைகளை புரிந்தவர்களும் உள்ளார்கள் என்பதை வெளிப் படுத்தி உள்ளது.

அதுமட்டுமல்ல ஐக்கிய தேசியக் கட்சியின் விஜயகலா மகேஸ்வரனும் தொண்டராசிரியர்கள் அனைவருக்கும் நியமனம் பெற்றுத் தர வழி ஏற்படுத்துவதாகக் கூறி உள்ளமையும் ஒரு முன்னேற்றமான விடயமாகும். அத்தோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரு சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த விடயத்தில் அக்கறை செலுத்துவதாக அறிகின்றோம். இவை செயல் வடிவம் பெறவேண்டும் என்பதே அனைத்துத் தொண்டராசிரியர்களின் வேண்டுகோளாகும். இனிமேலும் ஏமாற்றுப்படாமல், இனி மேலும் வதைக்கப்படாமல் தொண்டராசிரியர் கௌரவமான நிலைபெற வேண்டும் என்பதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும். கல்வித் திணைக்கள மேலதிகாரிகளுக்குத் தெரியாமல் பாடசாலை அதிபர்கள் தம் தேவையை (கற்பித்தல் தேவை) நிறைவேற்ற தொண்டராசிரியர்களை பணியில் வைத்திருந்தமை தவறாகலாம். ஆனால் நியமனம் கூடி வருகின்ற வேளையில் அந்த அதிபர்களை அச்சுறுத்தும் வகையில் விளக்கக் கடிதங்களை அனுப்புவதும், அதிபர்களின் சலுகைகளை நிறுத்தப் போவதாக அறிவித்தல் விடுப்பதும் நியமனம் சார்ந்த விடயங்களைப் பாதிக்கும் செயலாக அமைந்துவிடலாம். வெண்ணை திரண்டு வர தாழி உடைந்தது போல, இருக்காமல்... தொண்டராசிரியர்கள் அந்தப் பாடசாலைகளின் தொடர் சேவைக் கடிதத்தை ஏனும் பெற்று நியமன விடயங்களைப் பூரணப்படுத்த, ஒற்றுமையாக அனைவரும் செயற்பட்டு இந்தமுறையோடு இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க ஒன்று சேர் வோம்... காலத்தினால் செய்த நன்றி சிறிது எனினும் அது ஞாலத்தில் மானப் பெரிது...

**"தொண்டராசிரியர் நியமனம் அனுமான் வால் மாதிரி நீண்டுகொண்டு செல்ல நியமனங்களில் இடம்பெறுகின்ற குழறுபடிகளும் காரணமாகும். ஒவ்வொரு தடவையும் தொண்டராசிரியர் நியமனம் வழங்கப்படமாட்டாது எனக் கூறும் அரசுகள், நியமனங்களை வழங்கும் போது, பணியிலுள்ள அனைவரையும் நியமனத்துக்குள் உள்வாங்காது (இது திறைசேரிக்கு மேலும் சுமை என்பது தெரியும்) வருடங்களின் அடிப்படையிலும், செல்வாக்குகளின் அடிப்படையிலும் உள்வாங்கும் போதுதான் இந்த நியமனங்கள் தமக்கும் வேண்டும் என்று பாதிக்கப்பட்டவர்கள் கேட்பதில் என்ன அநீதி உள்ளது?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஸ், மினிபஸ்களுக்கு நாவலர் வீதி வழியான போக்குவரத்துத் தடை

வரலாற்றுப் பெருமைமிகு நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திருவிழா ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. கடந்த காலங்களில் யாழ். பஸ் நிலையத்திலிருந்து பருத்தித்துறை மற்றும் அச்சுவேலி செல்லும் மினி பஸ்கள் ஆனைப்பந்தி சந்தியில் திரும்பி நாவலர் வீதி வழியாக நல்லூர் குறுக்கு வீதி ஊடாகச் சென்று பருத்தித்துறை வீதியைச் சென்றடைந்தன. இதேவழித் தடத்தைத்தான் அச்சுவேலி மற்றும் பருத்தித்துறை ஆகிய இடங்களில் இருந்து வரும் பயணிகளின் வாகனங்களும் பயன்படுத்தின.

ஆயினும் இந்தமுறை அவ்வாறில்லாமல் இங்கிருந்து செல்லும் பயணிகள் வண்டிகள் அதேவழித்தடத்தில் பயணிக்க, அங்கிருந்துவரும் பயணிகள் வண்டிகள் முத்திரைச் சந்தியில் திரும்பி கச்சேரி நல்லூர் வீதி, றக்கா வீதி, இராசாவின் தோட்ட வீதி, ஸ்ரான்லி வீதி வழியாகவே யாழ்.நகரை அடைகின்றன. பாரவூர்திகளும் அனுமதிக்கப்படுவதில்லை என்பது வேறுவிடயம்.

கடந்த புதன்கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றுக்கு வந்தவர்கள் வருவதற்கும் மீண்டும் திரும்பிச் செல்லவும் பெரும் சிரமப்பட வேண்டி இருந்தது. அதேநேரம் தினமும் கோயிலுக் குச் செல்பவர்கள் பாடுதான் பெரும் துன்பம். இந்த ஏற்பாடு வேறு சில இடங்களில் உள்ளதாகவும் அறியமுடிகிறது. பாவம் மக்கள் விடயம் புரியாத வர்கள், இறங்கிய இடத்தில் ஏறலாம் தானே என்ற எண்ணத்தில் வந்தவர்கள் வீதியில் நீண்ட நேரம் காத்திருந்து, பஸ் வராது என யாராவது தெரிவித்த பின்னரே நடந்தோ, ஓட்டோவிலோ செல்ல வேண்டியுள்ளது. பஸ் நடத்துநர்களாவது, தங்கள் வாகனங்களில் கோயிலுக்கு என்று வந்து இறங்குவோரிடம் பஸ் மீண்டும் இந்த வழித்தடத்தில் வராது என்பதைத் தெரிவிக்கும் தார்மீக உதவியைச் செய்யலாமே.

இனித்தான் சனங்கள் ஆலயத்துக்கு அதிகமாகப் போவார்கள். இவர்களுக்காகவாவது, தற்காலிக ஏற்பாடுகளைச் செய்யக் கூடாதா?

**செல்வவேலாயுதம்,** *யாழ்ப்பாணம்.*

## மாறுபடும் பாதுகாப்புக் கட்டணங்கள்

நல்லூர் ஆலயத்திருவிழாவுக்குச் செல்லும் வாகனங்களுக்கு வாகனப் பாதுகாப்பு நிலையங்களில் சைக்கிள் உட்பட பல்வேறு வகையில் கட்டணங்கள் அறவிடப் படுவதாக பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியிருக்கின்றன. அவைகளையாவது திருவிழாக் காலத்தில் உழைப்புக்காக ஏற்படுத்தப்பட்ட தற் காலிக நிலையங்கள் என்று விட்டு விடுவோம் என ஒரு கதைக்கு வைத்துக் கொண்டாலும், யாழ். நகரிலே அதுவும் போதனா வைத் தியசாலை பாதுகாப்பு நிலையத்தில் சைக்கிள் ஒன்றுக்கு 10 ரூபா அறவிடப்படுகிறது. அதேசமயம் இந்தத் தரிப் பிடத்தின் அயலில் கூப்பிடு தூரத்திலுள்ள யாழ்.மாநகர சபை மின்சார நிலைய வளவில் இருக்கும் பாதுகாப்பு நிலையத்தில் 5 ரூபாவே அறவிடப்படுகிறது.




இந்தக் காலத்தில் 5 ரூபா ஒரு காசோ இதை ஏன் பெரிதுபடுத்துவான் என்றால் நோயாளர் வந்துபோகும் ஒரு பாதுகாப்பு நிலையத்தில் சைக்கிளுக்கு 10 ரூபா என்றால், காலையில் 6 மணிக்கு தண்ணிவென்னி இல்லாமல் கடைகண்ணிக்கு நம்பர் எடுக்க வரும்போது, 10 ரூபாவுக்கு ரிக்கட் எடுத்தவர் அயலில் சென்று வர சைக்கிளை எடுத்தால் மீண்டும் கிளினிக்கு டொக்டரிடம் காட்ட வரும்போது, மீண்டும் 10 ரூபா கொடுத்தே ஆகவேண்டும். இவர்களுக்காவது ஏதும் சலுகைகள் செய்யக் கூடாதா? விஷயம் தெரிந்தவர்கள் தெரியாதவர்களுக்குத் தெரியப் படுத்துங்கள்.

**நா.வித்தியாதரன்** *,வட்டுக்கோட்டை*

## பக்தர்களின் அசௌகரியம் இனியாவது நீங்குமா?

நாட்டின் அனைத்துப் பாகங்களிலிருந்தும் பக்தர்கள் நாடி வருகின்ற நல்லூர்க்கந்தன் ஆலயத்தினுடைய வருடாந்த உற்சவம் நடைபெற்றுக்கொண்டி ருக்கின்றது. இந்த வேளையில் பக்தர்களுக்கான போக்குவரத்து, குடிதண்ணீர், கழிப்பறைகள் போன்ற வசதிகள் சீரான முறையில் செயற்படுத்தப்பட்டிருப்பினும், கழிப்பறைகள் தொடர்பில் சில குறைபாடுகளைக் காணக் கூடியதாக உள்ளது. ஆலயத்தின் மேற்குத்திசையில் அமைந்துள்ள கழிப்பறைத் தொகுதியில் ஆண்களுக்கான சிறுநீர்கழிக்கும்பகுதி உரிய முறையில் வடிவமைக்கப் பட வில்லை. அதனால் பல அசௌகரியங்களை ஆண்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அத்துடன் ஆலயத்தின் கிழக்குத்திசையில் மாநகரசபையின் அலுவலகத்துக்கு அருகில் அமைந்துள்ள காணியில் கழிப்பறைகளும், குளிக்குமிடங்களும் காணப்படுகின்றன. ஆனால் அவற்றைப் பயன்படுத்துவதற்குச் செல்லும் வகையில் காணியினுடைய 'கேற்' திறந்து விடப்படாது எப்பொழுதும் பூட்டப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றது. அதனால் இயற்கை உபாதைகளைத் தாங்கிக் கொள்ள முடியாத நிலையில சிலர் அங்குள்ள குழாய்க்கிணற்றுக்கு அருகில் அறுந்து கிடக்கும் முட்கம்பிகளைக் கடந்து சென்று வருகிறார்கள். அதனால் காயங்களுக்கு ஆளாகும் நிலையும் ஏற்படுகின்றது.

எனவே இனி வரப்போகும் திருவிழாவின் இறுதிக் காலப்பகுதியில் பக்தர்களின் கூட்டம் பன்மடங்கு அதிகரிக்குமாதலால் மூடப்பட்டுள்ள பாதையைத் திறந்து கழிப்பறைகளைப் பயன்படுத்துவதற்கு ஆவன செய்தால் பக்தர்களின் அசௌகரியம் நீங்குவதோடு சூழலின் சுகாதாரமும் பேணப்படும் என மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

**கிரி,** *வட்டுக்கோட்டை.*

### கேலிச் சித்திரம்



நன்றி: லங்காதீப

# இந்தச் சண்டை இப்போது தேவையா ?

வடக்கு மாகாண முதலமைச்சருக்கு எதிரான கருத்துக்களை, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சேனாதிராஜா வவுனியாவில் வைத்துத் தெரிவித்திருக்கின்றார். ஏற்கனவே, வடக்கு மாகாண சபையின் கடந்த அமர்வில், இரு அணிகளாக ஆளும் கட்சியினர் செயற்பட்டிருந்த நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராஜா இந்தக் கருத்தை முன்வைத்திருக்கின்றார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் வேட்பாளராகக் களம் கண்டு வெற்றியீட்டிய முதலமைச்சரான க.வி.விக்னேஸ்வரன், நாடாளுமன்றத் தேர்தலின் போது நடுநிலைமை வகிக்கப் போவதாகத் தெரிவித்திருந்தார். எந் தக் கட்சியையும் ஆதரிக்கப் போவதில்லை என்று குறிப்பிட்டிருந்தார். இதனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் மற்றும் கட்சித் தலைவர் இரா. சம்பந்தனால் கூட, தேர்தலின் பின்னர் இது தொடர்பில் நட வடிக்கை எடுக்கப் போவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறானதொரு நிலையில், அமெரிக்காவின் தெற்கு மத்திய மற்றும் ஆசியாவுக்கான உதவி இராஜாங்கச் செயலாளர் நிஷா பிஸ்வாலுடனான சந்திப்புக்கு முதல் நாள் (ஒகஸ்ட் 25) ஆம் திகதி, கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுக் கும் முதலமைச்சருக்கும் இடையில் சந்திப்பு ஒன்று நடந்திருந்தது. இந்தச் சந்திப்பில் மாவை.சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தச் சந்திப்பில் முதலமைச்சருக்கு எதிரான காரசாரமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. இதன் பின்னர் கட்சிக்குள் முரண்பாடு எழ ஆரம்பித்துள்ளது. இதன் அடுத்த கட்ட வெளிப்பாடாகவே, கடந்த முத லாம் திகதி நடைபெற்ற வடக்கு மாகாண சபையின் அமர்வில், ஆளுங்கட்சியினர் இரண்டு அணிகளாக (முதல மைச்சர் தலைமையில் ஓர் அணியாகவும், ஏனையோர் இன்னோர் அணியாகவும்) செயற்பட்டிருந்தனர்.

இதன் தொடர்ச்சியாகவே, நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராஜா தெரிவித்த கருத்துக்களை நோக்க வேண்டியுள்ளது. வடக்கு மாகாண முதலமைச்சர், நாடாளுமன்றத் தேர்தலின் போது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தேர்தல் அறிக்கைக்கு ஆதரவு தெரிவிக்காமல் இருந்ததைச் சுட்டிக்காட்டி முதலமைச்சரின் கருத்தைத் தமிழ் மக்கள் ஏற்கவில்லை என்பதை மாவை.சேனாதிராஜா தனது உரையில் தெரிவித்திருக்கின்றார்.

இதனை விட, தற்போது பெரும் பிடுங்குப்பாடாக இருந்து வரும் சர்வதேச விசாரணையா ? அல்லது சர்வதேச விசாரணை முடிந்து விட்டதா என்ற விடயத்தில் முதலமைச்சர் உண்மைக்குப் புறம்பாகச் செயற்படுவதாகவும் மாவை.சேனாதிராஜா குறிப்பிட்டிருக்கின்றார்.

உண்மையில் கடந்த வருடம் மார்ச் மாதம் ஜெனீவா அமர்வில் சர்வதேச விசாரணை கொண்டு வரப்பட்டபோது, அது சர்வதேச விசாரணையல்ல என்று கூக்குரலிட்ட குழுவினரே தற்போது, சர்வதேச விசாரணை யைக் கோரும் கோஷத்தை முன்னெடுத்துள்ளனர் என்பதும் இந்த இடத்தில் நோக்க வேண்டியுள்ளது.

ஆனாலும், முதலமைச்சருக்கு எதிராக மாவை.சேனாதிராஜா தெரிவித்த கருத்துக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுள் இதுவரை நாளும் இருந்து வந்த பனிப்போரை புடம் போட்டுக் காட்டியிருக்கின்றது. எப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பிளவுபடுத்தலாம், எங்கே வெடிப்பு வரும் என்று - யாரும் போடும் எச்சில் எலும்புக்காய் - காத்திருந்தவர்களுக்கு, இந்தக் கருத்து மோதல் நல்ல புரியாணிச் சாப்பாடாகி விட்டது.

இந்த முரண்பாட்டை எப்படியெல்லாம் ஊதிப் பெரிதாக்கலாம் என்பதற்கான வேலைகளை அவர்கள் இதுவரை நேரத்துக்குள் ஆரம்பித்திருப்பார்கள். முதல மைச்சர் அல்லது மாவை.சேனாதிராஜா இருவரில் யாரை யாவது உசுப்பேத்தி, நிரந்தரப் பிளவை ஏற்படுத்துவதற்கு நிச்சயம் முயற்சிக்கக் கூடும்.

ஆனால் இருவரும் பெருந்தலைவர்கள். மாகாண முதலமைச்சரை நியமிக்கும் விடயத்திலும், க.வி.விக்னேஸ்வரனுக்கும், மாவை.சேனாதிராஜாவுக்கும் இடையில் முரண்பாடு எழுந்த போது, மாவை.சேனாதிராஜா விட்டுக் கொடுப்புச் செய்திருந்தார். இதனால், கட்சியை பிளவுபடுத்தக் காத்திருந்த பலர் ஏமாற்றமடைந்திருந்தனர்.

இப்போதும், இருவரும் நிதானமாகச் சிந்தித்துச் செயற்படுவது நல்லது. உணர்ச்சிகளின் உந்துதலால் பேசி விட்டுப் பின்னர், வருந்துவதில் பயனில்லை. தமிழ் மக்கள் ஒற்றுமைக்காக வாக்களிக்க, கட்சித் தலைமைகளில் இருப்பவர்கள் அதைக் கெடுக்கக் கூடாது.

எல்லாவற்றுக்கும் மேலாக, தற்போது ஆட்சியில் இருப்பது, தமிழீழ விடுதலைப் புலிகளையே பிளவடையச் செய்த ரணில் விக்கிரமசிங்க என் பதை இருவரும் [?] ... வில் கொண்டாலே ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தெற்குத் தலைவர்களின் சிந்தனைக்கு சம்பந்தன் முன்வைத்துள்ள யோசனை

நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவு செய்யப் பட்டமைக்கு, கடும்போக்கு பேரினவாதிகள் பல்வேறு காரணங்களை முன்வைத்து எதிர்ப்புக்களை வெளியிட்டுவரும் நிலையில், தமிழர்கள் தரப்பிலும் சிலர் முதலில் எதிர்த்தார்கள். இப்போது, அந்தப் பதவியால் தமிழ் மக்களுக்கு என்ன பயன் வரப் போகிறது என்று வினா எழுப்பி வருகிறார்கள்.

பொதுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எது செய்தாலும் அதில் "நொட்டை" கண்டுபிடிப்பதே குறியாகச் சிலர் இருக்கிறார்கள். கடந்த பொதுத் தேர்தலின்போது மறைமுகமாக தாம் ஆதரித்தவர்கள் தோல்வியுற்றதால், அந்த வெப்பியாரத்தைத் தாங்க முடியாமல், இவர்கள் கூறுவதை யாரும் கணக்கில் எடுக்கமாட்டார்கள் என்பது நிதர்சனம்.

முழுக்கவும் பேரினத்தவர்களின் குரல்கள் மட்டுமே உரத்து ஒலிக்கும் நிலையில் இருந்து வந்த நாடாளுமன்றில், வடக்கு - கிழக்கு மட்டுமல்ல, நாட்டின் தமிழ்ப் பேசும் மக்கள் அனைவரது குரல் களையும் ஒரே குரலாக அழுத்தமாகச் சபையில் எடுத்து வைக்கவும் அதன்மீது அரசின் கவனத்தைத் திருப்பவும் இது ஒரு நல்ல சந்தர்ப்பமாக அமைந்திருக்கிறது.

நாட்டின் அரசமைப்பின் பிரகாரம் தேர்தலில் போட்டியிட்டு, வெற்றிபெற்று அதற்கு அமைவாகச் செயற்படுவதாகச் சத்தியப்பிரமாணமும் செய்துகொண்டு எதிர்க்கட்சியில் அமர்ந்து குரல் எழுப்பலாம் என்றால், அதே குரலை இன்னும் உரமாக அழுத்தமாக எடுத்துரைப்பதற்குக் கிடைக்கும் வாய்ப்பை தமிழர்கள் பயன்படுத்தலாகாது என்று வாதிட முனைவது ஒவ்வாத ஒன்றே.

பதவி ஏற்றதன் பின்னர் எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் நிகழ்த்திய உரையில், தமிழ் மக்கள் தரப்பிலான பலவிடயங்களைக் குறிப்பிட்டு வாதிட்டுள்ளதுடன், த.தே.கூட்டமைப்பின் சமஷ்டிக் கோரிக்கை தொடர்பாக, பேரினவாதத் தலைவர்கள் சிந்திக்கும் படியான விடயங்களைத் தொட்டுக் காட்டியுள்ளார்.

எமது பக்கத்துப் பெரிய நாடான இந்தியாவை நல்லுதாரணமாகக் கொண்டு, இந்த நாட்டிலும் நாம் மூன்று அல்லது ஐந்து பிராந்தியங்களை உருவாக்கினால், என்ன என்று அர்த்தபுஷ்டியுடன் கேட்டுள்ளார் அவர்.

அங்கு எத்தனையோ விதமான வேறுபாடுகள் காணப்பட்ட போதிலும், ஆட்சிமுறை காரணமாக ஒன்றாகவே இணைந்து வாழ்கிறார்கள். மத்தியில் பல அமைச்சர்களை நியமிப்பதற்குப் பதிலாக அத்தியாவசியமான அதிகாரங்களைப் பகிர்ந்தளித்து மூன்று அல்லது ஐந்து பிராந்தியங்களை உருவாக்கலாம் என்றார் சம்பந்தன். இங்கே பல இளைஞர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக வந்துள்ளார்கள், அவர்கள் எல்லாம் அமைச்சர்களாகவும், முதலமைச்சர்களாகவும் இந்த பிராந்தியங்களில் பதவி வகிக்க முடியும் - என்றும் சுட்டிக்காட்டி உள்ளார்.

மக்களின் அபிலாஷைகள் நிறைவேறும்போது, மக்கள் கௌரவிக்கப்படும்போது, அவர்களின் மொழிக் கரிசனைகள், கலாசார விழுமியங்கள் மற்றும் சமயங்கள் கவனிக்கப்படும்போது, நாடு ஒன்றுபட்டிருக்கும் - அனைவரும் ஒன்றாக இருப்பார்கள் என்றார் - சம்பந் தன். இந்தியாவில் 29 மாநிலங்கள் உள்ளன. அவர்கள் ஒன்று பட்டு இருக்கிறார்கள் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

பிராந்தியங்கள் (Regions) என்று சம்பந்தன் குறிப்பிட்டு இருப்பது இந்தியாவில் காணப்படும் மாநில ஆட்சி முறையையே என்பது தெளிவு. மொழி கலாசாரங்களை ஒட்டியே அங்கு மாநிலங்கள் உருவாக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆனால், தேசிய மட்டத்தில் தலைவர்கள் பிராந்திய சிந்தனை களை மேல் எழுப்பாமல் சகலரையும் ஒரேவிதமாகப் பார்க்கும் வகையில் மட்டுமல்லாமல், பிராந்தியங்களில் இருந்தும் மத்தியில் ஆட்சிப் பீடத்தில் தலைவர்கள் அமரக் கூடிய வழி முறைகள் அங்கு உள்ளன. இந்திய ஆட்சிமுறையை ஓர் உதாரணமாகத்தான் சம்பந்தன் சுட்டிக் காட்டியுள்ளார். இதுபோன்று ஆட்சிமுறையுள்ள நாடுகள் பற்றியும் ஆராயப்படு வதை அவர் மறுக்கப்போவதில்லை.

தென்னிலங்கைத் தலைவர்கள் சம்பந்தனின் கருத்தை வெறும் சம்பிரதாயச் சொற்பொழிவாகக் கருதக் கூடாது. வெகுகாலமாகவே வடக்கு - கிழக்குத் தமிழர் தரப்பில் இவ்வாறான கருத்துக்கள் முன்வைக் கப்பட்டு வந்துள்ளன. அவை பற்றி நிதானமாக சிங்களத் தலைவர்கள் சிந்தித்துப் பார்க்காமல் பேரினபலத்தின் மூலம் கிடைத்திடும் அதிகாரத்தைப் பயன்படுத்தி, இந்தக் கோரிக்கையை, நாட்டைப்பிரிக்கும் நோக்கமாக பரப்புரை செய்து, அழித்துவிட, கிள்ளி எறிந்துவிட எடுத்து வந்த குரோதச்செயற்பாடுகளை, இனி மேலும் தொடர்வது அர்த்தமற்றதே. தீர்க்கமான ஒரு நிலைப்பாட்டுக்கு பேரினத் தலைவர்கள் வரவேண்டும்.

நாட்டின் நிலையான அமைதிக்கும், ஒருமைப் பாட்டுக்கும் சம்பந்தன் தெரிவித்துள்ள கருத்துக்கள் உதவிபுரியும் என்ற வகையில் சிந்திக்க வேண்டிய காலகட்டம் உருவாகியுள்ளது என்று மனம் கொள்ள வேண்டும். எதிர்பார்க்கலாமா?

# இலங்கை வரலாற்றில் உண்மையான தேசிய அரசு

## வெளி விவகார அலுவல்கள் அமைச்சர் மங்கள சமரவீரவினால் வெளியிடப்பட்ட அறிக்கை

இலங்கையின் அரசியல் வரலாற்றில் 2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதியானது என்றும் மகிழ்ச்சி தரும் நினைவில் இருக்கக்கூடிய இனிய நல்ல நாளாகும். சுதந்திரம் பெற்றதிலிருந்து முதற்தடவையாக நாடாளுமன்ற அங்கீகாரத்துடன் தேசிய அரசு அமைக்கப்பட்டுள்ளது. இலங்கையின் இரண்டு பெரும் அரசியல் கட்சிகளும், எமது தாய்த்திருநாடு முகங்கொடுக்கும் பல தீர்க்கப்படாத சவால்களைத் தீர்ப்பதற்கு இப்போது ஒன்றிணைந்து செயலாற்ற முடியும். ஒற்றுமை, கருத்தொருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்குமான ஒரு புதிய யூகத்துக்கு முன்னறிவிக்கும் வகையில் இரா.சம்பந்தனை எதிர்க்கட்சித் தலைவராக அங்கீகரித்திருப்பதும் என்றும் நினைவிலிருக்கும் முக்கிய மான நாளாக இருக்கப் போகின்றது.



இலங்கை சுதந்திரம் பெற்ற பின்பு அமைந்துள்ள உண்மையான தேசிய அரசு இதுவே ஆகும். கடந்த காலத்தில் தேசிய அரசு என அழைக்கப்பட்டவை , ஒன்றில் அரசியல் சந்தர்ப்பவாதம், மற்றும் சுயநலத்தின் அடிப்படையில் அதிகார அரசியலை பிரயோகிப்பனவாக இருந்தன அல்லது அச்சுறுத்தல், இலஞ்சம், மிரட்டல் என்பன மூலமாக விருப்பமற்றவர்களையும் அடிபணிய வைத்து உருவாக்கிய ஒரு கூட்டணியாக இருந்தது. அவர்கள் பிரதிநிதிப்படுத்திய பெரிய கட்சிகளிலிருந்து பிரித்து அந்த அரசியல் கட்சிகளின் அனுமதியின்றி அரசாங்க தரப்புக்கு மனமாற்றம் செய்து மாற்றி ஜனநாயகக் கட்டமைப்பை பலமிழக்கச் செய்யப்பட்டது.



கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்கஆகியோர் மகிழ்ச்சி இல்லாததும் ஜனநாயக விழுமியங்கள் இல்லாததுமான நடைமுறைகளிலிருந்து விலகுவதாக வாக்குறுதி அளித்தனர். 100 நாள்கள் நிகழ்ச்சியிலும் தேசிய அரசின் அமைப்பை அறிமுகம் செய்து ஏனைய முக்கியமான அரசியலமைப்பு சீர்திருத்தங்களுடன் 19 ஆவது தீர்த்தத்தையும் நிறவேற்றினார்கள்.

கனவு யதார்த்தமான உண்மையாக மாறியுள்ளது. 2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதி, நாடாளுமன்றம் பிரதம மந்திரியால் பிரேரிக்கப்பட்ட தேசிய அரசை அங்கீகரித்துள்ளது. நிறைவேற்று அதிகாரத்தின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்றவாறு அமைச்சர்களின் எண்ணிக்கையைத் தீர்மானிக்கும் [illegible] பட்ட அமைச்சரவையின் அளவை அதிகரிப்பதற்கான அனுமதியையும் அங்கீகாரத் தையும் நாடாளுமன்றம் வழங்கியுள்ளது.

நாம் இலங்கையில் ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்துள்ளோம். சாக்குப்போக்குக்கூறித் தட்டிக் கழிக்காது கருத்தொருமைப்பாட்டின் மூலமாக உண்மையான அரசை அமைப்பது, நல்லாட்சியைப் பலப்படுத்தி உறுதிப்படுத்து மென்பதுடன் இலங்கையில் புதியதொரு அரசியல் கலாசாரத்தையும் உருவாக்கும். அண்மையில் ஏக மனதாக எதிர்க்கட்சித் தலைவரைத் தெரிவு செய்திருப்பதும் அரசியல் கலாசாரத்தின் மீளமைப்பை எடுத்துக் காட்டுகின்றது.

ஏகமனதாக எதிர்க்கட்சித் தலைவரை நியமனம்செய்திருப்பது இந்த அரசியல் கலாசார மீள மைப்பை எடுத்துக்காட்டியுள்ளது. சுதந்திரம் பெற் றதிலிருந்து எமது அரசியலில் இருந்த அடையாளமான, பிரிந்து செயலாற்றுவதும் சுயநலமிக்கதுமான கட்சி முறையிலிருந்து நாடாளுமன்ற மரபுகளையும் சம்பிரதாயங்களையும் நிலைநிறுத்துவது ஆரம்பமாகியது. இலங்கையின் அர்ப்பணிப்பையும் இணக்கப்பாட்டுச் செய்முறையையும் ஒவ்வொரு இலங்கைப் பிரஜையும் தான் சுதந்திரமாகவும் சமத்துவம் உள்ளவராகவும் இருப்பதை உணரும் தன்மையையும் கொண்டிருப்பதை நாட்டில் சிரேஸ்ட மற்றும் மரியாதைக்கு உரிய அரசியல் வாதிகளில் ஒருவரான இரா.சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக நியமனம் பெற்றிருப்பது உறுதி செய்து எதிரொலிக்கின்றது. புதிய இலங்கையில் இனம், மதம், சாதி அல்லது பால் வேறுபாடு காரணமாக ஒருவரினதும் உரிமையான இடம் மறுக்கப்படமாட்டாது.

அவசரமாகத் தேவைப்படும் தேசிய கொள்கைகளின் உருவாக்கல் மற்றும் நடைமுறைப்படுத்தலை தேசிய அரசு உறுதிப்படுத்தம். குறிப்பாக, தேவையான தேசிய கொள்கைகளை உள்ளடக்கிய புதிய அரசியலமைப்பை நாம் நிறைவேற்றுவோம். உரிமைப் பிரகடனச் சட்ட மூலத்தை உள்ளடக்கும் ஒரு புதிய அரசியலமைப்பை நாம் நிறைவேற்றுவோம். இந்த அரசியலமைப்பு குடிசார் மற்றும் அரசியல் உரிமைகளை மாத்திரம் கவனத்தில் எடுக்காது பொருளாதார சமூக மற்றும் கலாசார உரிமைகளையும் கவனத்தில் எடுக்கும். இந்த அரசியல் அமைப்பானது சகல பிரஜைகள் மற்றும் சமூகங்களின் தேவைகளையும் கவனிக்கும் தீர்மானம் எடுப்பதில் பொதுமக்களுக்கு அதிக பங்களிப்பை வழங்கும். இந்தப் படிகள் அதிகமான பொறுப்புக்கூறலுக்கும் பொறுப்பெடுத்தலுக்கும் ஏதுவாக்கும். தொகுதிவாரியான மறுசீரமைப்புடன் பலமான நாடாளுமன்ற அரசுடன் அத்தகைய அரசியலமைப்பானது நீதியுடனும் சட்ட விதிகளுடனும் நல்லிணக்கத்தையும் நிலையான சமாதானத்தையும் உறுதிப்படுத்துவதற்கு அத்தியாவசியமாகும். வழக்கமாக பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான சட்டவாக்கத் சீர்திருத்தங்கள், அரசியல் உறுதிப்பாடு மற்றும் வகிக்கின்ற பங்கின் மட்டங்களையும் பெறுவதற்கு கட்சி ரீதியான கருத்தொருமைப்பாடு தேசிய அரசுக்கு உள்ளார்ந்ததாகும்.

> **நாம் இலங்கையில் ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்துள்ளோம். சாக்குப்போக்குக்கூறித் தட்டிக் கழிக்காது கருத்தொருமைப்பாட்டின் மூலமாக உண்மையான அரசை அமைப்பது நல்லாட்சியைப் பலப் படுத்தி உறுதிப்படுத்து மென்பதுடன் இலங்கையில் புதியதொரு அரசியல் கலாசாரத்தையும் உருவாக்கும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சித் தலைவர் பதவியால் தமிழர்களுக்கு விமோசனம் கிடைக்குமா?

மு.ஈழத்தமிழ்மணி

1977ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி ஐந்தில் நான்கு பெரும்பான்மைப் பலத்தைப் பெற்று ஆட்சி அமைத்த நிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி எட்டு உறுப்பினர்களோடு மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்பட்டது. எதிர்க்கட்சியாக தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் மக்களின் ஒற்றுமையின் பலத்தினால் 18 உறுப்பினர்களைப் பெற்று இரண்டாவது கட்சியாக நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்தது. எதிர்க்கட்சித் தலைவராக தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமான அ.அமிர்தலிங்கம் தெரிவு செய்யப்பட்டார்.

32 ஆண்டுகளுக்குப் பின்னர் இரண்டாவது தடவையாக மீண்டும் தமிழர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவராகியுள்ளார். 16 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பெற்றுக் கொண்டது. எண்பது வயதைத் தாண்டிய முதுபெரும் அரசியல்வாதியான இராஜவரோதயம் சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டார்.

வடக்கு மாகாணத்திலிருந்து முதலாவது எதிர்க்கட்சித்தலைவராக தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் அ.அமிர்தலிங்கம் தெரிவு செய்யப்பட்டிருந்தார். 32 ஆண்டுகளுக்குப் பின்னர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர் ஒருவர். இரண்டாவது எதிர்க்கட்சித்தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

எட்டாவது நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் சேர்ந்து தேசிய அரசை அமைத்துள்ள நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் யார்? என்ற கேள்வி சர்ச்சைக்குரிய தொன்றாகஇருந்து வந்தது. எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு யாரை நியமிப்பது என்பது தொடர்பில் கடந்த 2ஆம் திகதி வரை முடிவு எதுவும் எட்டப்படாத நிலையே காணப்பட்டது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த சுமார் 50 க்கு மேற்கட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேசிய அரசில் சேராமல் சுயாதீனமாக இயங்கும் முயற்சியிலீடுபட்டிருந்த நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இணைந்த தேசிய அரசொன்றை உருவாக்குவதால் தங்களது கட்சிக்கே எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்படவேண்டும்என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தி வந்தது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்பது பல கட்சிகள் கொண்ட கூட்டணி என்பதால் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்குவதில் எந்த விதமான சிக்கலும் கிடையாதென தினேஷ் குணவர்த்தன தெரிவித்திருந்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு பிரேரிக்கப்பட்டவர்களில் ஒருவர் சபாநாயகரால் அடையாளம் காணப்படுவதே நடைமுறையாகும். அவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் நாடாளுமன்ற சம்பிரதாயங்களின் படி செயற்பட்டு இறுதியில் சபாநாயகரால் முடிவு செய்யப்படுமென நாடாளுமன்ற செயலாளர் நாயகமான தம்பிக்க தகநாயக்க தெரிவித்திருந்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை இதன் அடிப்படையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் பதவி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஜனவரி மாதம் ஒன்பதாம் திகதி புதிய ஜனாதிபதி பதவியேற்றுக் கொண்ட மைத்திரிபால சிறிசேன சுதந்திரக் கட்சித் தலைவர் பதவியை ஏற்றுக்கொண்ட பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் மகிந்தவின் சார்பாக செயற்பட்டனர். பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவிக்கு வந்தபின்னர் சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் ரணில் பிரதமரானதை ஏற்கவில்லை. மகிந்த சார்பு அணியாகப் பலரும், மைத்திரி அணியாகச் சிலரும் பிரிந்து செயற்பட்டுக் கொண்டிருந்தனர்.


2010 பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, ஜே.வி.பி, தமிழரசுக்கட்சி ஆகிய நான்கு கட்சிகள் தேர்தல் திணைக்களத்தால் பதிவு செய்யப்பட்ட கட்சிகளாகும். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியமைத்திருந்தது. ஐக்கிய தேசியக் கட்சி இரண்டாவது பெரிய எதிர்க்கட்சியாகத் தெரிவு செய்யப்பட்டமையால் அந்தக் கட்சிக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்பட்டது.


2015 ஜனவரியில் ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த பின்னர் பிரதமராக ரணில் பதவியேற்றார். ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களில் கணிசமானோர் அமைச்சரவையில் அமைச்சர்களாக இருந்தனர். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்தவர்களும் சிலர் அமைச்சரவையில் பங்கேற்றனர். இரண்டு கட்சிகளும் சேர்ந்து மைத்திரி தலைமையில் ஆட்சியை 7 மாதங்கள் வரையில் நடத்தி வந்தன.

எதிர்க்கட்சித் தலைவர் யார் என்ற கேள்வி சகல கட்சிகளிடையே முன்வைக்கப்பட்டிருந்தது. இரண்டு கட்சிகளும் எதிர்க்கட்சித் தலைமைப் பதவிக்கு தெரிவு செய்யக் கூடிய வாய்ப்பை இழந்திருந்தன.

இரண்டு கட்சிகளும் கூட்டுச் சேர்ந்து ஆட்சியிலிருப்பதனால் எந்தவொரு உறுப்பினரும் ஆட்சியில் இருக்க முடியாது. இந்த விடயம் தெளிவான முறையில் சட்ட ரீதியானதாகும். நாடாளுமன்ற பாரம்பரியத்துக்கும் அமைவான விடயமாகவும் உள்ளது. எமது நாட்டிலும் பொது நலவாயத்திலுள்ள நாடாளுமன்ற பாரம்பரியத்துக்கு ஏற்புடைய விடயமாக இது உள்ளது என்பதை சுட்டிக்காட்டிய தமிழரசுக்கட்சி 14 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருப்பதால் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை கோருவதற்குரிய உரிமையைக் கொண்டிருக்கின்றது என தெளிவாக சபாநாயகருக்கு கட்சியால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்த நேரத்தில் நாடாளுமன்றம் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை தெரிவு செய்கின்ற சந்தர்ப்பத்தை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த பல நாடாளுமன்ற உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட முடியாமல் இழுபறிப்பட்ட நிலையிலிருந்தது. அப்போதைய சபாநாயகரான சமல் ராஜபக்ச எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்குரிய கட்சியைத் தெரிவு செய்ய முடியாத நிலையில் தனது தலையிலிருந்த பாரத்தை அப்போதைய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளரான சுசில் பிரேம ஜெயந்தவிடம் சுமத்தியிருந்தார். ஆனால் நடந்தது என்ன? நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகிக்கின்ற கட்சியில்லாமலேயே 7 மாதகால ஆட்சி நடந்தது. நாடாளுமன்றம் மிகக் குழப்பமாகக் காணப்பட்டது. எதிர்க்கட்சி எது? எதிர்க்கட்சித் தலை வர் யார்? பிரதமர் நியமனம் போன்ற விடயங்களால் நாடாளுமன்றம் ஈடாட்டம் கண்டிருந்தது.





ஒரு தடவை தான் எதிர்க்கட்சித் தலைவராக இருக்க முடியாது என்றால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் எதிர்க்கட்சித் தலைவராகப் பதவி வகிக்க முடியாதென சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான நிமால் சிறிபால டி சில்வா யதார்த்தமாக தனது கருத்தை உரியவாறு தெரிவித்திருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கட்சித் தலைவர் பதவி தம் கட்சிக்கே வழங்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டபோது இனவாதக் கட்சிகளும், இனவாதத்தை தூண்டுகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களும் எதிர்க்கட்சித் தலைவர் பதவி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கக் கூடாதெனவும் மீறி வழங்கப்பட்டால் போராட்டங்களை முன்னெடுப்போமெனவும் கூறியிருந்தனர்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு வழங்குவதே நியாயமாக உணர்ந்த ஜனாதிபதியை சம்மதிக்க விடாதபடி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் பல சூழ்ச்சிகளை மேற்கொண்டிருந்தமையால் பொதுத் தேர்தலுக்கான அறிவித்தல் நெருங்கும் வரை எதிர்க்கட்சித் தலைவர் பதவி நியமனம் எதிர்க்கட்சிக்கு கிடைக்கவேயில்லை.

1977இல் இருந்து 1983 வரை எதிர்க்கட்சித் தலைவராக பதவி வகித்த அமிர்தலிங்கம் தமிழீழக் கோரிக்கையை சர்வதேசத்துக்கு தெரியப்படுத்தி இராஜதந்திர ரீதியில் தனது அரசியல் நடவடிக்கைகளை சளைக்காது முன்னெடுத்திருந்தார். இந்தியா உட்பட மேற்கு ஐரோப்பிய நாடுகள் வரை சென்று தமிழர்களின் உரிமைகளுக்காக வாதாடியவர். வெளிநாட்டிலிருந்து வருகின்ற சகல தலைவர்கள் இராஜ தந்திரிகளைச் சந்தித்து இனப்பிரச்சினையை வெளிப்படுத்தி வந்தவர்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை தமிழினத்துக்காக மட்டும் பயன்படுத்தாமல் தென்னிலங்கையில் உள்ள சிங்கள மக்களின் அரசியல் பிரச்சினைகள், வேலை நிறுத்தப் பிரச்சினைகள், பல்கலைக்கழக மாணவர்களின் பிரச்சினைகள் ஏற்பட்டபோதெல்லாம் தமது பதவியினூடாக ஒரு நாட்டுக்கான எதிர்க்கட்சி என்ற வகையில் பதவியை சரியான முறையில் பயன்படுத்திக் கொண்டார்.அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சி அரசில் பதவி வகித்த இனவாத அமைச்சர்கள், இனவாத அமைப்புக்கள் எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருந்து கொண்டு பிரிவினையை தூண்டுகின்றார். தனிநாடு அமைப்பதற்காக வெளிநாடுகளில் பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றார் என்ற பல குற்றச்சாட்டுக்களை அமிர்தலிங்கம் மீது சுமத்தியிருந்தனர். எதிர்க்கட்சித்தலைவர் பதவியால் கடுமையான நெருக்கடிகளைச் சந்தித்திருந்தார்.

இரா.சம்பந்தனிடம் எதிர்க்கட்சித் தலைவர் பதவி சென்றுள்ளமையால் மேலும் பல பொறுப்புக்கள் அவரிடம் சுமத்தப்பட்டுள்ளன. இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கான முடிவுரை எழுதப்படுகின்றவாறு எதிர்க்கட்சித்தலைவர் பதவியை சரியான முறையில் பயன்படுத்துவாரா? ஈழத் தமிழினம் எதிர்க்கட்சித் தலைவர் பதவி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் வழங்கப்பட்டதையடுத்து மகிழ்ச்சிக்குள்ளாகினாலும் மறுபக்கம் ஆளும் வர்க்கத்திடம் எதிர்க்கட்சித் தலைவர் பதவியினால் இணக்க அரசியலுக்குள் மூழ்கி விடுவார்களா? என்ற பயமும் இல்லாமலில்லை.

தமிழர்கள் அனுபவித்து வரும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வு காண எதிர்க்கட்சித் தலைவர் பதவி மீண்டும் எதிர் பாராதவாறு தமிழர் தரப்பு பக்கம் வந்து சேர்ந்துள்ளது.

அரசியல் சாணக்கியமும், முதிர்ச்சியும் பெற்ற தலைவரான இரா.சம்பந்தன் பொறுப்பேற்றுக்கொண்ட எதிர்க்கட்சித்தலைவர் பதவியூடாக

**32 ஆண்டுகளுக்குப் பின்னர் இரண்டாவது தடவையாக மீண்டும் தமிழர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவராகியுள்ளார்.**

தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள சகல பிரச்சினைகளையும் தீர்த்து வைக்க புதிய அரசுக்கு நெருக்கடிகளை கொடுப்பார். அதேசமயம் இனவாதிகளாலும் சம்பந்தனுக்கும் நெருக்கடிகள் ஏற்படும்.

தந்தை செல்வா நற்பணிமன்றம் கடந்த ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி அன்று தந்தை செல்வாவின் 38 ஆவது சிரார்த்த தினத்தில் பங்கேற்று உரையாற்றிய இரா.சம்பந்தன் கூறிய கருத்தை தெரிந்து கொள்வது நல்லதென நினைக்கின்றேன். மார்ட்டீன் லூதர் கிங், நெல்சன் மண்டேலா போன்றவர்களின் கொள்கையைப் பற்றி புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமெனக் கூறுவதன் மூலம் அவரது நிலைப்பாட்டைப் புரிந்து கொள்ள வேண்டுமெனத் தெரிவித்திருந்தார். நாம் மிகவும் அவதானமாக இருக்க வேண்டிய காலகட்டத்தில் உள்ளோம் என்றும் கூறியிருந்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கிய நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியாளர்கள் சர்வதேச விசாரணைகளை முற்று முழுதாக இல்லாமற் செய்வதற்கும், போரில் ஈடுபட்டவர்களை எந்தவித குற்றச்சாட்டுக்களிலிருந்தும்தப்பித்துக்கொள்வதற்கும் பிரதமரான ரணிலும், ஜனாதிபதி மைத்திரியும் சேர்ந்து எதிர்க்கட்சித்தலைவர் பதவியை வழங்கியது பற்றிய சந்தேகங்களும் தமிழ் மக்கள் மத்தியில் இல்லாமலில்லை. புதிய அரசு விரித்த வலையில் எதிர்க்கட்சித்தலைவர் பதவி கிடைத்ததை வைத்துக்கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வீழ்ந்து விடக் கூடாது. தமிழ் மக்கள் பொதுத் தேர்தலில் வழங்கப்பட்ட ஆணையை மறந்து விடலாகாது. எதிர்க்கட்சித் தலைவர் பதவியினூடாக தமிழர்களுடைய இனப்பிரச்சினைக்கான தீர்வை விரைந்து தீர்க்கப்படுதல் வேண்டும்.

பெரும்பான்மையின் அடிப்படையில் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதா? அல்லது நீதி, நியாயத்தின் அடிப்படையில் நாகரிகமான அரசியல் தீர்வை தமிழ் மக்களுக்கு வழங்குவதா? என்பதே இன்றுள்ள முக்கியமான கேள்வி எனவும் மைத்திரி, ரணில், மகிந்த ஆகியோர்களில் ஒருவராவது தேர்தலுக்குப் பின்னர் பதிலளிக்க வேண்டுமென 7.8.2015 அன்று மூதூரில் உள்ள பள்ளிக்குடியிருப்பில் வைத்து தமது கேள்வியை இரா.சம்பந்தன் மூவரையும் பார்த்து கேட்டிருந்தார். இதனை நாடாளுமன்றில் உரத்துக் கேட்போமெனவும் கூறியிருந்தார். எதிர்க்கட்சித் தலைவராகப் பதவியேற்றுக் கொண்ட இரா.சம்பந்தன் நாடாளுமன்றில் மூவரிடம் உரத்துக் கேட்க வேண்டிய சந்தர்ப்பத்துக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் கூடவே சரியான தருணம் பார்த்து அமைந்து விட்டதோ.....?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 50 | 40 | 60 | 40 | 60 | 40 | 120 |
| கத்தரி | 80 | 80 | 80 | 80 | 60 | 80 | 80 | 50 |
| கரட் | 70 | 80 | 80 | 100 | 120 | 140 | 120 | 120 |
| மரவள்ளி | 60 | 50 | 60 | 40 | 40 | 60 | 60 | 40 |
| பயிற்றை | 30 | 40 | 60 | 130 | 60 | 30 | 120 | 140 |
| பாகல் | 70 | 100 | 100 | 100 | 90 | 100 | 100 | 70 |
| கருணைக்கிழங்கு | 90 | 80 | 80 | 120 | 80 | – | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 120 | 110 | 120 | 100 | 110 | 130 | 100 | 90 |
| சி.வெங்காயம் | 70 | 80 | 80 | 80 | 70 | 100 | 100 | 60 |
| பூசணி | 40 | 30 | 40 | 30 | 40 | 60 | 50 | 25 |
| தக்காளி | 80 | 50 | 60 | 60 | 50 | 80 | 80 | 45 |
| வாழைக்காய் | 60 | 60 | 40 | 60 | 50 | 40 | 60 | 30 |
| கீரை | 20 | 20 | 30 | 25 | 25 | 40 | 30 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 20 | 30 | 25 | 25 | 40 | 10 | 10 |
| பச்சை மிளகாய் | 120 | 150 | 120 | 120 | 90 | 200 | 60 | 100 |
| புடோல் | 40 | 50 | 40 | 40 | 40 | 60 | 60 | 60 |
| கோவா | 70 | 80 | 80 | 70 | 50 | 80 | 80 | 40 |
| வெண்டி | 40 | 40 | 40 | 40 | 60 | 60 | 60 | 20 |
| போஞ்சி | 160 | 140 | 180 | 140 | 160 | 200 | 120 | 140 |
| லீக்ஸ் | 90 | 80 | 100 | 100 | 80 | 90 | 80 | 70 |
| தேங்காய் | 50 | 40 | 50 | 50 | 60 | 40 | 50 | 35 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 100 | 90 | 90 | 90 | 80 | 80 |
| தேசிக்காய் | 70 | 100 | 120 | 100 | 80 | 120 | 160 | 100 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 40 | 20 | 20 | 08 |
| கறிமிளகாய் | 120 | 120 | 120 | 80 | 140 | 120 | 100 | 120 |
| இராசவள்ளி | 250 | – | – | 160 | 120 | – | 180 | 80 |
| முருங்கைக்காய் | 120 | 120 | 100 | 70 | 60–70 | 100 | 80 | 100 |

# தொப்பையைக் குறைக்க இலகுவான வழிகள்

உடல் நிற்றையைக் குறைப்பது என்பது அவ்வளவு கடினமான விடயம் அல்ல. உடல் நிறையைக் குறைக்க சரியான வழி காலை உணவைத் தவிர்ப்பது அல்ல. ஏனெனில் காலை உணவு தான் அன்றைய தினத்துக்கு ஏற்ற சக்தியைத் தருகிறது. அவற்றைத் தவிர்த்தால், உடல் நலம் தான் பாதிக்கப்படும். பின்னர் எப்போது பார்த்தாலும் சாப்பிட்டுக் கொண்டே இருக்க வேண்டும் என்று தோன்றும். ஆகவே மறக்காமல் காலை வேளையில் மறவாமல் ஏதேனும் ஆரோக்கியமானவற்றைச் சாப்பிட வேண்டும். பானை போன்ற வயிறைக் குறைக்க, மற்ற வழிகளை விடச் சிறந்தது உடற் பயிற்சி தான். அதிலும் நடைப் பயிற்சிதான் சிறந்தது. ஆகவே காலையில் எழுந்ததும் தினமும் குறைந்தது 30 நிமிடமாவது நடந்தால் நல்லது. இதனால் உடல் மற்றும் தொடையில் இருக்கும், தேவையற்ற கலோரிகள் கரைந்து விடும். நிறையைக் குறைக்க தேன் ஒரு சிறந்த மருத்துவப் பொருள். ஆகவே காலையில் எழுந்ததும், ஒரு ரம்ளர் நீரில் 2 கரண்டி எலுமிச்சைச் சாறு, ஒரு கரண்டி தேன் மற்றும் சிறிது மிளகுத் தூள் சேர்த்து, தினமும் குடிக்க வேண்டும். காரமான உணவுப் பொருள்களான இஞ்சி, மிளகு, இலவங்கப்பட்டை போன்றவையும் மிகவும் சிறந்தன.

அதிலும் தினமும் இஞ்சித் தேநீரை 2–3 முறை குடிக்க வேண்டும். இது உடல் பருமனைக் குறைக்கும் சிறந்த பொருள். இரண்டு கரண்டி எலுமிச்சைச் சாற்றை சாதாரண நீரில் கலந்து குடித்து வந்தால், உடல் நிறை குறையும். மேலும் சாப்பிட்டப் பின்னர் ஒரு ரம்ளர் சூடான நீரைக் குடித்து வந்தால், இயற்கையாகவே உடல் நிறை குறைந்துவிடும். உடல் நிறையைக் குறைக்க பச்சைக் காய்கறிகள், தக்காளி மற்றும் கரட் போன்ற கலோரி குறைவான, ஆனால் அதிக விற்றமின் மற்றும் கனிமச்சத்துக்கள் உள்ள உணவுகளை அதிகம் சாப்பிட வேண்டும்.

இதனை அதிகம் சாப்பிட்டு வந்தால், உடல் ஆரோக்கியமாக இருப்பதோடு உடல் நிறையும் விரைவில் குறையும், அதிக பசியும் எடுக்காமல் இருக்கும். தொடர்ந்து 3–4 மாதங்கள், காலையில் எழுந்ததும் 10 கறிவேப் பிலையைச் சாப்பிட வேண்டும். இதனால் அழகான இடுப்பைப் பெறலாம். எப்போதும் உணவு உண்ணும் முன் ஒரு துண்டு இஞ்சியை, எலுமிச்சை சாறு மற்றும் உப்பில் தொட்டு சாப்பிட வேண்டும். இதனால் அதிகமான அளவு உணவை உண்ணாமல், கட்டுப் பாட்டுடன் உணவை உண்ணலாம். இவ்வாறெல்லாம் செய்து வந்தால், தொப்பையைக் குறைத்து அழகான உடல் வடிவத்தைப் பெற்று ஆரோக் கியமாக வாழலாம்.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### அஞ்சாது எதிர்த்து நிற்கும் வீரம் வேண்டும்

உள்ளத்தைப் பொறுத்த வரையில் உறுதியோடு இருங்கள். அதற்கு மேலாக மனத்தூய்மையும், முழு அளவில் சிரத்தை உள்ளவராகவும் இருங்கள். பிறருடைய நன்மையைச் சிறிது நினைத்தாலும் கூட சிங்கத்துக் குச் சமமான ஆற்றலை இதயம் பெற்றுவிடும். வாழ்க்கை என்னும் போர்க்களத்தில் அஞ்சாது எதிர்த்து நிற்கும் வீரன் ஒருவனுடைய மன நிலையே இப்போது நமக்குத் தேவை. ஒரு காலத்தில் நீங்களே வேதகால ரிஷிகளாக இருந்தீர்கள். இப்போது வேறு வடிவம் தாங்கி வந்திருக்கிறீர்கள். அதனால் உங்களிடம் முழுமையாக நம்பிக்கை வையுங்கள். தைரியமாக இருங்கள், விழிப்புடன் இருங்கள் என்ற அச்சமற்ற செய்தியை அறை கூவிச் சொல்லுங்கள்.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2 | | | 5 | 6 | | |
| 6 | | | 7 | | | | 9 | |
| | 1 | 5 | | 9 | | | | 8 |
| | 6 | | 8 | | | | | |
| 3 | | | 1 | | 2 | | | 6 |
| | | | | | 7 | | 5 | |
| 4 | | | | 2 | | 3 | 6 | |
| | 2 | | | | 3 | | | 9 |
| | | 6 | 5 | | | 1 | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதி யான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண் டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண் டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என் றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிர லிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப் பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன மான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக் கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல் யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 6 | 4 | 2 | 7 | 1 | 3 | 8 | 9 |
| 8 | 2 | 7 | 9 | 3 | 5 | 6 | 1 | 4 |
| 9 | 3 | 1 | 6 | 8 | 4 | 5 | 2 | 7 |
| 3 | 5 | 6 | 7 | 4 | 2 | 8 | 9 | 1 |
| 2 | 4 | 9 | 1 | 6 | 8 | 7 | 5 | 3 |
| 1 | 7 | 8 | 5 | 9 | 3 | 4 | 6 | 2 |
| 6 | 1 | 2 | 3 | 5 | 7 | 9 | 4 | 8 |
| 4 | 9 | 3 | 8 | 2 | 6 | 1 | 7 | 5 |
| 7 | 8 | 5 | 4 | 1 | 9 | 2 | 3 | 6 |

## நாளை

**ஆவணி-22**
**செவ்வாய்க்கிழமை**
**08.09.2015**

*திதி: தசமி கா.07.17 வரை*
*[illegible]*
*[illegible] 10.34-12.04 வரை*
*இராகுகாலம்: 03.04–04.34 வரை*

# கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 600 | 700 | 300 | 550 |
| நண்டு | 250 | 400 | 300 | 300 | 100 | 400 |
| கணவாய் | 600 | 600 | 600 | 600 | – | – |
| பாரை | 400 | 500 | 500 | 500 | 400 | 420 |
| சுறா | 450 | 600 | 600 | 600 | 600 | – |
| சீலா | 250 | 500 | 300 | 400 | 300 | 300 |
| விளை | 600 | 450 | 400 | 400 | 300 | 350 |
| மூரல் | 250 | 400 | 300 | 350 | 200 | – |
| கும்பிளா | 300 | 400 | – | 400 | 300 | 250 |
| கிழாக்கன் | 450 | 800 | 200 | 500 | 300 | – |
| ஓரா | 300 | 400 | 300 | 450 | – | 350 |
| திரளி | 200 | 300 | 150 | 300 | 100 | 300 |
| நகரை | 150 | 350 | 150 | 350 | 200 | 350 |
| சூடை | 100 | 200 | 120 | 200 | 50 | 80 |
| ஒட்டி | 200 | 300 | – | 350 | 150 | 300 |
| திருக்கை | 150 | 400 | – | 300 | 150 | 110 |
| பாலை | 300 | 300 | – | 400 | 250 | – |
| வாழை | 100 | 200 | 200 | 300 | – | 250 |
| கொய் | 100 | 200 | 100 | 160 | 50 | – |
| மதனம் | 100 | 300 | – | 300 | 200 | 250 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கில எழுத்துக்களின் பெயர்ப் பலன்கள்



**வெற்றியாளர்கள் V**

'V' என்ற எழுத்து உலகெங்கும் பிரபலமானது. அடிமட்டத்தில் இருந்து உயர்ந்த ஸ்தானத்தில் உள்ளவர்கள் வரை தங்கள் வெற்றியைக் குறிக்க இந்த எழுத்தைப் போன்ற அடையாளத்தையே இரண்டு விரல்களால் காட்டுகிறார்கள். இந்த எழுத்தில் பெயர் தொடங்கினால் திறமைசாலிகளாக இருப்பார்கள். சிறந்த பக்தியாளர்களான இவர்கள் ஆன்மிக உலகில் கால் வைத்தால் சிறந்த எழுத்தாளர்களாக வருவர். கவிதை, கதை, கட்டுரை மற்றும் கலையுலகில் கால் பதித்து வெற்றி பெறுவர். மனதுக்குள்ளேயே இரகசியத்தைப் புதைத்து வைப்பதில் மகா கில்லாடிகள். இறக்கும் வரை வெளியே சொல்லமாட்டார்கள்.



இவர்கள் தங்களுக்காகவோ, பிறரைக் கவிழ்க்கவோ செய்யப் போகும் செயல்களை மனதுக்குள்ளேயே பூட்டிவைத்து அமைதியாகவே செய்வர். தங்களால் யார் கவிழ்ந்தார்களோ, அவர்களிடமே சென்று இப்படி ஆகிவிட்டதாமே என்று ஆறுதலும் சொல்லிவிட்டு வந்து விடுவார்கள்.

அப்பாவி போன்ற முகத்தோற்றம் இருந்தாலும், தன்னம்பிக்கை உணர்வுள்ளவர்கள். எதிலும் வெற்றிக்கொடி நாட்டுவர். ஒன்றையே நினைப்பார்கள். சிறப்பாக திட்டமிடுவார்கள். இதில் தோல்வி ஏற்பட்டாலும், போனால் போகட்டும் போடா என்று ஒரு பாட்டு பாடிவிட்டு, மீண்டும் அதே வேலையைத் தொடங்கி ஓயமாட்டார்கள். இவர்கள் ஜோசியக்காரர்கள் மாதிரி. நடந்தது, நடப்பது எனப் புட்டுப்புட்டு வைப்பார்கள். இவர்களது கணிப்பு பெரும்பாலும் சரியாகவே அமையும். சிந்தனைவாதிகளான இவர்கள் வேதாந்தக் கருத்துகளிலும் வல்லவர்கள். இவர்களை உண்மையின் வடிவம் என்றால் மிகையாகாது. நீதித்துறையில் புகுந்தால் எவ்வளவு பெரியவராக இருந்தாலும் அஞ்சாமல் வாதாடுவார்கள். குடும்பத்தின் மீது அதிக அக்கறை காட்டுவார்கள். இவர்களை வாழ்க்கைத் துணையாக அடைபவர்கள் கொடுத்து வைத்தவர்கள். பணரீதியாகவும், மனரீதியாகவும் ஆறுதலாக இருப்பர். அறிவாளிகளான இவர்கள் செய்யும் செயல்களுக்காக அரசின் பாராட்டையும் பெறுவர். இவர்களிடம் முரட்டு குணமும் அதிகம். யாரையும் எதற்காகவும் கவிழ்க்கத் தயங்கமாட்டார்கள். பிச்சைக்காரர்களைக் கண்டால் பிடிக்காது. பட்டினி கிடந்தாலும் பிறரிடம் கடன் வாங்கவும் பிடிக்காது. சிக்கனமாக இருப்பார்கள். சேமிப்பை பெருக்கி, பொருளாதாரத்தை உயர்த்திக்கொள்வதில் வல்லவர். கோபம் அடிக்கடி ஏற்படும். மாமிச உணவு மிகவும் பிடிக்கும். கசப்புச் சுவையை விரும்புவர். கடவுளின் அருள் கடாட்சம் உண்டு. இந்த V எழுத்து இவர்களுக்கு பல சிறப்புக்களைத் தொடர்ந்து தந்துகொண்டே இருக்கும். இவர்களுக்கு குடும்பத் தேவைகளை நிறைவேற்றுவதில் தடை, சகோதர கருத்து வேறுபாடு, கைக்கெட்டியது வாய்க்கு எட்டாமை போன்ற பிரச்சினைகள் அடிக்கடி நேரும். ஆனால், எதையும் இலகுவாக எடுத்துக்கொள்ளும் தன்மை உள்ளவர்கள் என்பதால் இதுபற்றி கவலைப்பட மாட்டார்கள்.

# பெற்றோர்கள் குழந்தைகளிடம் கடைபிடிக்க வேண்டியவைகள்



1. பசி என்று குழந்தை சொன்னால், உடனே உணவு கொடுங்கள், அரட்டையிலோ, சோம்பலிலோ, வேறு வேலையிலோ குழந்தையின் குரலை அலட்சியப்படுத்தாதீர்கள்!
2. மேலாடையின்றியோ, ஆடையே இன்றியோ குழந்தைகள் உங்களுக்கு குழந்தையாய் தெரியலாம், எல்லோருக்கும் அப்படியே தெரியும் என்று எண்ணி விடாதீர்கள்.
3. ஒரு போதும் சீ வாயை மூடு தொணதொண என்று கேள்வி கேட்காதே என்று அவர்களிடம் எரிச்சல் காட்டி, அவர்களின் ஆர்வத்தை குழிதோண்டி புதைத்து விடாதீர் கள்!
4. பாடசாலைக்கு ஏதோ ஒரு வாகனத்தில் தனியாகவோ, பிற குழந்தைகளுடனோ அனுப்பினால், அந்த வாகன ஓட்டுனரின் முழு விவரமும் தெரிந்து கொள்ளுங்கள், அவர் வீட்டு முகவரி உட்பட.
5. வாகன ஓட்டுனரின் நடத்தையிலும், பழக்க வழக்கத்திலும் ஐயமின்றி தெளிவுறுங்கள்!
6. பெரும்பாலான வாகன ஓட்டுனர்கள், மூட்டைகளைப் போல் குழந்தைகளை அடைத்து, மரியாதையின்றி பேசுவதும், தொடக் கூடாத இடங்களைத் தொடுவதும், சில இடங்களில் நடக்கிறது.
7. யார் அழைத்தால் போக வேண்டும், யார் கொடுத்தால் வாங்க வேண்டும் என்று குழந்தைகளுக்கு தெளிவுப்படுத்துங்கள்
8. குழந்தைகள், வீட்டின் முகவரி, பெற்றோரின் தொலைப்பேசி எண்கள் அறிந்திருத்தல் நலம்.
9. வீட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் இருந்தால், ஒருபோதும் ஒருவருடன் மற்றவரை ஒப்பிட்டு பேசாதீர்கள், வயது வித்தியாசம் எப்படி இருந்தாலும்!
10. ஒரு கட்டத்துக்கு மேல், உங்கள் விருப்பங்களை குழந்தையின் மேல் திணிக்காதீர்கள்.
11. வீட்டில் குழந்தைகள் இருக்கும் போது, வன்முறை, காதல், கொலை, களவு போன்றவை நிறைந்த திரைக்காட்சிக்களையோ, நிகழ்ச்சிகளையோ பார்க்காதீர்கள்!
12. பெரியவர்கள், பெண்கள் எப்போதும் நாடகங்களில் மூழ்கி இருக்காமல், குழந்தைகளுக்கு பிடித்தாற் போலோ, அல்லது அவர்களுக்கு பொது அறிவு பெருகும் வகையிலான நிகழ்ச்சிகளை பார்ப்பது நலம்.
13. குழந்தைகளிடம் தினம் நேரம் செலவிடுங்கள், ஒரு தோழமையுடன் அவர்கள் சொல்வதை காது கொடுத்துக் கேளுங் கள்.
14. தவறுகளைத் தன்மையுடன் திருத்துங்கள், தண்டிக்க நினைக்காதீர்கள்!
15. ஒருமுறை நீர் ஊற்றியவுடன், விதை மரமாகிவிடாது, நீங்கள் ஒருமுறை சொன்னவுடன் குழந்தைகள் உங்கள் விருப்பப்படி மாறிவிட மாட்டார்கள். உங்களுக்குப் பொறுமை அவசியம்.
16. பாடசாலை விட்டு வரும் குழந்தைகளை அன்புடன் அரவணைத்து, வேண்டியதைச் செய்ய அம்மாவோ, பெரியவர்களோ வீட்டில் இருத்தல் வேண்டும்!
17. குழந்தைகளின் எதிரில் புறம் பேசாதீர்கள். பின்னாளில் அவர்கள் உங்களைப் பற்றி பேசலாம்.
18. உங்கள் பெற்றோரை நடத்தும் விதம், உங்கள் பிள்ளைகளால் கவனிக்கப் படுகிறது. நாளை உங்களுக்கு அதுவே நடக்கலாம்!
19. படிப்பு என்பது அடிப்படை, அதையும் தாண்டிக் குழந்தைகளுக்கு உள்ள மற்ற ஆர்வத்தையும் ஊக்குவியுங்கள்.
20. ஓடி ஆடி விளையாடுவது குழந்தைகளின் ஆரோக்கியத்துக்கு அவசியம். விளையாட்டுக்குத் தடை போடா தீர்கள்.
21. குழந்தைகள் கேள்வி கேட்கட்டும், அவர்களின் வயதுக் கேற்ப புரியும்படி பதில் சொல் லுங்கள்! பொது அறிவுக் கேள்விகள் கேட்கப் படும் போது தெரிந்தால் சொல்லுங்கள், தெரியா விட்டால் பிறகு சொல்லுகிறேன் என்று சொல்லுங்கள். சொன்னபடி கேள்விக்கான பதிலை அறிந்து கொண்டு, மறக்காமல் அவர் களிடம் சொல்வது அவசியம்.
22. குழந்தைகளைத் தனியே கடைக்கு அனுப்பும் போது கவனம் தேவை, நெடு நேரம் குழந்தை நிற்க வைக்கப்பட் டாலோ, பொருள்கள் மிகுதியாகவோ, இலவசமாகவோ வழங்கப்பட்டாலோ கவனம் தேவை.
23. ஆணோ, பெண்ணோ, எந்தக் குழந்தையாய் இருந்தாலும், அவர்களுக்கு சிறு வயதிலேயே புரிய வேண்டியது எவை என்பதை பெற்றோர்கள் சொல்லிக் கொடுங்கள்.
24. ஒரு போதும், உங்கள் குழந்தைகளின் எதிரே சண்டை இடாதீர்கள்!
25. ஒவ்வொரு குழந்தையும் ஒரு வரம், அவர்கள், ஒரு போதும் உங்கள் கோப தாபங்களின் வடிகால்கள் அல்ல!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டுநாயும் சிறுத்தைப்புலியும்



ஒரு காட்டில் காட்டுநாய் ஒன்று சுற்றித் திரிந்து கொண்டு இருந்தது. அப்போது ஒரு சிறுத்தைப்புலி தன்னை நோக்கி வேகமாக வந்துகொண்டிருந்ததை அந்தக் காட்டு நாய் பார்த்தது.


நாயைப் பிடித்துத் தின்ன வேண்டும் என்பது தான் சிறுத்தைப் புலியின் நோக்கம். எப்படி அதனிடம் இருந்து தப்பிச் செல்வது என்பது காட்டு நாயின் கவலை. ஓடிச் செல்வதால் பயனில்லை. ஏனென்றால் எவ்வளவு வேகமாக ஓடினாலும் சிறுத்தைப் புலியின் அளவுக்குக் காட்டு நாயால் வேகமாக ஓட முடியாது. எனவே காட்டு நாய் உடனே மிக வேகமாக யோசிக்கத் தொடங்கியது. அருகில் சில எலும்புகள் கிடந்தன. அவற்றைப் பார்த்தும் உடனே அந்தக் காட்டு நாய்க்கு ஒரு யோசனை பிறந்தது.

சிறுத்தைப் புலியின் பக்கம் தனது முதுகை திருப்பிக் கொண்டுகீழே அமர்ந்து அந்த எலும்புகளை மென்று தின்பது போல் கடிக்க ஆரம்பித்தது. சிறுத்தைப்புலி அருகில் வந்து தன் மீது பாய்வதற்கு தயாரான போது காட்டுநாய் உரத்த குரலில் இப்போது நான் தின்று முடித்த சிறுத்தைப்புலி மிகவும் சுவையாக இருந்தது. அக்கம் பக்கத்தில் வேறு சிறுத்தைப்புலி கிடைக்குமா? என்று தேடிபார்க்க வேண்டும் என்றது. இதைக் கேட்டதும், பயந்து போய் சிறுத்தைப்புலி அப்படியே ஸ்தம்பித்து சிலை போல் நின்று விட்டது. இந்தக் காட்டு நாய் சிறுத்தைப் புலிகளையே கொன்று தின்று விடுகிறதே. அப்படியானால் எவ்வளவு பலம் வாய்ந்ததாய் இருக்க வேண்டும். இதனிடம் அகப்படாமல் தப்பிச் சென்று விட வேண்டும் என்று நினைத்து ஓசைப்படாமல் பின்னோக்கிச் சென்று, சிறுத்தைப்புலி புதருக்குள் மறைந்து விட்டது. அருகில் இருந்த ஒரு மரத்தின் மீது உட்கார்ந்து இருந்த ஒரு குரங்கு நடந்ததை எல்லாம்கவனித்துக்கொண்டிருந்தது. தனக்கு தெரிந்த தகவலை சிறுத்தைப் புலியுடன் பகிர்ந்து கொண்டு சிறுத்தைப்புலியுடன் பேரம் பேசி தனக்கு பாதுகாப்பு தேடிக்கொள்ளலாம் என்று அந்தக் குரங்கு கருதியது. எனவே சிறுத்தைப் புலியை பின் தொடர்ந்து அந்தக்குரங்கு வேகமாக ஓடிச் சென்றது. காட்டு நாயும் இதைக் கவனித்தது. ஏதோ சதி நடக்கிறது என்பதைப் புரிந்து கொண்டது.

குரங்கு, சிறுத்தைப்புலியிடம் சென்று காட்டு நாய், உங்களை எப்படி ஏமாற்றியது என்ற முழு விவரத்தையும் கூறியது. சிறுத்தைப்புலிக்குத் தாங்க முடியாத கோபமும், ஆத்திரமும் வந்தது. அந்தக் காட்டு நாய் என்னையே ஏமாற்றலாம் என்று நினைக்கிறதா? அதற்கு மறக்க முடியாத பாடத்தைப் புகட்டுகிறேன். இந்தக் காட்டில் யார் யாரைக் கொன்று தின்பார்கள் என்பதைக் காட்டுகிறேன் என்று கூறி விட்டு, குரங்கே வா! எனது முதுகில் ஏறி உட்கார். இருவரும் அந்தக் காட்டு நாயைப் பிடிக்கலாம் என்றது. குரங்கு, சிறுத்தைப்புலியின் முதுகில் ஏறி உட்கார்ந்தது. இரண்டும் நாயை நோக்கிச் சென்றன. சிறுத்தையும், குரங்கும் சேர்ந்து வருவதைக் காட்டு நாய் கண்டது. இந்தத் திருட்டுக் குரங்கு என்னை இப்படி ஆபத்தில் மாட்டி விட்டதே இப்போது என்ன செய்வது? என்று அந்தக் காட்டு நாய் யோசித்தது. அப்படி யோசித்ததே தவிர, அதற்காக அந்தக் காட்டு நாய் பயந்து ஓடவில்லை. அந்தச் சிறுத்தையையும், குரங்கையும் பார்க்காத மாதிரி நடித்து அவற்றுக்கு தனது முதுகைக் காட்டிக் கொண்டு தரையில் அமர்ந்தது. அவை அருகில் நெருங்கியதும் அந்தக் காட்டு நாய் உரத்த குரலில் கூறியது. அந்தப் போக்கிரிக் குரங்கு எங்கே போய் தொலைந்தது. அதனை நம்பவே முடியாது. நான் இன்னொரு சிறுத்தைப்புலியைச் சாப்பிடுவதற்கு பிடித்துக்கொண்டுவா என்று கூறி அனுப்பி அரை மணிநேரத்துக்கு மேல் ஆகிவிட்டது. இன்னும் அந்த குரங்கைகாணோமே? என்றது. காட்டு நாய் சொன்னதைக் கேட்ட சிறுத்தைப்புலி தனது கோபம் முழுவதையும் குரங்கின் மீது திருப்பியது. அதனைக் கடித்துக் குதறிக் கொன்று தின்றுவிட்டது.

நீதி: வாழ்க்கையில் பல பிரச்சினைகள் வரலாம். ஆபத்துக்கள் வரலாம். பிரச்சினைகளை நேருக்கு நேர் சந்தியுங்கள். வெல்லலாம்.



## ஆடும் குதிரை

அழகு மிக்க குதிரை
ஆட்டம் ஆடும் குதிரை
முன்னும் பின்னும் அசையவே
துள்ளி மகிழ்ந்து ஆடுவேன்
புல்லும் கொள்ளும் தின்னாது
கோதுமை அல்வா கேட்காது
பெற்றோல் எதுவும் வேண்டாமே
நானே துள்ளி ஆடிடுவேன்



## பொது அறிவுத்தகவல்கள்

1.உலகிலேயே மிகப்பெரிய அரண்மனை எது?
வத்திக்கான் அரண்மனை

2. கங்காரு அதிகம் உள்ள நாடு?
ஆஸ்திரேலியா.

3.கண்கள் திறந்த நிலையிலேயே தூங்கும் மிருகம் எது?
முதலை.

4.மஞ்சள் காமாலை நோயைக் குணப்படுத்தும் மூலிகைத் தாவரம் எது?
கீழ்க்காய் நெல்லி.

5.வனவிலங்கு தடுப்புச்சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு எது?
கி.பி. 1890.

6.உலக சுற்றுச்சுழல் தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?
ஜுன் 5.

7.இதய நோயாளிகள் பயன்படுத்த வேண்டிய எண்ணெய்?
சூரியகாந்தி எண்ணெய்.

8.உலகிலேயே மிகப்பெரிய விமான நிலையம் எது?
பீஜிங் சர்வதேச விமான நிலையம், சீனா

9.சிவஞானபோதத்தை எழுதியவர் யார்?
மெய்கண்ட தேவர்

# கனவுகள் நனவாகும் காலம்



திட்டங்கள் இல்லாமல் இலக்குகள் இல்லாமல் வாழும் வாழ்க்கையில் சுவாரஸ்யம் எப்படி இருக்க முடியும். அந்த வாழ்க்கை அர்த்தமற்றது எனத் தோன்றும். ஆனால் குறியீடுகளின் அடிப்படையில் குறிக்கோள்களை குறுக்கிக் கொள்ள வேண்டாம். வாழ்க்கையில் இலக்கு இருக்க வேண்டும் என்ற நிலையில் இருந்து இலக்குகள் பற்றிய பார்வையும் புரிதலும் இருக்க வேண்டும் என்ற இடத்துக்கு காலம் நம்மை அழைத்து வந்திருக்கிறது. இலக்குகள் என்பவை மாறிக்கொண்டே இருக்க வேண்டும் என்பதுதான் வாய்ப்புக்கள் அதிகரித்து இருக்கும் இன்றைய காலகட்டத்தின் தேவை. காலம் மாறி இருக்கிறது. மனிதர்களும் மாறியிருக்கிறார்கள். அப்படியானால், இலக்குகள் பற்றிய புரிதலும் மாறவேண்டும். இலக்குகளைக் குறியீடுகளில் இருந்து எடுத்து எனது வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும் என்பதன் மீது செலுத்த வேண்டி இருக்கிறது. எனது வாழ்க்கை எப்படியிருக்க வேண்டும் என்பது குறித்த இலக்குகளை உருவாக்குவோம். அந்தக் கனவும் இலக்கும் நாம் என்ன ஆக வேண்டும் என்பதைச் சொல்லிவிடும். வாழ்க்கை குறித்து நாம் வரைந்து வைத்திருக்கும் வரைபடம் மனக்கண்ணில் ஓடிக் கொண்டு இருக்கும் போது அதை அடைவதற்கான வாயில்களையும் அடையாளம் காண முடியும். குறியீட்டு இலக்குகளை வைத்துக் கொண்டு அடைபட்ட கதவுகளை அடித் துக் கொண்டு இருக்கலாம் அவ்வளவுதான்.

இன்னும் சில வருடங்களில் நிலவுக்கும் பூமிக்கும் சாதாரண மனிதர்கள் கூட ரொக்கெட்டில் பயணிக்கலாம். விலங்குகளுக்கு ஒரு மாத்திரை கொடுப்பதன் மூலம் அவை மனிதனைப் போல பேசும் நாள் வரலாம். கணினி; மொத்தமும் அழிந்து போய் சின்னதாக ஒரு சிம் கார்டை உடம்பில் பொருத்திக்கொண் டால் உள்ளங்கையில் மொனிட்டர் தெரியும் நிலை உருவாகலாம். எயிட்ஸுக்கு கு எலி பாஷாணமும் புற்றுநோய்க்கு அகத்திக்கீரையும் மருந்தென்று முடிவு செய்யப்படலாம். செவ்வாய்க் கிரகத்தி லிருந்து பூமிக்கு வரும் மனிதர்களுக்கு சிறப்புத் தங்கும் விடுதிகள் உருவாக்கப்படலாம்.

இப்போது இருக்கும் சுழலை மட்டும் வைத்துக் கொண்டு ஏதாவது ஒரு குறியீட்டை இலக்காகத் தீர்மானிக்காதீர்கள். நமது பயணத்தில் வாழ்க்கை நிறைய விடயங்களைச் சொல்லித் தரும். காலம் பல தளங்களை அறிமுகப்படுத்தும். ஒட்டுமொத்த உலகமும் ஒரே தீவாக மாறிப்போனாலும் அதில் எனக்கென்று ஒரு தனி இடம் வேண்டும் என்று சிந்தியுங்கள். இலக்குகளை அடுத்தவர்கள் தீர்மானிக்கும் பழக்கம் குறைந்து கொண்டே வருகின்றது. குறியீடுகளுக்குள் சுருங்கிக் கொள்ளாமல் இலக்குகளை நோக்கி சிறகை விரிக்கலாம். இது கனவுகள் நனவாகும் காலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.க. வருடாந்த மாநாட்டில் சு.க. தலைவரும் பங்கேற்றார்

## இலங்கை வரலாற்றில் இதுவே முதல்முறை

இலங்கை அரசியல் வரலாற்றில் முதன்முறையாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் ஒருவர் ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த மாநாட்டில் பங்கேற்றுள்ளார்.

இலங்கை அரசியலில் ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தான் பிரதான இரு கட்சிகள். இவ்விரு கட்சிகளுமே நாட்டை மாறி மாறி ஆட்சிசெய்துள்ளன. அதனால் இந்த இரு கட்சிகளும் கீரியும் பாம்பும் என்ற நிலையில்தான் கடந்த காலங்களில் இருந்துவந்தன.

எனினும், ஜனாதிபதித் தேர்தலோடு அந்நிலை மாறி தற்போது புதியதொரு அரசியல் கலாசாரம் உருவாகியுள்ளது என்பதற்கு ஐ.தே.க. மாநாட்டில், சு.க. தலைவர் பங்கேற்றமை சிறந்த எடுத்துக்காட்டாகும்.

ஐ.தே.க. ஆரம்பிக்கப்பட்டு 69 ஆண்டுகளும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆரம்பிக்கப்பட்டு 64 ஆண்டுகளும் கடந்துள்ள நிலையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஐ.தே.கவின் மாநாட்டில் விசேட அதிகதியாக நேற்று பங்கேற்றார். இது இலங்கை அரசியலில் முக்கியமான தொரு திருப்புமுனையாக பார்க்கப்ப டுகிறது.

சிறுபான்மைக் கட்சிகளின் அமைச்சர்களான தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், உப தலைவர் பழனி திகாம்பரம், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியூதீன் மற்றும் சிறு கட்சிகளான நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் சம்பிக்க ரணவக்க, எம்.கே. ஏ.டி.எஸ்.குணவர்தன, ஜனநாயக கட்சித் தலைவர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, நாடாளுமன்ற உறுப்பினர்களான வடிவேல் சுரேஷ், அரவிந்த குமார் என தேசிய அரசின் பங்காளிகள் பங்கேற்ற அதே வேளை, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் ஜனாதிபதி மைத்திரியைத் தவிர, வேறு எவரும் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பிரதமரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியத் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தலைமையில் முற்பகல் 10.15 மணியளவில் ஆரம்பமான கட்சி யின் 69ஆவது வருடாந்த மா நாட்டில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விசேட அதிதியாகக் கலந்து கொண்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களான லக்ஷ் மன் கிரியெல்ல, கபீர் ஹாஸிம், ரவி கருணாநாயக்க, மங்கள சமரவீர, சஜித் பிரேமதாஸ, டி.எம்.சுவாமிநாதன், மலிக் சமரவிக்ரம, ஹெரான் விக்கிரம ரட்ன, ஹரின் பெர்னாண்டோ, ருவான் விஜேவர்தன, கயந்த கருணாதிலக, காமினி ஜயவிக் கிரம பெரேரா, ரஞ்சன் ராமநாயக்க, அகிலவிராஜ் காரியவசம், பாலித ரங்கே பண்டார, விஜேதாஸ ராஜபக்ஷ ஆகியோர் உட்பட ஏனைய உறுப்பினர்கள் மற்றும் கட்சி ஆதரவாளர்களும் பங்கேற்றனர்.

**ஜனாதிபதிக்கு விசேட வரவேற்பு இல்லை**

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன ஐக்கிய தேசியக் கட்சித் தலை மையகமான சிறிகொத்த மண்டபத்துக்குள் பிரவேசித்தபோது, அவருக்கு விசேட வரவேற்பு வழங்கப்படாதிருந்ததை அவதானிக்க முடிந்தது.

ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன வருகை தருகின்றார் என்ற அறிவிப்புகூட விடுக்கப்படவில்லை. சாதாரண ஒருவர் போலவே அந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி பங்கேற்றிருந்தார். இதேவேளை, சிறு மற்றும் சிறுபான்மைக் கட்சிகளின் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற் றிருந்தபோதும், பங்கேற்றவர்கள் குறித்து எவ்வித அறிவிப்பும் விடுக்கப்படவில்லை.

**ஊடகவியலாளர்களுக்கும் கெடுபிடி**

மாநாட்டில் பங்கேற்க பெருமளவான ஆதரவாளர்கள் சிறிகொத்தவிற்கு வந்தனர். பாதுகாப்பு மற்றும் உதவியாளர் கள் இருந்தபோதும், அவர்களை சரியான முறையில் உள்ளே அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் இல்லாதிருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. ஊடகவியலாளர்களும் சிறிதுநேரம் தடுத்து வைக்கப்பட்ட பின்னரே உள்ளே அனுமதிக்கப்பட்டனர்.

நிகழ்வில் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க, வீடமைப்பு மற் றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், அரச தொழில் அபிவிருத்தி அமைச்சர் கபீர் ஹாஸிம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோரும் உரையாற்றினர். (ற-சி)

## அடுத்த மாதம் இந்தியாவுக்கு பயணமாகின்றார் மைத்திரி

கொழும்பு, செப்.7

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அடுத்த மாதம் இந்தியாவுக்கு மூன்று நாள் பயணத்தை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அடுத்த மாதம், 8ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி வரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்திய பயணத்தை மேற் கொள்ளவுள்ளார்.

அவரது இந்தப் பயணம், பிராந்தியத்தில் பௌத்த மதத்தை ஊக்குவிப்பது தொடர்பானதாகவே அமையும் என்று புதுடில்லி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்தப் பயணத்தின்போது, ஜனாதிபதி சிறிசேன புதுடில்லியில் இந்திய அரச தலைவர்களைச் சந்திப்பாரா என்பது பற்றிய தகவல்கள் ஏதும் வெளியாகவில்லை.

கடந்த ஜனவரி மாதம் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த பெப்ரவரி மாதம் இந்தியாவுக்குத் தனது முதல் வெளி நாட்டுப் பயணத்தை மேற் கொண்டிருந்தார் .(ற-சி)

## கடனாளிகளை காப்பாற்ற களமிறங்குகிறார் மேர்வின்

### புதிய முன்னணியை உருவாக்க போவதாகவும் அறிவிப்பு

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா, கடனாளிகளைக் காப்பாற்றும் முன்னணி ஒன்று உருவாக்கப்படவுள்ளது என்று அறிவித்துள்ளார்.

வாகனங்களை லீசிங் அடிப்படையில் பெற்றுக்கொண்டு நெருக்கடியில் சிக்கியவர்களை பாதுகாக்கும் நோக்கில் குரல் கொடுக்கப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

புதிய முன்னணி ஒன்று உருவாக்கப்படும். நாடு முழுவதிலும் பாரியளவில் லீசிங் மாபியா ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இது தொடர்பில் பேசுவதற்கும் குரல் கொடுப்பதற்கும் எவரும் முன்வரவில்லை.

வாகன லீசிங் பெற்றுக்கொண்டு சிக்கித் தவிக்கும் அப்பாவி மக்களை காப்பாற்றுவது தொடர்பில் விரிவாக பேசப்பட வேண்டும்.- என்றார். (ற)

## எதிர்கால நடவடிக்கைகளுக்காக ஐ.தே.க. நிதியம் ஆரம்பிக்கின்றது

கொழும்பு, செப்.7

ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்கால நடவடிக்கைகளைக் கருத்திற்கொண்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இந்த நிதியத்துக்காக முதலில் 200 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்படவுள்ளது.

இளைஞர் காரியாலய கட்டடத்தை மூன்று அல்லது நான்கு மாடிக் கட்டடமாக மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.


கட்சித் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று இடம்பெற்ற கட்சியின் 69ஆவது வருடாந்த மாநாட்டில் உரையாற்றியபோதே பிரதமர் ரணில் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

"நாம் 69ஆவது ஆண்டைப் பூர்த்தி செய்து 70ஆவது ஆண்டில் காலடி எடுத்துவைக்கின்ற சந்தர்ப்பத்தில் எமது கட்சிக்காக முதலீடுசெய்ய நிதியமொன்றை ஆரம்பிக்கவுள்ளோம். அன்றாட நடவடிக்கைகளுக்காக அல்ல, எதிர்காலத்திற்குப் பயன்படும் வகையில் இந்த நிதியம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்த நிதியத்திற்கு முதலாவதாக 200 மில்லியன் ரூபா நிதியை நாம் பெற்றுக் கொடுக் கின்றோம்" எனத் தெரிவித்தார். (ற-சி)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

### சுப்பையா அருள் நேசன் (ஆசிரியர்)



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா அருள் நேசன் (ஆசிரியர்) 06.09.2015 ஞாயிற்றுக் கிழமை கால மானார்.

அன்னார் சந்திரவதனியின் அன்புக் கணவரும் அருள்வதனன், ஜெயவதனி, திவ்யவதனி, திருபவதனி (டென்மார்க்), கோகிலவதனி, டினேஸ், லோகிதன் (யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), தேவகன் (ஏஞ்சல் இன்ர நஷனல் ஸ்கூல்) ஆகியோரின் அன்புத் தந்தையும் வனிதா, நாகநாதன், கணேஸ்வரன் (கணபதி களஞ்சியம்), ஜெயந்திரன் (டென்மார்க்), குணலிங்கம் ஆகியோரின் அன்பு மாம னாரும் யுவகரன், யுவலக்சியா, கேச வன், அபிராமி, இந்துஜா, இந்துஜன், கலக்சிகா, தவினி, டஸ்மிதா ஆகியோரின் அன்புப் பேரனும் குமனோகரனின் மைத்து னரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2015) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப 2.30 மணியளவில் பூதவுடல் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


ஐயனார் சந்தியடி, சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய்.

தகவல்:- குடும்பத்தினர்.

## நடமாடும் சேவை

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவினரால் நடமாடும் சேவை ஒன்று இன்று நடத்தப்படவுள்ளது. கிராம சேவகர் பிரிவு ஜே/89, ஜே/90, ஜே/91, ஜே/92, ஜே/93, ஜே/94, ஜே/95, ஜே/96 ஆகிய பிரிவுகளில் காலை 8 மணி தொடக்கம் பி.ப.1மணி வரை குறித்த சேவைகள் நடைபெறும் என யாழ்ப்பாணப் பொலிஸ் பிரி வினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## கண்ணீர் அஞ்சலி



எமது அன்புக்குரிய மாமனார்

**சுப்பையா அருள்நேசன்**

அவர்கள் (06.09.2015) ஞாயிற்றுக் கிழமை காலமானதையிட்டு மிகுந்த அதிர்ச்சியும் கவலை யும் அடைகின்றோம்.

அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இல. 9 ஐயனார்கோயில் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

அ. கணேஸ்வரன் (குமார்) குடும்பத்தினர். கணபதி களஞ்சியம்

## திருமதி விஜயகரி அருட்செல்வம்



அல்வாயைப் பிறப்பிடமாகவும், உடுப்பிட்டி, இலக்கணாவத்தையை புகுந்த இடமாகவும், சுவிற்சர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயகரி அருட்செல்வம் கடந்த 01.09. 2015 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகநாயகம் மற்றும் தவமணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தியாகராஜா மற்றும் சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், அருட்செல்வத்தின் அன்பு மனைவியும், ரஜேந்தினியின் அன்புத் தாயும், ரஜிதர னின் அன்பு மாமியும், சுபாஸ், சுதா காலஞ்சென்ற சுரேஸ் மற்றும் சுதேஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சோபனா, இலங்கேஸ்வரன், புஸ்பலதா, பரமேஸ்வரி, காலஞ்சென்ற திருச்செல்வம் மற்றும் றஞ்சித மலர், ஜெயமங்களம், சிவலோகநாதன், சிவகணநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், அபிசாந், யதுர்ஷா ஆகியோரின் பெரிய தாயாரும், பிரியானா, டிசான், அக்ஷயா, அபிஷயன் ஆகியோரின் அன்பு மாமியா ரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07/09/2015) திங்கட்கிழமை சுவிற்சர்லாந்து ஜெனிவாவில் நடைபெறும்.

இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தொலைபேசி இலக்கம்:
இலங்கை :- 077 910 5586
சுவிஸ்:- 0041225400177
நோர்வே:- 0047 461 31278

தகவல் :
குடும்பத்தினர்.
சின்னாலடி, அல்வாய் தெற்கு, அல்வாய்.

## மரண அறிவித்தல்

### தம்பி ஐயா குணநாயகம் (றாசு)

(உரிமையாளர் கலைவாணி அரிசி ஆலை கொக்குவில் குமரன் ஸ்ரோர்ஸ் திருநெல்வேலி சந்தி)



பலாலி வீதி திருநெல்வேலி வடக்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தம்பிஐயா குணநாயகம் நேற்று (06.09.2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பி ஐயா - இராசம்மா தம்பதியினரின் அன்பு மகனும் இணுவில் கிழக்கு சிவகாமி அம்மன் கோயிலடியை சேர்ந்த காலஞ் சென்றவர்களான ஐயாத்துரை முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் பராசக்தியின் அன்புக் கணவரும் அருள்வரதன் (ஜேர்மனி), அருட்குமரன் (கலைவாணி அரிசி ஆலை கொக்குவில்) அருட்செல்வன் (மாவட்ட நிலஅளவைத்திணைக்களம் யாழ்ப்பாணம்) காலஞ் சென்றவர்களான சிவாஜினி, அருட்சொருபன் மற்றும் அருள் ஈசன் (குமரன் ஸ்ரோர்ஸ் திருநெல்வேலி), அருட் கண்ணன் (சுதன் - கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் இரத்தினசபாபதி, தையல்நாயகி, காலஞ்சென்ற செல்வராசா மற்றும் இராஜேஸ்வரி, சந்திராதேவி (ஓய்வு பெற்ற ஆசிரியர்), சிவலோகநாதன் (ஓய்வு பெற்ற உதவி விவசாயப் பணிப் பாளர்) ஆகியோரின் அன்பு சகோதரரும்சுதாகினி (ஜேர்மனி), சிவ லோஜினி, உதயகுமாரி, தட்சாயினி ஆகியோரின் அன்பு மாமனாரும் நிலக்ஷனா, கிருத்திகா, திரிஷியா, பவித்திரா, சங்கீத், ஹம்ஷனா, பானுஷா, திவ்வியன், தீபிகன், அபிஷன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.09.2015 புதன்கிழமை மு.ப 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

86/8, பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.
021 222 7690

தகவல்:- குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமிய வங்கி திறப்பு விழா

அச்சுவேலி, செப்.7

அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிராமிய வங்கி புதிய செயலக திறப்பு விழா இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் இ.சந்திரன் தலைமையில் நடைபெறும் திறப்பு விழாவில் வடக்கு மாகாண விவசாய கமநல சேவைகள் கால்நடை கூட்டுறவு அபிவிருத்தி உணவு நீர்வழங்கல் நீர்ப்பாசன அமைச்சர் பொ.ஐங்கரநேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் சு.கணேசு ஆகியோரும் கௌரவவிருந்தினராக கூட்டுறவு அபவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஜெயா மேரி கொன்சியும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-11)

# முதலமைச்சர்கள் தெரிவில் சிக்கல்

கொழும்பு, செப்.7

நடைபெற்று முடிந்துள்ள நாடாளுமன்ற தேர்தலையடுத்து மூன்று மாகாண சபைகளுக்கான முதலமைச்சர் பதவிகள் வெற்றிடமாகியுள்ள நிலையில் பதவிக்கு உரிய நபர்களை நியமிப்பதில் சிக்கல்கள் காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த பொதுத் தேர்தலில் ஊவா, மேல், வடமேல் மாகாண சபைகளின் முதலமைச்சர்கள் போட்டியிட்டு வெற்றிபெற்றிருந்த நிலையில் குறித்த முதலமைச்சர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

குறித்த பதவிகளை எட்டிப்பிடிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி என்பன மும்முரமாக செயற்பட்டுவருவதினால் இதற்கு தீர்வு காண்பதற்கு ஜனாதிபதிக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தலுக்கு முன்னர் வடமேல், மேல் மாகாணங்கள் என்பன ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அதிகாரத்திலும், ஊவா மாகாண ஆட்சி அதிகாரம் ஐக்கிய தேசியக்கட்சியிடம் இருந்தது. (ற)

# எக்னலிகொடவிவகாரத்தில் அரசியல்வாதிகள் அழுத்தம்

கொழும்பு, செப்.7

கடத்தப்பட்டு காணாமற்போயுள்ள ஊடகவியலாளர் பிரதீப் எக்னலிகொட தொடர்பான விசாரணைகளை முன்னெடுப்பதைத் தடுக்கும் நோக்கில் முன்னாள் அரசியல்வாதிகள் பலரின் பல்வந்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

எக்னலிகொட கடத்தல் விவகாரம் தொடர்பில் இதுவரை இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவு லெப்டினன் கேர்ணல் ஒருவரும் இராணுவத்தினர் ஏழுபேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் முன்னாள் அரசியல்வாதிகளின் பலவந்தங்களால் குற்றவியல் விசாரணைப் பிரிவு அதிகாரிகள் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.(ற)

# பொதுக்கூட்டம்

கைதடி, செப் . 7

கைதடி பொது நூலக ஆலோசனை அபிவிருத்திச் சபையின் ஆண்டுப் பொதுக்கூட்டம் இன்று திங்கட்கிழமை பி.ப.4 மணிக்கு நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கூட்டத்தில் கைதடியிலுள்ள சனசமூக நிலையங்கள், மாதர் கழகங்கள் மற்றும் கல்விக் கழகங்கள் ஆகியவற்றின் தலைவர், செயலாளர், உறுப்பினர்கள் ஆகியோரையும் கல்வி சார்ந்தபெரியோர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ற-288)

# நல்லாட்சி அரசும் எல்லை மீறுகிறது

## சோபித தேரர் குற்றஞ்சாட்டுகின்றார்

கொழும்பு, செப்.7

நல்லாட்சியை தொனிப்பொருளாக கொண்டு ஏற்படுத்தப்பட்ட தேசிய அரசும் எல்லையை மீறி செயற்பட்டு வருகின்றது என்று நீதியான சமூகத்திற்கான மக்கள் அமைப்பின் தலைவர் மாதுளுவாவே சோபித தேரர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாட்டில் ஏற்பட்ட புதிய அரசியல் மாற்றத்துக்கு முழுமையான பங்களிப்பை வழங்கிய பிரதான அமைப்புகள் இந்த குற்றச்சாட்டை சுமத்தியுள்ளமை முக்கிய அம்சமாகும்.

அமைச்சரவை நியமிக்கப்பட்டதோடு தேசிய அரசும் முறையற்ற திசை நோக்கி பயணிக்கும் அடையாளம் தென்பட்டுள்ளது – என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

அமைச்சரவை நியமிக்கப்பட்டுள்ள விதம் தவறானது என்பது அனைவருக்கும் புரியும். இது எங்கோ திசை மாறி செல்கிறது.

அரசமைப்பில் 30 பேர் கொண்ட அமைச்சரவையே நியமிக்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ள நிலையில், சுமார் 100 அமைச்சர்கள் நியமிக்கப்பட போகின்றனர்.

மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களுக்கு அமைச்சு பதவி வழங்கப்பட்டுள்ளது. இது அருவருக்கத்தக்க செயல். என்ன நடக்கின்றது என்பதை முழு நாடும் கவலையில் பார்த்து கொண்டிருக்கின்றது. இதனை விட அழகான பயணம் ஒன்றை மேற் கொண்டிருக்கலாம். தோற்றுபோன திருடர்களுடன் எப்படி இந்த பயணத்தை மேற்கொள்வது. இதற்கு அர்த்தம் என்ன?– என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

# எதிரி தோற்றதைக் கொண்டு குறைத்து மதிப்பிடக் கூடாது

## ஐ.தே.க. மாநாட்டில் மைத்திரி உண்மைகளை போட்டுடைத்தார்

கொழும்பு, செப்.7

அனைவரும் 24 மணித்தியாலங்களும் விழிப்புடன் இருக்க வேண்டும். எதிரி தற்போது தோற்றுள்ளதால் குறைத்து மதிப்பிடக்கூடாது . மேலும் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல நேர்மையுடன் செயற்பட வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் 69வது ஆண்டு விழா நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய போது இவ்வாறு குறிப்பிட்டார் . இந்த நிகழ்வில் ஜனாதிபதி தனது உரையில் தெரிவித்ததாவது:–

கடந்த ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் பரப்புரை நடவடிக்கைகளின் இறுதித் தினமான ஜனவரி 5ம் திகதி எம்பிலிபிடிய, களுத்துறை, மொறட்டுவை, உள்ளிட்ட கூட்டங்கள் பலவற்றில் நான் கலந்து கொண்டேன்.

இதில் இறுதி பரப்புரை கூட்டம் மருதானையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. மற்றைய அனைத்து கூட்டங்களிலும் கலந்துகொண்டமையால் பாதுகாப்பு சிக்கல் இருப்பதாகவும் அதனால் மருதானை கூட்டத்திற்கு அழைத்து செல்ல முடியாது எனவும் கூறி பாதுகாவலர்கள் மற்றும் சாரதி என்னை வீட்டினுள் தனியாக விட்டுச் சென்றனர்.

இதன்போது மருதானை கூட்டத்துக்கு நீங்கள் வரும் வரை நாம் காத்திருக்கிறோம் என ரணில் விக்ரமசிங்க அழைப்பை மேற்கொண்டு கூறினார். எனினும் எனது நிலையை எடுத்துக் கூறியபோது, யாரும் தேவையில்லை நான் வந்து உங்களை அழைத்துச் செல்கிறேன் எனக் கூறிய தற்போதைய பிரதமர் சில நிமிடங்களுக்குள்ளேயே எனது வீட்டுக்கு வந்தார். இதன்போது ரவி கருணாநாயக்கவும் உடனிருந்தார்.

பின்னர் என்னை பரப்புரை மேடைக்கு அழைத்துச் சென்ற ரணில் சுமார் பத்தாயிரம் பேர் கொண்ட கூட்டத்துக்கு நடுவில் சென்று கைகளை அசைத்து பரப்புரை செய்தேன்.ரணில் விக்ரமசிங்க கைகளை உயர்த்திய படி கூறியது எமது கூட்டத்தில் உங்கள் உயிருக்கு அச்சுறுத்தல் இல்லை.. என்பதே உண்மை.

அத்துடன் நவம்பர் 22ம் திகதிக்கு முன்னர் பொது வேட்பாளராக களமிறங்குவது குறித்து, தற்போதைய பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை சந்தித்து ஒரு செக்கன் கூட கலந்துரையாடியதில்லை.

மேலும் அப்போது நாடாளுமன்றத்தில் அமைச்சர் ஆசனத்தில் நான் இருந்த வேளை, ரணில் என்னை நோக்கி நாங்கள் செல்வோம். என்றபடி கண்களால் சமிஞ்சை செய்தார். சந்திரிகா பண்டாரநாயக்கவின் வீட்டுக்கு சென்று கலநதுரையாடவே நாம் திட்டமிட்டிருந்தோம்.

நான் ரணில் விக்ரமசிங்கவின் காரில் ஏறி சென்றபோது நாடாளுமன்றத்தின் முன்னாலுள்ள குளத்தை கடந்த வேளை சொப்பர் ஒன்று சென்றது. சில நிமிடங்கள் தாமதித்திருந்தால் அந்த சொப்பரில் வந்தவரால் நான் தடுக்கப்பட்டிருப்பேன் ..

மேலும் நான் ஜனாதிபதியாக ஐக்கிய தேசியக் கட்சி வழங்கிய ஆதரவை ஒருபோதும் மறக்க மாட்டேன். அதே போல் அனைவரும் 24 மணித்தியாலங்களும் விழிப்புடன் இருக்க வேண்டும். எதிரி தற்போது தோற்றுள்ளதால் குறைத்து மதிப்பிடக் கூடாது . மேலும் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல நேர்மையுடன் செயற்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதன்போது சுட்டிக்காட்டினார். (வ)

# அரசமைப்புகளில் மீள் திருத்தங்கள்

புதிய தேசிய அரசு சில அரசமைப்பில் மீள் திருத்தங்களை அறிமுகப்படுத்தவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தல் மீளமைப்பு, ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைத்தல், பத்திரிகை சுதந்திரம், உள்ளிட்ட மீளமைப்புக்களே நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளன என்று [illegible] வருகின்றது.

இவற்றைத்தவிர, தகவல்களை தெரிந்து கொள்ளும் சுதந்திரம் தொடர்பான யோசனை, சுதந்திரமான கணக்காய்வு யோசனை மற்றும் சிறுவர்களின் நீதிப்பாதுகாப்பு யோசனை என்பனவும் முன்வைக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை தேசிய அரசில் ஐக்கிய தேசியக்கட்சியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் பொதுவேலைத்திட்டங்களில் [illegible] முயற்சிகளும் முன்னெடுக்கப்படுகின்றன என்று நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார். (ற)

# அரசின் கடமையை நிறைவேற்றுவேன்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, செப்.7

"நாம் சேற்றுக்குழிக்குள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இந்த சேற்றுக் குழிக்குள் இருந்து இன, மத, மொழி, கட்சி எனப் பிரிந்திருப்பதா, இருதரப்பினராக இருந்து சண்டையிடுவதா?" எனக் கேள்வி எழுப்பிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சேற்றுக் குழிக்குள் இருந்து மீளவேண்டும் என்பதற்காகத்தான் தேசிய அரசை அமைத்தோம். நீங்கள் உங்கள் கடமையை நிறைவேற்றினீர்கள். நான், எனது கடமையை நிறைவேற்றுவேன்" என்றும் தெரிவித்தார்.

கட்சித் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று இடம் பெற்ற ஐ.தே.கவின் 69ஆவது வருடாந்த மாநாட்டில் உரையாற்றியபோதே மேற் கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார். அங்கு அவர்மேலும்தெரிவித்துள்ளதாவது:–

"சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர் என்ற அடிப்படையில் மட்டுமல்ல, எமது பொது வேட்பாளராகக் களமிறங்கி ஜனாதிபதியானவர் என்ற அடிப்படையில் இன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை இங்கு நாம் வரவேற்கின்றோம். இது வரலாற்று முக்கியத்துவமிக்க சந்தர்ப்பம். இதற்காக எமது கட்சி ஆதரவாளர்கள் பாரிய அர்ப்பணிப்பைச் செய்தனர். அதனால் உங்கள் அனைவருக்கும் நான் நன்றி கூறுகின்றேன். ஒருபோதும் வீழ்த்தமுடியாது என்றிருந்த குடும்ப ஆட்சியை உங்கள் அர்ப்பணிப்புடன் நாம் வீழ்த்தினோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. உள்ளிட்ட ஏனைய சிறுபான்மைக் கட்சிகளும் இணைந்து மைத்திரிபால சிறிசேனவை கடந்த ஜனவரி 8ஆம் திகதி ஜனாதிபதியாக்கினோம். அதை ஓகஸ்ட் 17 வரை முன்னோக்கிக் கொண்டு வந்தோம்.

இனிமேல் நீங்கள் ஓய்வெடுக்க வேண்டும். உங்களுக்குத் தொழில் தேவை, உங்களதும், உங்கள் குடும்பத்தினதும் அபிவிருத்தி குறித்து சிந்திக்கவேண்டும். நம்பிக்கையின்மை, அச்சம், பீதி என்பன இருக்கக்கூடாது. நீங்கள் உங்கள் கடமையை நிறைவேற்றினீர்கள். நான் எனது கடமையை நிறைவேற்றுவேன். உங்களது கடமைகளை நிறைவேற்றத்தான் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், எனக்கும் நாட்டின் ஆட்சிப்பொறுப்பை வழங்கியுள்ளீர்கள்.

ஐக்கிய தேசியக் கட்சி எப்போதும் புதுமையைப் பற்றித்தான் சிந்திக்கும். தற்போதுள்ள சமூக அரசியல், பொருளாதார முறைமையில் நாம் முன்னோக்கிச் செல்லமுடியாது. நாம் சேற்றுக்குழிக்குள் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். உங்களதும், உங்கள் பிள்ளைகளினதும், நாட்டினதும் எதிர்காலம் இல்லாமல் போயுள்ளது. இந்த சேற்றுக்குழிக்குள் இருந்து இன, மத, மொழி, கட்சி எனப் பிரிந்திருப்பதா, இருதரப்பினராக இருந்து சண்டையிடுவதா என நான் கேட்கின்றேன்.

இந்தத் தேர்தலில் எமக் குப் பெரும்பான்மைப் பலம் கிடைத்தது. எமக்குத் தேவை ஏற்பட்டிருந்தால் ஏனைய கட்சியிலிருந்து 6 ஆசனங்களை பெற்று அந்தக் கட்சிகளை உடைத்து தனியான அரசை உருவாக்கியிருக்கலாம். ஆனால், நாம் எந்தக் கட்சியையும் உடைக்காது தேசிய அரசை ஸ்தாபித்துள்ளோம். நாம் அனைவரும் ஒன்றிணைந்து இந்த சேற்றுக் குழிக்குள் இருந்து மீளவேண்டும் என்பதற்காகத் தான் அவ்வாறு செய்தோம். ஒவ்வொருவருக்கும் வீடு கட்டிக் கொடுக்க – அனைவருக்கும் தொழில் வாய்ப்பு கொடுக்க – உங்கள் பிள்ளைகளுக்குச் சிறந்த கல்வியைக் கொடுக்க– அனைவருக்கும் சிறந்த நாடொன்றை உருவாக்கவே நான் தேசிய அரசை அமைத் தேன்" –என்றார். (ற–சி)

# களனி கங்கைளை சூழவுள்ள தொழிற்சாலைகள் ஆராய்வு

## கழிவுகள் கங்கையில் கலக்கின்றனவா என அறிய

அம்பதலே நீர் சுத்திகரிப்பு மத்திய நிலையத்தை அண்மித்த களனி கங்கையை சூழவுள்ள 150 தொழிற்சாலைகள் தொடர்பில் ஆராய்வதற்கு தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தீர்மானித்துள்ளது.

குறித்த தொழிற்சாலைகளின் கழிவுகள் களனி கங்கையில் கலக்கப்படுகின்றதா என ஆராயப்படவுள்ளது என்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையுடன் இணைந்து இந்த திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்றும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பொது முகாமையாளர் ரஞ்சித் பாலசூரிய தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் அம்பதலே நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து 10 கிலோமீற்றர் தூரத்துக்குள் களனி கங்கையின் இருமருங்கிலும் அமைந்துள்ள அனைத்து இடங்களிலும் ஆய்வு நடத்தவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

# எதிர்க்கட்சித் தலைவர் நியமனம் சரியான முறையில் நடந்துள்ளது

## எஸ்.பி. திஸாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, செப்.7

நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் நியமிக்கப்பட்டமை மிகவும் சரியானது என்று அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

எப்படியிருப்பினும் ஆர்.சம்பந்தனின் செயற்பாட்டுக்கமைய அவரை எதிர்க்கட்சி தலைவர் பதவியில் இருந்து நீக்குவதற்கான வழி முறையொன்று காணப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் பதவி மக்கள் விடுதலை முன்னணிக்கு கிடைத்தில் எந்த பிரச்சினையும் இல்லை எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தனி அரசசொன்றை உருவாக்குவதற்கு, இராணுவத்தினரை தண்டிப்பதற்கு, அவர்களை போர் குற்றவாளியாக காட்டுவதற்கு முயற்சித்தால், அவ்வாறான சந்தர்ப்பங்களில் தேசிய அவசியத்துக்காக எதிர்க்கட்சி தலைவரை மாற்றி வேறு ஒருவரை நியமிக்கும் முறை தொடர்பில் சிந்திக்க முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் எதிர்கட்சி தலைவர் சம்பந்தன், இந்த நாட்டை பிளவுபடுத்த மாட்டேன், நாட்டை பிளவுபடுத்துவதை எதிர்ப்பதாகத் தெரிவித்துள்ளார் என்றும் எஸ்.பி.திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த ஆட்சியில் உச்சம் தொட்ட வெளிநாட்டு அமைச்சின் செலவு

கொழும்பு, செப்.7
2014ஆம் ஆண்டில் இலங்கை வெளிநாட்டு அமைச்சின் செலவினம் 9 பில்லியன் ரூபா என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த அரசில் பல அமைச்சுக்கள் பல்வேறு ஊழல்களில் ஈடுபட்டமை குறித்து தகவல்கள் வெளியாகி வருகின்றன. இந்தநிலையில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செலவினங்கள் 9 பில்லியன் ரூபா என்று தெரியவந்துள்ளது என்று ஆங்கில செய்தித்தாள் ஒன்று தெரிவித்துள்ளது.

அதேநேரம் 2013ஆம் ஆண்டிலும் வெளியுறவு அமைச்சின் செலவினம் 9,740,048,370 (9 பில்லியன்) ரூபாவாக இருந்தது. 2012 இல் அந்த அமைச்சின் செலவினம் 7,854,745,039 (7 பில்லியன்) ரூபாவாகவும், 2011ஆம் ஆண்டில் வெளியுறவு அமைச்சின் செலவினம் 6,842,509,786 (6 பில்லியன்) ரூபாவாகவும், 2010 ஆம் ஆண்டில் அது 6,165, 555, 654 (6 பில்லியன்) ரூபாவாகவும் இருந்தன.

இந்த செலவின தொகைகளுடன் ஒப்பிடும்போது கடந்த ஜனவரி முதல் மே 31 வரையிலான செலவினம் 3 பில்லியன் ரூபா மாத்திரமே என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 2010ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரை வெளியுறவு அமைச்சால் வெளிநாட்டுப் பயணங்களுக்காக மாத்தி[illegible] ண்டு பில்லியன் ரூபா வரை [illegible]ப்பட்டுள்ளன[illegible] தெரியவந்து[illegible]
20[illegible] ஆண்டி[illegible] மாத்திரம் வெ[illegible]வு அமைச்[illegible] வெளிநாட்டு பயண[illegible]ங்களுக்காக [illegible],09,126,070 [illegible] (3 பில்லியன்) ரூபாவைச் செலவ[illegible]ட்டுள்ளது.

இதனு[illegible]ன் ஒப்பி[illegible]ம் போது 2015 ஆம் ஆண்டில் வெளிநாட்டுப் பயணங்களுக்க[illegible] ஒரு பில்லியன் ரூபாவே [illegible]லவிடப்பட்டுள்ளது என்று தெரி[illegible]கப்படுகின்றது. (ற)

# கைதான மீனவரை விடுவிக்குமாறு 2ஆவது நாளாகவும் போராட்டம்

### இராமேஸ்வர மீனவர்கள் முன்னெடுப்பு

சென்னை, செப்.7
இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி இராமேஸ்வரத்தில் ஆரம்பிக்கப்பட்ட காலவரையற்ற வேலைநிறுத்த போராட்டம் இரண்டாவது நாளாக நேற்றும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சிறு மீன்பிடி படகுகளை தவிர பெருமளவிலான படகுகள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளன என்று இலங்கை இந்திய மீனவர் நலன்புரி அமைப்பின் இந்திய தலைவர் தேவதாசன் தெரிவித்துள்ளார்.

அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவதாக தெரிவித்து இருநாட்டு மீனவர்களும் கைது செய்யப்படுவதால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 31 ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ள 16 மீனவர்களையும் அவர்களின் படகுகளையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என வலியுறுத்தி தமிழக மீனவர்கள் காலவரையறையற்ற வேலை நிறுத்தத்தை ஆரம்பித்துள்ளனர் என்றும் தேவதாசன் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு கடற்பரப்பில் அத்துமீறி பிரவேசித்த குற்றச்சாட்டில் கடந்த மாதம் 31 ஆம் திகதி இந்திய மீனவர்கள் 9 பேரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். குறித்த மீனவர்களின் 3 ரோலர் படகுகளும் இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

இராமநாதபுரத்தை சேர்ந்த 3 மீனவர்களும் கோட்டை பட்டினத்தை சேர்ந்த 4 மீனவர்களும் நாகபட்டினத்தை சேர்ந்த 9 மீனவர்களுமே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ற)

# விதை உருளைக்கிழக்கு வழங்குவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப்.7
யாழ்.மாவட்டத்தில் உருளைக் கிழங்கு செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகளுக்கு இவ்வருடமும் காலபோகச் செய்கைக்காக விதை கிழங்கு இறக்குமதி செய்து வழங்கப்படவுள்ளது என்று யாழ். மாவட்ட உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த வருடம் பெரும்போகத்தில் உருளைக்கிழங்குச் செய்கையில் ஈடுபடவிரும்பும் விவசாயிகள் தமக்கு தேவையான விதை கிழங்குகளின் அளவு இனங்கள் என்பவற்றை தமது பகுதியிலுள்ள உரு ளைக்கிழங்கு உற்பத்தியாளர் விற் பனைக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பிரதிநிதிகளிடம் பதிவு செய்து கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# கபடி மைதான கட்டுமானத்[illegible]ல் அதிருப்தி

யாழ்ப்பாணம், செப். 7
வடமாகாணத்தின் முதலாவது கபடி உள்ளக விளையாட்டு மைதானம் மாகாணத்தின் எல்லைக் கிராமமான ஈரப்பெரியகுளம் கிராமத்தில் அமைக்கப்படுவதால் மைதானத்தின் முழுப்பயனையும் பெறமுடியாமல் போவதாக கபடி ஆர்வலர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

வடமாகாணத்தின் நிதி ஒதுக்கீட்டில் 5 மில்லியன் ரூபா செலவில் முதலாவது கபடி உள்ளக விளையாட்டு மைதானம் வவுனியா மாவட்டத்தில் நிறுவ முடிவாகியது. இதனை வவுனியா நகரசபை மைதானத்துடன் இணைந்த முறையில் நிறுவுவதாக ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் தற்போது மாகாணத்தின் எல்லைக் கிராமமும் முழுமையாகவே சிங்களமக்கள் வாழுகின்ற கிராமமுமான ஈரப்பெரியகுளத்துக்கு மாற்றப்பட்டதால் வடமாகாணத்தில் அதிகம் வாழும் தமிழ்மக்கள் மைதானத்தை பயன்படுத்தும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டு அந்தக் கிராமத்தவர்கள் மட்டும் பய[illegible] பெறும் நிலை ஏற்பட்டுள்ள[illegible] குற்றம் சாட்டப்படுகின்றது.

குறித்த [illegible]ச்சாட்டுக்கள் தொடர்பில் [illegible]ாகாண விளையாட்டுத்துறை அமைச்சரிடம் தொடர்பு கொ[illegible] கேட்டபோது, 'வடமாகா[illegible]தில் கபடி விளையாட்[illegible]மம்படுத்தும் நோக்கில் வவு[illegible] மாவட்டத்தில் ஓர் கபடி உள்[illegible]ளையாட்டு மைதானம் அ[illegible] முடிவாகியது. அதனை நக[illegible]த்தியில் அமைத்தால் போ[illegible]ரத்து மற்றும் ஏனைய மா[illegible] வீரர்கள் வருகை என்பவற்[illegible] இலகுவாக இருக்கும் எ[illegible]தி வவுனியா நகரசபை மை[illegible]த்துடன் அமைக்க விரும்பி[illegible]. இருப்பினும் அவ்வாறு அ[illegible]பதில் ஏற்பட்ட நடைமுறை[illegible] பிரச்சினைகள் காரணமாகவும் [illegible]மாகாணத்தில் கபடி விளையா[illegible] பதக்கங்களை வெற்றியீ[illegible]காணத்துக்குப் பெருமை தே[illegible]ந்து கொண்டிருக்கும் வீரர்களின் கோரிக்கையை பரிசீலித்து அதன் பிரகாரம் மைதானத்தை ஈரப்பெரியகுளம் கிராமத்தில் அமைப்பதற்கு அனுமதிக்கப்பட்டது. இதற்கான மொத்தச் செலவு 5மில்லியன் ரூபா' என்றார். (ம-101)

### நெதர்லாந்து பிரஜை கடலில் மூழ்கி உயிரிழப்பு

கல்கிசை கடலில் குளிக்க சென்று கடலில் மூழ்கிய நெதர்லாந்து பிரஜை ஒருவர் காப்பற்றப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில்நேற்று உயிரிழந்துள்ளார்.

60 வயதான குறித்த நெதர்லாந்து பிரஜை நேற்று முன்தினம் களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். சிகிச்சை பலனின்றி அவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

சடலம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் குறித்து கல்கிசை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற)

விற்பனைக்கு
நல்ல நிலைமைகளில் உள்ள 6 அடி டீப் பிறீசர்கள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 222 8662
S.சந்தியாபிள்ளை
25, கோயில் ஒழுங்கை, நாவாந்துறை.

வேலையாள்கள் தேவை
யாழ் நகரிலுள்ள பிரபல்யமான உணவகம் பணிகளுக்கான நவீன வசதிகள் ... [illegible]
★ வரவேற்பாளர்: ஆண்/பெண்
★Room பராமரிப்பாளர் ஆண்/பெண்
உடனடியாகத் தேவை.
தொடர்பு:- 077 2561990, 021 221 7770

மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு
பெண்களுக்கான Scooty zest 110, 2500 km ஓடிய NP BCH xxxx இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு
தொடர்பு : 077 474 7327

AFTER A/Levels
எதிர்கால தொழில்வாய்ப்பினை உறுதிப்படுத்தும் கற்கைநெறிகள்
FREE
PEARSON edexcel advancing learning, changing lives
BTEC HND
Business Management
MBA
Degree - Final Year
B.A(Hons)Business Administration
HND
in Business Management
OL's / AL's / DiBM
BA (Hons)
in Business Administration
Offered in Partnership with
LONDON metropolitan university
PEARSON edexcel advancing learning, changing lives
BTEC HND
Computing & Systems Development
FREE
Msc
Degree - Final Year
HND
Computing & Systems Development
OL's / AL's / DiTEC
BEng (Hons)
in Software Engineering
BSc (Hons)
in Computing
LONDON metropolitan university
2015 September Intake
BS & GOLD PARTNER of Pearson (Edexcel), UK
ESOFT METRO CAMPUS
No. 437, K.K.S Road, Jaffna, Sri Lanka
077 309 9 308

# மகிந்த வெற்றி பெற்றிருந்தால் படுகொலைகள் நடந்திருக்கும்

### முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

கொழும்பு, செப்.7
நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, வெற்றியீட்டியிருந்தால் பெரு[illegible]மனித படுகொலைகள் இடம்பெற்றிருக்கும் எ[illegible]று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ச இலங்கையில் பொலிஸ் அதிகாரம் நிறைந்த அரசொன்றையே நடத்தி வந்தார். அவர் மீண்டும் அதிகாரத்துக்கு வந்தால் அப்பாவிகள் பலரை படுகொலை செய்திருப்பார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமக்கும் தமக்கு நெருக்கமானவர்களுக்கும் எதிராக ஊழல் மோசடிகள் தொடர்பிலான குற்றச்சாட்டுக்களை மூடி மறைக்கவே மகிந்த ராஜபக்ச ஆட்சி பீடம் ஏற மீண்டும் முயற்சித்[illegible].

மகிந்த ராஜபக்ச இந்தியாவை விடவும் வே[illegible]ம் நாடுகளுக்கு முக்கியத்துவம் அளித்து வந்தார். எனினும் இந்தியா, இலங்கைக்கு மிகவும் முக்கியமானது. முதலீடு முதல் பல்வேறு துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையில் உறவுகள் நீடித்து வருகின்றன.

சீன அபிவிருத்தித் திட்டங்களால் நாட்டின் கடன் சுமை அதிகரித்தது. மகிந்த தரப்பினர் தரகுப் பணத்தை அதிகளவில் பெற்றுக்கொண்டதே அதற்கான காரணம்.



மகிந்த ராஜபக்ச பல்வேறு வழிகளில் எனக்கு நெருக்கடிகளை கொடுத்து வந்தார். தமிழ் மக்களின் காணிகளை மீள வழங்கவும், காணாமல் போனவர்[illegible] களுக்கு தீர்வு [illegible] வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது-என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளூராட்சி

நிறைவடையவுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகமும் தேர்தல் நடைபெறும் வரையில் விசேட ஆணையாளரின் கீழ் கொண்டு வரப்படவுள்ளன.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலை தொகுதிவாரி முறையில் நடத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. அது தொடர்பிலான எல்லை நிர்ணய வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப் படவுள்ளது.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலைத் தொடர்ந்து இவ்வருடமே உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறும் என ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் எதிர்வரும் நவம்பர் மாதம் புதிய நாடாளுமன்றத்தின் வரவு–செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ளதால் இந்த ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது சாத்தியமில்லை. ஆகையால் எதிர்வரும் மார்ச் மாதம் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படலாம் என்று அந்தத் தகவல்கள் மேலும் தெரிவித்தன. (ற–வ)

## எதிர்க்கட்சி

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முன்னாள் மேல் மாகாணசபை முதலமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பிரசன்ன ரணதுங்க:–

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஒரு பகுதியினர் ஐக்கிய தேசிய கட்சியுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் தேசிய அரசில் இணைந்துள்ளனர். எனினும் தேசிய அரசில் இணைந்து கொள்ளாத ஏனைய தரப்பினர் நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சி வரிசையில் உள்ளோம்.

எனவே எமது தரப்புக்கே எதிர்க் கட்சித் தலைவர் பதவி வழங்கப்பட்டிருக்க வேண்டும். அதற்காக 50 இக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் கையொப்பமிட்டு எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு குமார வெல்கமவின் பெயரைப் பரிந்துரை செய்து ஜனாதிபதியிடம் வழங்கியிருந்தோம்.

எனினும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் எமது கோரிக்கையை நிராகரித்து எதிர்க் கட்சித் தலைவர் பதவியை தாம் கோரமாட்டோம் என சபாநாயகருக்கு அறிவித்துள்ளார். இதனாலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கு அந்தப் பதவியை வழங்குவதாக சபாநாயகர் அறிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவராக சம்பந்தன் நியமிக்கப்பட்டமையை நாம் எதிர்க்கவில்லை. ஆனால் அவரது கட்சி வடக்கு மாகாண சபையில் இலங்கை மீது சர்வதேச விசாரணை கோரி தீர்மானம் நிறைவேற்றியது. எனவே மனச்சாட்சிப்படி எமக்கே எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்பட வேண்டும்– என்றார்.

இதேவேளை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த 40 உறுப்பினர்கள் தேசிய அரசுக்கு ஆதரவாக இல்லை. அவர்கள் எதிர்க் கட்சியில் சேரவிருப்பதாக இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டி சொய்சா கூறியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கான அனுமதியை சபாநாயகரிடமிருந்து விரைவில் பெற எதிர்பார்த்துள்ளதாகவும், எதிர்க்கட்சி தலைவர் யார் என்பதை மிக இரகசியமாக வைத்துள்ளோம் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ற–வ)

## வாக்குரிமை

இலக்கத்தை அறிவிக்க முடியும். இந்தத் தகவல்களை ராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல் திணைக்களத்தின் மேலதிக தேர்தல் ஆணையாளருக்கு ஒரு பிரதியையும் மாவட்ட தேர்தல் காரியாலயத்துக்கு ஒரு பிரதியையும் எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும். – என்று கூறினார்.

எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னதாக இந்த விவரங்களை அனுப்பி வைத்து மீளவும் வாக்களிப்பதற்கான உரிமையை பெற்றுக்கொள்ள முடியும். தற்காலிக அடிப்படையில் வெளிநாடு சென்று மீள நாடு திரும்ப உத்தேசிக்கும் இலங்கையர்கள் வெளிநாட்டு முகவரி மற்றும் கடவுச்சீட்டு இலக்கத்தை குறிப்பிட்டு வாக்குரிமையை பெற்றுக் கொள்ள விண்ணப்பிக்க முடியும்– என்றும் அவர் குறிப்பிட்டார். (ற–வ)

## ஜெனிவா

சமர்ப்பிக்கப்படுவது குறித்து எதிர்வரும் 14ஆம் திகதி அறிவிக்கப்பட உள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த அமர்வில் இலங்கைக்கு ஆதரவான தீர்மானமொன்றை அமெரிக்கா சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறான பின்னணியில் இலங்கையின் முக்கிய அமைச்சர்கள் இருவரும் அமர்வுகளில் பங்கேற்க உள்ளனர்.

முன்னதாக இலங்கையின் சார்பில், ஜெனிவாவுக்கான இலங்கைப் பிரதிநிதிகளை அனுப்பி வைக்கத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் தற்போது அரசு அந்தத் தீர்மானத்தை மாற்றியமைத்துக்கொண்டுள்ளது. ஜெனிவாவுக்கான பயணம் தொடர்பில் அமைச்சர் மங்கள சமரவீர, ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிர்வரும் 12ஆம் திகதி விசேட விளக்கமொன்றை அளிக்க உள்ளார் என்றும் அந்த தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (ற–வ)

## மைத்திரி

தெரிவிக்கப்படுகின்றது. கொழும்பு விஜயராம மாவத்தையில் உள்ள வீடு ஒன்றே முன்னாள் ஜனாதிபதி யான மகிந்த ராஜபக்சவின் உத்தியோக பூர்வ இல்லமாக கடந்த செவ்வாய்க் கிழமை வழங்கப்பட்டுள்ளது. (ற–வ)

## சீனாவின்

கருணா எனப்படும் விநாயக மூர்த்தி முரளிதரன் வழங்கிய நேர்காணலை இலங்கை இராணுவத்தினர் மறுத்துள்ள நிலையிலேயே சரத் பொன்சேகா இந்த விடயத்தை சீன செய்தி நிறுவனத்துக்கு வழங்கியுள்ளார்.

சீனாவுடன் எப்போதும் இலங்கை நெருக்கமான உறவை வைத்துக் கொள்ளும். சீனாவின் ஆதரவு இல்லையென்றால் போரை எம்மால் முடிவுக்குக் கொண்டு வந்திருக்க முடியாது. சீனா எமக்கு செய்ததை நாம் மறந்து விடக் கூடாது. சீனாவின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சாதனைகளையும் தற்போதைய அதன் நிலையையும் நாம் மதிக்கிறோம்.– என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

சீன இராணுவத்துக்கு ஒரு மிகப் பெரிய வரலாறு உள்ளது. அதற்கு ஒரு அங்கீகாரம் இருக்கிறது. சக்தி வாய்ந்த படையான சீன இராணுவம், உலகில் முக்கியமான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையின் புதிய அரசு சர்வதேச உறவுகளை வலுப்படுத்தி, பிராந்தியத்தில் உள்ள நாடுகளுடன் நல்லுறவை ஏற்படுத்தியுள்ளது. உலகின் ஏனைய நாடுகளுடன், அணிசேரா கொள்கையை இலங்கை பின்பற்றுகிறது. ஆனால், நிச்சயமாக நாம் பிராந்திய உறுதிப்பாட்டை உறுதிப்படுத்த வேண்டியுள்ளது. பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளுடன் நல்லுறவை பேண வேண்டியுள்ளது.

பிராந்தியத்தில் உள்ள நாடுகளின் [illegible] அங்கீகரிக்க வேண்டியுள்ளது. நாம் இன்னமும் சிறிய நாடாகவே இருக்கிறோம். நாம் நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது.– என்றார். (ற–5)

## ஜெனிவா விவகாரம்

உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்டு எதிர்வரும் 14ஆம் திகதி இந்தியா செல்லவுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அந்த நாட்டுப் பிரதமரான நரேந்திர மோடியை 15ஆம் திகதி சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். அன்று இந்தியப் பிரதமர் வழங்கும் மதிய உணவு விருந்துபசாரத்திலும் பிரதமர் கலந்து கொள்வார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ் மற்றும் இந்தியக் குடியரசு தலைவர் பிரணாப் முகர்ஜி ஆகியோரையும் சந்தித்துப் பேசு வார்.

அதேவேளை, ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் அமர்வுக்காக அங்கு செல்லவுள்ள வெளிவிவகார அமைச்சர் மங் களசமரவீரவும் இரு தரப்பு பேச்சுக்காக புதுடில்லிசெல்வார்.

இலங்கைப் பிரதமரின் இந்தப் பயணத்தில் இலங்கையுடனான முழுமையான பொருளாதார ஒத்துழைப்பு உடன்படிக்கை குறித்து இந்தியா ஆராயவுள்ளது, இலங்கை வர்த்தக சமூகத்தவர்களின் எதிர்ப்புக் காரணமாக மஹிந்த ராஜபக்ஷ அரசு இது குறித்த பேச்சுகளை இடைநிறுத்தியிருந்தது. அத்துடன் தலைமன்னாரையும் இராமேஸ்வரத்தையும் இணைக்கும் உத்தேச பாலம் குறித்து ஆராய்வது பற்றியும் இந்திய அதிகாரிகள் ஆர்வம் கொண்டுள்ளனர். இலங்கை அரசால் இடைநிறுத்தப்பட்டுள்ள கொழும்புபோர்ட் சிட்டி திட்டம் குறித்தும் ஆராயப்படலாம்.

ஜெனிவா அமர்வு குறித்தும் இரு நாடுகளும் தீவிரமாக ஆராயலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேவேளை, இந்திய மீனவர்கள் அத்துமீறி இலங்கைக் கடற்பரப்பிற்குள் நுழையும் விவகாரம் இந்தக் கலந்துரையாடல்களில் முக்கியத்துவம் பெறும் என்று இலங்கை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ற–சி)

## ஐ.நாவுக்கு

அறிக்கை இந்த மாத இறுதியில், ஐ.நா மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதம் நடத்தப்படவுள்ளது.

அந்த அறிக்கை தொடர்பில் அரசின் தரப்பில் பதிலளிப்பதற்காகவே, ஜனாதிபதி செயலகம் மற்றும் வெளிவிவகார அமைச்சு சார்பில் இரண்டு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று அந்தத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

அதேவேளை இலங்கை தொடர்பான ஐ.நா. விசாரணை அறிக்கை இன்னமும் அரசுக்குக் கிடைக்கவில்லை என்று வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மகிசினி கொலன்னே தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் விசாரணை அறிக்கை கடந்த மாத இறுதியில் இலங்கை அரசிடம் கையளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டிருந்த நிலையிலேயே இன்னமும் அது அரசிடம் கையளிக்கப்படவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, விசாரணை அறிக்கை, எதிர்வரும் 12 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் இலங்கை அரசிடம் கையளிக்கப்படும் என்று கொழும்பு இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ற–வ,5)

## சர்வதேச விவகார

பதிலளிப்பதற்கும், உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை [illegible] புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றே செய்து கொள்ளப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:–

பிரதானமாக, இலங்கை தொடர்பான ஐ.நா. விசாரணை அறிக்கைக்குப் பதிலளிப்பது மற்றும் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை உருவாக்குவது தொடர்பான விடயங்களை உள்ளடக்கியதாக இந்த புரிந்துணர்வு உடன்பாடு செய்து கொள்ளப்படவுள்ளது.

இந்த புரிந்துணர்வு உடன்பாடு, சர்வதேச மற்றும் தொழிலாளர் விவகாரங்களில் பொதுவான நிலைப்பாட்டை எடுப்பதை உள்ளடக் கியதாக இருக்கும். அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் பதவியேற்பு முடிவடைந்த பின்னர், இந்த புரிந்துணர்வு உடன்பாடு கைச்சாத்திடப் படும்.

இனப்பிரச்சினை, போர்க்குற்ற விசாரணை போன்ற சர்வதேச விவகாரங்கள். உள்ளிட்ட முக்கியமான விவகாரங்களில் பொதுவான கூட்டு நிலைப்பாட்டை எடுக்கும் வகையில் இந்த புரிந்துணர்வு உடன்பாடு கையெழுத்திடப்படும்– என்றார். (ற–வ,5)

## மகிந்த

அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இந்தியப் புலனாய்வு அமைப்பான 'றோ' மற்றும் மேற்குலகப் புலனாய்வு அமைப்புகளின் சதியாலேயே தாம் ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டேன் என்று மகிந்த ராஜபக்ச கூறுவதில் உண்மையில்லை. அதில் வெளிச்சக்திகள் எந்தவகையிலும் தொடர்புபடவில்லை. மகிந்த ராஜபக்சவை அகற்றுவதற்கு, என்னை ஏன் மீண்டும் அரசியலுக்கு வரக் கூடாது என்று மேற்குலக நாடுகள் கேட்டிருந்தனர். அதைத் தவிர அவர்கள் வேறு எதையும் செய்யவில்லை. நாமே எமது விவகாரங்களைக் கையாண்டோம்.– என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:–

ஏனென்றால் மகிந்த, தேர்தலில் வெற்றி பெறுவேன் என்ற நம்பிக்கையில் இருந்தார். தோல்வியுற்ற போது அதிர்ச்சியடைந்தார். அதற்குப் பலியாடுகளைத் தேட முனைந்தார்.

மகிந்த ராஜபக்சவைத் தோற்கடிப்பதற்காக, மைத்திரிபால சிறிசேனவைப் பொதுவேட்பாளராக ஒருங்கிணைப்பதற்கு, இந்தியப் புலனாய்வுப் பிரிவான றோ வழங்கிய, இந்தியாவின் பாதுகாப்பு ஆராய்ச்சி மையத்தால் தயாரிக்கப்பட்ட செய்மதி தொலைபேசிகள் பயன் படுத்தப்பட்டன என்று கூறப்பட்ட குற்றச்சாட்டுகளில் எந்த உண்மையும் இல்லை.

நாம் வைபர் தொழில்நுட்பத்தை மட்டுமே பயன்படுத்தினோம். வைபர் தொலைபேசி அழைப்புகளை ஒட்டுக்கேட்கும் தொழில்நுட்பத்தை மகிந்த ராஜபக்ச அரசு அறிந்திருக்கவில்லை.

எங்கிருந்து யார் அழைக்கிறார் என்று சிலரால் அடையாளம் காண முடிந்தாலும், எந்தவொரு புலனாய்வு அமைப்பாலும், வைபர் அழைப்புகளை ஒட்டுக்கேட்பது கடினமானது. இலங்கையில் அந்த தொழில்நுட்பம் இருக்கவில்லை. இல்லாவிட்டால் நாம் எல்லோரும் இறந்திருப்போம்.

இதற்காக நான் ஒன்றும் மிகப் பெரிய அலுவலகத்தை வைத்திருக்கவில்லை. எனது அலுவலகத்தை ராஜபக்ச மூடிய பின்னர், என்னால் இரண்டு பேரை மட்டுமே பணிக்கு அமர்த்திக் கொள்ள முடிந்தது. ஆனாலும் நாம் எப்படி யாவது செயற்படத் தலைப்பட் டோம்.

சிவில் சமூகத்தின் எழுச்சியே எமது வெற்றிக்கான பிரதான காரணம். அவர்கள் ஐ.தே.கவுடன் இணைந்திருந்தனர். ரணில் விக்கிரமசிங்க என்னைச் சந்திக்கப் பயப்படவில்லை. எமது நாட்டில் எதிர்க் கட்சி பலவீனப்பட்டிருந்த நிலையில், நாம் ஒரு கூட்டணி அமைக்க வேண்டும் என்பதை புரிந்து கொண்டேன்.

எனவே அவர்கள் எல்லோருடனும் கைகோர்த்தேன். அது தான் நடந்தது. இறுதியில் பொது எதிரியைத் தோற்கடித்தோம்– என்று கூறியுள் ளார் சந்திரிகா குமாரதுங்க. (ற–வ)

## 28 தனியார்

தாம் கைப்பற்றி வைத்திருந்த காணிகளை நிரந்தரமாக – சட்டரீதியாக தமது உடைமையாக்கும் நோக்குடன் சுவீகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். வடக்கு மாகாணம் முழுவதிலும், தனியாருக்குச் சொந்தமான பல்வேறு காணித் துண்டுகளை இவ்வாறு சுவீகரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்தநிலையில் கடந்த ஆண்டு, 22 காணித் துண்டுகள் வரையில் தமக்குத் தேவையில்லை என்று பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்திருந்ததால் அவற்றின் சுவீகரிப்பு நடவடிக்கைகளை நிறுத்துமாறு காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு பணித்திருந்தது.

இதன் தொடர்ச்சியாக, தற்போது யாழ்.குடாநாட்டில் மேலும் 28 காணித் துண்டுகள் தமக்குத் தேவையில்லை என்று பாதுகாப்புத் தரப்பினர் குறிப்பிட்டுள்ளதால் அவற்றின் சுவீகரிப்பு நடவடிக்கைகளையும் கைவிடுமாறு காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கடிதம் அனுப்பியுள்ளார்.

இது தொடர்பில், யாழ்ப்பாணத்திலுள்ள ஒவ்வொரு பிரதேச செயலாளருக்கும் யாழ்.மாவட்டச் செயலகத்தால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. குறித்த காணிகளின் விவரங்களை, காணி உரிமையாளர்களுக்கு பகிரங்கப் படுத்த நடவடிக்கை எடுக்குமாறு மாவட்டச் செயலகம், பிரதேச செயலாளர்களுக்கு பணித்துள்ளது.

இதே போன்று கிளிநொச்சி மாவட்டத்திலும், 30 காணித் துண்டுகளை விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் பயன்படுத்தினார்கள் என்று காரணம்காட்டி பொதுமக்களின் பயன்பாட்டிற்கு தடை செய்யப்பட்டு உட்பிரவேசிக்கத் தடை என்று விளம்பரப் படுத்தப்பட்டு, இராணுவத்தினரின் பாவனை இன்றியும் இருந்த காணிகளே விடுவிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற–5,105)

## சர்வதேச

இந்தக் குழுவில் வடமாகாணசபை உறுப்பினர்களான அனந்தி சசிதரன், எம்.கே.சிவாஜிலிங்கம் உட்பட ஐவர் இடம் பெறுவர் என அறிய முடிகிறது. தான் ஜெனிவா அமர்வில் கலந்துகொள்ளவுள்ளதை சிவாஜிலிங்கம் நேற்று உறுதிப்படுத்தியுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 30ஆவது கூட்டத்தொடர் மாத இறுதியில் ஆரம்பமாகவுள்ளது. இதில் இலங்கை குறித்த போர்க் குற்ற விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்நிலையிலேயே, போர்க்குற்றங்கள் பற்றி சர்வதேச விசாரணையை வலியுறுத்திப் பரப்புரை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஜெனிவாவில் அரச பிரதிநிதிகள் கலந்துகொள்ளும் உத்தியோக பூர்வ அமர்வுக்குப் புறம்பாக அரச சார்பற்ற நிறுவனங்களின் அமர்வுகளும் நடைபெறும். இதை உப மாநாடு எனக் குறிப்படலாம். இதில் கலந்துகொள்வதற்காகவே குறித்த குழுவினர் செல்லவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற–சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப். 14 புதுடில்லி செல்கிறார் ரணில்

புதுடில்லி, செப்.7
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர் வரும் 14 ஆம் திகதி இந்தியாவுக்கு பயணம். மேற்கொள்வார் என இந்திய ஊடகம் செய்தி வெளி யிட்டுள்ளது. புதுடில்லி செ ரணில் 3 நாள்கள் தங்கியிருந்து இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட அரசியல் தலைவர் களுடன் பேச்சு நடத்தவுள்ளார்.
இதில் இரு நாட்டுப் பிரதமர்களுக்கு இடையிலான சந்திப்பு எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ளது. ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்று ற்கொள்ளும் முதலாவது வெளிநாட்டுப் பயணம் இது என்பது குறிப்பிடத்தக்கது.
இதேவேளை–ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அடுத்த மாதம் 8 ஆம் திகதி இந்தியா செல்கிறார். மூன்று நாள் பயணமாகப் புதுடில்லி



செல்லும் ஜனாதிபதி, ஆசியாவில் பெ தத் த பலப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டமொன்றில் கலந்து கொள்ளவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (த–வ)

# மக்களின் பிரச்சினையைத் தீர்க்க களமிறங்கும் மைத்திரியின் மகள்

கொழும்பு, செப் 7
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வின் மகளான சத்துரிக்கா சிறிசேன நேற்று பொலன்னறுவை, வெலி கந்த, மாஹாவெலி பிரதேச மக்க ளின் நலம் விசாரிக்கும் பயணம் ஒன்றில் ஈடுபட்டிருந்தார்.
வெலிகந்த, மாஹாவெலி பிர தேசத் துக்குபயணம்செய்தசத்துரிக்காசிறிசேன பிரதேச மக்களை மாஹா வெலி விகா ரையில் சந்தித்துக் கலந்துரையாடினார்.
இதன்போது அந்த மக்களின் பிரச் சினைகளைக் கேட்டறிந்த அவர் விரைவில் தீர்வொன்றை பெற்றுத் தருவதாக உறுதியளித்தார். சத்துரிக்கா சிறிசேனவின் இந்தப் பயணத்தின் போது அரச அதிகாரிகள் சிலரும் இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.(த)

# நாட்டு மக்களுக்காக ஆட்சியை தியாகம் செய்துள்ளது ஐ.தே.க.

கட்சியின் பொதுச் செயலாளர் கபீர் ஹசீம் தெரிவிப்பு

கொழும்பு, செப்.7
ஐக்கிய தேசிய கட்சி தனித்து ஆட்சி யமைக்கும் எண்ணத்தை பொது மக்களுக்காக தியாகம் செய்துள் ளது என்று தெரிவித்துள்ளார் அந்தக் கட்சியின் பொது செயலா ளர் அமைச்சர் கபீர் ஹசீம்.
கேகாலையில் இடம்பெற்ற நிகழ் வொன்றில் கலந்துகொண்டு உரை யாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்துள் ளதாவது:–
ஐக்கிய தேசிய கட்சியின் அரசை உருவாக்க இயலாமல் இல்லை. இன்னும் ஆறு நாடாளுமன்ற உறுப் பினர்களை பெற்று இலகுவாக ஆட்சி அமைத்திருக்க முடியும்.
ஆனால் நாட்டு மக்களின் பிரச்சி னைகளை தீர்க்க ஐக்கிய அரசை உருவாக்க, சிறிலங்கா சுதந்திர கட்சியையும், ஐக்கிய தேசிய கட்சி யையும், பிரதமர் ரணில் விக்ரம சிங்க ஒன்றிணைத்துள்ளார்.
இது ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவும், பிரதமர் ரணில்விக்ர மசிங் கவும் மேற்கொண்ட தியா கமாகும்.– என்றார். (ற)

# நானும் ஜனாதிபதியும் தூக்கமற்ற இரு சாரதிகள்

*பிரதமர் ரணில் விபரிப்பு*

கொழும்பு, செப்.7
ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவும் நானும் தூக்கமற்ற இரு சாரதிகள் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். மற்றையவர்களுக்குத் தூக்கம் ஏற்பட்டமையால் நாம் இன்று இங்குள்ளோம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
நேற்று சிறிகொத்தவில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் 69வது ஆண்டு விழா நிகழ்விலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். குறித்த நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். இதன்போது பிரதமர் தனது உரையில்:–
தேசிய அரசு என்பது நான்கு சந்திகளைக் கொண்ட அதிவேக வீதிக்கு ஒப்பானது. வளைவுகள் இல்லாமையால் பயணம் வேக மாகவும் நிறுத்தம் இன்றியும் செல் லும். சாரதிக்கு தூக்கம் ஏற்பட்டால் விபத்துக்கள் இடம்பெற வாய்ப் புண்டு. இதனால் நானும் ஜனா திபதியும் தூக்கமற்ற இரு சாரதிகள். ஜனவரி 8ஆம் திகதி மற்றும் ஓகஸ்ட் 17ஆம் திகதி மக்கள் வழங்கிய ஆணையுடன் நாட்டை முன் னோக்கி கொண்டு சென்று நாட்டின் அனைத்து மக்களின் வாழ்வையும் சிறப்புற செய்ய வேண்டிய பொறுப்பை நானும் ஜனாதிபதியும் ஏற்றுள் ளோம். எமது பொறுப்புக்கள் மற் றும் கடமைகளை நிறைவேற்றிய பின் நாட்டை உங்களிடம் ஒப் படைப்போம் என இதன்போது பிரதமர் கூறினார். (வ)

# அரசின் அத்துமீறல்க குறித்து சர்வதேசத்திடம் மு யிடுவேன்

*கூறுகிறார் வாசுதேவ*

கொழும்பு, செப். 7
எதிர்க்கட்சிகளின் செயற்பாட்டாளர் களை முடக்குவதற்கு அரசு மேற் கொள்ளும் முயற்சிக்கு எதிராக சர்வதேசத்திடம் முறைப்பாடு செய்ய வுள்ளதாக ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.
கொழும்பு ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் பொதுநலவாய நாடு களின் நாடாளுமன்ற ஒன்றியத் திடம் மற்றும் சர்வதேச நாடாளு மன்ற ஒன்றியத்திடம் முறைப்பாடு செய்வதற்கு ஆயத்தம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
அத்துடன் இவ் அடக்குமுறை செயல் முறை தொடர்பில் நீதிமன்றில்



வ து தாக்கல் செய்வதற்கு நட வ கை மேற்கொள்வதாக அவர் ள்ளார்.
இ டாக ஜனநாயகம் மீறப் ப தாக அவர் மேலும் தெரிவித் துள ர். (த)

# நாடாளுமன்றைக் கூட்டுமாறு வலியுறுத்துகின்றது ஜே.வி.பி.

நாடாளுமன்றத்தை உடன் கூட்டு வதற்கு நடவடிக்கை எடுக்க வேண் டும் என்று மக்கள் விடுதலை முன்னணி வலியுறுத்தியுள்ளது.
பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் இந்தக் கோரிக்கையை அந்தக் கட்சி விடுக்கவுள்ளது என்றும் தெரிவிக் கப்படுகிறது.
அரசமைப்புச் சபை மற்றும் சுயா தீன ஆணைக்குழுவின் செயற் பாட்டை துரிதப்படுத்தும் நோக்கில், தாம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளோம் என்று கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
அரசமைப்புச் சபைக்கு உறுப்பினர் களை நியமிப்பது குறித்து, மக்கள் விடுதலை முன்னணி, நாடாளு மன்ற தேர்தலுக்கு முன்பிருந்தே அரசை வலியுறுத்தி வருகின்றது.
கடந்த 3ஆம் திகதி இரண்டாவது தடவையாக் கூடிய நாடாளு மன்றம், எதிர்வரும் 22ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.(ற)

# போருக்குப் பின்னர் பெண்களைப் பாலியல் வன்கொடுமைக்கு இரையாக்கும் ராணுவம்

*புதிய அறிக்கையில் சுட்டிக்காட்டு*

பிரதேசம் முழுவதும் நிலை நிறுத் தப்பட்டுள்ள படையினரின் பாலியல் வன்கொடுமைகள் மற்றும் தொந்த ரவுகளுக்குள் இலங்கையின் வட பகுதி பெண்களை இரையாக்கி கொள்வதன் மூலம் படையினர் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்வதைக் காண முடிகின்றது.
– இவ்வாறு போருக்குப் பின்னர் கடந்துள்ள 6 வருடங்களில் தமிழ் பெண்கள் எதிர்நோக்கி வரும் நிலைமை குறித்து வெளியாகி யுள்ள புதிய அறிக்கை ஒன்றின் இணை ஆசிரியர் கூறியுள்ளார்.
'சதாகாலமும் பாதிக்கப்பட்டவர்கள் போருக்கு பின்னர் இலங்கையின் தமிழ் பெண்கள்' என்ற தலைப்பில் இந்த அறிக்கை வெளி யிடப்பட் டுள்ளது.
சட்டத்தரணி கேட் க்ரோனினுடன் நியூயோர்க் பல்கலைக்கழகத்தின் சமூகம் மற்றும் உலகமய தலைமைத் துவத்திற்காக கொலின் பவல் பீடத்தின் பேராசிரியர் நிம்மி கௌரி நாதன் ஆகியோர் இணைந்து இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.
இது குறித்து வானொலி ஒன்றுக்குச் செவ்வி வழங்கியுள்ள நிம்மி கௌரி நாதன், வடக்கில் பெரும் எண்ணிக் கையிலான படையினர் நிலை நிறுத்தப்பட்டும், அவர்கள் செய்யும் குற்றங்களுக்கு தண்டனை வழங்கு வதற்கு முன்னுரிமை வழங்காமல் இருக்கும் வரை தமிழ்ப் பெண்கள் படையினரின் பாலியல் வன்கொடு மைகளுக்கு இரையாகும் பாரதூர மான ஆபத்தை எதிர்நோக்கியுள்ளனர்.
இலங்கையின் வடபகுதிக்கு சென்று சந்தித்த பெண்கள் உட்பட 50க்கும் மேற்பட்டவர்களிடம் உரையாடி சேகரித்த தகவல்கள் தமது அறிக் கைக்கு அடிப்படையாக அமைந்தது என பேராசிரியர் கௌரிநாதன் கூறி யுள்ளார்.
தமிழ் மக்கள் மத்தியில் ஆதிக் கத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக அரச படையினர் பாலியல் வன் கொடுமையை பயன்படுத்தும் விதம் பற்றி ஒரு பெண் செயற்பாட்டாளர் விளக்கியுள்ளார்.
எங்களை அடிமை வாசிகளாக வைத்து கொள்ள எப்படி, அவர்க ளால் பெண்களையும் ஆண்களையும் பாலியல் வன்கொடுமைக்கு இரை யாக்கி கொள்வது எப்படி என்பதை இராணுவம் தமிழ் மக்களுக்கு சொ லி காட்டியுள்ளது.
உ ல ஏனைய இடங்களை போல், இல ங்கையிலும் தண்டனை வழங் கவு ம தமிழ் பெண்களின் கௌர வத்தை சிதைக்கவும் பாலியல் வன் கொடுமை பயன்படுத்தப்படுகிறது என அந்த பெண் செயற்பாட்டாளர் கூறியுள்ளார்.
விடுதலைப் புலிகள் அமைப்பின் ஒழுக்கமான நிர்வாகம் இல்லாமல் போயுள்ள காலத்தில், கடும் இராணு வமயமாக்கலுக்கு கீழ் பாலியல் சுரண்டல்கள் அதிகரித்துள்ளதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
இணையத்தள பயன்பாடுகள், செல் போன் தொழில்நுட்பங்களை விடுத லைப் புலிகள் அமைப்பு வரையறுத் திருந்ததுடன் மது போதைக்கும் ஆபாச கலாச்சாரத்திற்கும் புலிகள் கடும் தண்டனை வழங்கியதாக அறிக் கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
விடுதலைப் புலிகள் அமைப்பின் போர் ரீதியான தோல்விக்கு பின் னர், வெளிவுலகத்திற்கு வடபகுதி திறந்து விடப்பட்டதுடன் தமிழ் சமூ கத்திற்குள் புதிய தொழில்நுட்பம் சுய மாக சென்றடையவில்லை என பேரா சிரியர் கௌரிநாதன் கூறியுள்ளார்.
வறுமையில் பீடிக்கப்பட்டுள்ள தமிழ் பெண்கள் செல் போன் உட்பட புதிய தொழில்நுட்ப உற்பத்திகளை விலை கொடுத்து வாங்குவதில்லை.
இராணுவத்தினரால் பலவந்தமாக வழங்கப்படும் அவற்றை நிராகரிக்க முடியாமல் தம் வசம் வைத்திருக்க நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.
பெண்களை இராணுவத்தின் பிடி யில் வைத்து கொள்ளவே இந்த புதிய தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப் படுவதாக கௌரிநாதன் தெரிவித் துள்ளார். எவ்வாறாயினும் இரா ணுவ பல வந்த பயமுறுத்தல் களுக்கு மத்தி யில் பொருளாதார வறுமையில் மூழ்கியுள்ள தமிழ் பெண்கள், போரில் பாதிக்கப்பட்ட தமிழ் சமூகத்திற்குள்ளும் பாலியல் பாதிப்புக்களுக்கு உள்ளாகின்றனர் எனவும் அறிக்கையில் சுட்டிக்காட் டப்பட்டுள்ளது.
இதனைத் தவிர பெண்களை வலுப்படுத்தவும் அவர்களை மேம் படுத்தும் நோக்கிலும் செயற்படும் சர்வதேச அரசசார்பற்ற அமைப் புகளில் தலையீடுகள் குறித்து நகைப்பை ஏற்படுத்தும் சிறியவை கள் என அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.
பல அரசசார்பற்ற அமைப்புகள் பாலி யல் வன்கொடுமைகளுக்கு உள்ளான பெண்களுக்கு கோழி களையும், மாடுகளையும் தையல் இயந்திரங்களையும் வழங்கு கின் றன அல்லது வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கை மற்றும் சிகை அலங்காரம் தொடர்பான பயிற்சிகளை வழங்கு கின்றன.
இந்தத் திட்டங்கள் பெண்களின் நல் இருப்புக்கு நிரந்தர தீர்வல்ல என கூறும் அறிக்கை இது அவர்களை ஆபத்தில் தள்ளிவிடப்படும் அபா யத்தை ஏற்படுத்தும் என எச்ச ரித்துள்ளது. (த)

## மகிந்தவை கேலி செய்கின்றனர் – டலஸ்

மத்தள விமான நிலையத்தில் நெல் களஞ்சியம் அமைக்கப்பட்டுள் ளமையானது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை கேலிக் குரியதாக்கும் செயல் என்று மாத் தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னர் டலஸ் அழ்கப்பெரும குற்றம் சாட்டியுள்ளார். சர்வதேச விமா்ன நிலையத்தை தமது தொகுதியில் அமைத்த விட யத்தில் அவருக்கு சேறு பூசும் வகையில் இந்த செயற் பாடு அமைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வயலின் வித்துவான் இராதாகிருஸ்ணன் காலமானார்

யாழ்ப்பாணம், செப்.7
வயலின் வித்துவான், இசைஞான திலகம் உருத்திராபதி இராதாகிருஸ் ணன் நேற்று மாரடைப்புக் காரண மாக காலமானார்.
இணுவிலைச் சேர்ந்த இவர் நேற்று நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெற்ற இ சை நிகழ்ச்சியில் வயலின் வாசித்துக் கொண்டிருந்த சமயம் மாரடைப்பு ஏற்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையின் அவ சர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு அங்கு உயிரிழந்தார் என்று தெரி விக்கப்பட்டது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்மீன், நவஜீவன்ஸ் இறுதியில் இன்று மோதல்
## பாரதி வி.கழகத் தொடரில் பாரதி மைதானத்தில்





கரணவாய், செப். 7
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பொலிகண்டி பாரதி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திய உதைபந்தாட்டத் தொடரில் விண்மீன், நவஜீவன்ஸ் அணிகள் இறுதியாட்டத்துக்கு முன்னேறியுள்ளன.

**றேஞ்சர்ஸ் எதிர் விண்மீன்**
நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த அரையிறுதியாட்டங்களில் முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகமும் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகமும் மோதின. அரையிறுதிக்கு உரிய தொடக்கம் ஆட்டத்தில் இல்லை. வாய்ப்புக்கள் கிடைப்பதும் பின்பு அவை கோட்டை விடப்படுவதுமாகவே இருந்தது. நீண்ட போராட்டத்தின் பின்னர் விண்மீன் சார்பாக முதல் கோல் பதிவானது. மறு கணமே றேஞ்சர்ஸ் சார்பாக கோல் பதிவாகி ஆட்டம் சமநிலை காணப் போகின்றது என்று எதிர்பார்க்கப்பட்ட வேளையில் அந்த வாய்ப்பும் கோட்டைவிடப்பட்டது. இதனால் முதல்பாதி 1:0 என்ற கோல் கணக்கில் விண்மீனின் ஆதிக்கத்துடன் நிறைவுக்கு வந்தது.
இரண்டாம் பாதியின் ஆரம்பமே றேஞ்சர்ஸின் வீரர் கைலாஸின் சார்பாக பதில் கோல் பதிவாகி ஆட்டம் சமநிலையானது. விடுவதாய் இல்லை விண்மீன். காண்டீபனின் உதவியுடன் விண்மீனின் இரண்டாவது கோல் பதிவானது. முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது பலாலி விண்மீன். ஆட்ட நாயகனாக டேமியன் தெரி வானார்.

**சென்.மேரிஸ் எதிர் நவஜீவன்ஸ்**
தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதியில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணியும் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியும் மோதின. ஆட்டத்தின் ஆரம்பத்திலேயே நவஜீவன்ஸ் அணிக்கு கோல் போடுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்த போதும் அந்த அணியின் முன்கள வீரர் அதனை சரியான முறையில் பயன்படுத்தத் தவறினார். 12 ஆவது நிமிடத்தில் சென்.மேரிஸின் முன்களவீரர் தங்கன் கோலொன்றைப் பதிவுசெய்து கோல் கணக்கை ஆரம்பித்து வைத்தார். ஆனால் சென்.மேரிஸின் வீரரொருவரின் முறையற்ற ஆட்டத்தால் தண்டனை உதையின் மூலம் கோல் கணக்கை சமன் செய்தது நவஜீவன்ஸ். யக்சன் மற்றுமொருகோலை அடிக்க 2:1 என்றபுள்ளிகள் மூலம் சென்.மேரிஸின் ஆதிக்கத்துடன் முதல் பாதி முடிவடைந்தது.
இரண்டாம் பாதியின் 10 ஆவது நிமிடத்தில் கௌதமனும் 11 ஆவது நிமிடத்தில் உசானந்தும் 13 ஆவது நிமிடத்தில் பொபிநாதனும் கோல் அடிக்க 4:2 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது நவஜீவன்ஸ். மேலதிக கோல்கள் பெறப்படாத நிலையில் 4:2 என்ற கோல் கணக்கில் நவஜீவன்ஸ் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. ஆட்ட நாயகனாக நவ ஜீவன்ஸ் அணியின் கௌதமன் தெரிவானார்.
விண்மீன், நவஜீவன்ஸ் அணிகளுக்கிடையிலான இறுதியாட்டம் இன்று நடைபெறவுள்ளது. ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் செ.நிரோஜன் தலைமையில் இடம்பெறும் இந்த இறுதியாட்டத்தில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் உதயன் குழுமத் தலைவருமான ஈஸ்வரபாதம் சரவணபவனும், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர்களான வே.சிவயோகன், ச.சுகிர்தன் மற்றும் பருத்தித்துறை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் ப.சஞ்சீவன் கரவெட்டிப் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் க.பரஞ்சோதி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-108)

## மரதன், சைக்கிள் ஓட்டப் போட்டிகள்

யாழ்ப்பாணம், செப். 6
வட்டுவாகல் கிராம முன்னேற்ற சங்கமும், உதயசூரியன் விளையாட்டுக்கழகமும் இணைந்து முல்லைத்தீவு மாவட்ட ஆண்களுக்கான மரதன்ஓட்டம், சைக்கிள்ஓட்டம் ஆகிய போட்டிகளை நடந்தவுள்ளது.
குறித்த போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் தங்களது உடல்நலம் தொடர்பான மருத்துவச் சான்றிதழ்களை சமர்ப்பித்து பதிவுகளை மேற்கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், செப். 7
பிறிமா நிறுவனத்தின் அனுசரணையுடன் சிறிலங்கா கிரிக்கெட் நடந்தும் பிறிமா வெற்றிக் கிண்ணத் துக்கான மாவட்ட மட்ட 15 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரில் இன்று இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-
கிளிநொச்சி – தர்மபுரம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட அணியை எதிர்த்து முல்லைத்தீவு மாவட்ட அணி மோதவுள்ளது. சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் யாழ். மாவட்ட அணியை எதிர்த்து திருகோணமலை மாவட்ட அணி மோதவுள்ளது. யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெறும் ஆட்டத்தில் திருகோணமலை மாவட்ட அணியை எதிர்த்து வவுனியா மாவட்ட அணி மோதவுள்ளது. (ம-23)

## காந்திஜி வி.கழக முடிவுகள்



யாழ்ப்பாணம் செப். 7
தம்பாட்டி காந்திஜி சனசமூக நிலையத்தின் 66ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, குறித்த சன சமூக நிலையமும் தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக்கழகமும் இணைந்து அழைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடத்திவரும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறிந்த கழக மைதானதில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:- புங்குடுதீவு பாரதி அணிக்கும் சாவற்கட்டு மகாத்மா அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றிதோல்வி காண்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதைகளில் சாவற்கட்டு மகாத்மா அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் புங்குடுதீவு நசேரத் அணியும் ஊர்காவற்றுறை ஞானஒளி அணியும் மோதின. இந்த ஆட்டத்தில் புங்குடுதீவு நசேரத் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## நாவலர், ஐங்கரா அணிகள் அடுத்த சுற்றுக்குள்
### இளங்கதிர், தொண்டமானாறு அணிகளை வீழ்த்தி

கரணவாய், செப். 7
மாதனை விளையாட்டுக்கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரில் தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகம் மற்றும் கரவெட்டி ஐங்கரா விளையாட்டுக் கழகம் என்பன வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

**நாவலர் எதிர் இளங்கதிர்**
கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இளங்கதிர் விளையாட்டுக் கழகம் மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய நாவலர் விளையாட்டுக் கழகம் நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப்பரி மாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 101 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக டினோதரன் 33 ஓட்டங்களையும் அபி 22 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இளங்கதிர் அணி சார்பாக சுஜீவன் 2 இலக்குகளையும் ஈழவன் அனோஜன் தலா ஓர் இலக்கினையும் கைப்பற்றினர்.
102 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்காகக் கொண்டு களமிறங்கிய இளங்கதிர் அணி 10 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 63 ஓட்டங்களைப் பெற்று 39 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அதிகபட்சமாக மதன் 26 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் நாவலர் அணி சார்பாக சுதன் 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

**தொண்டமானாறு எதிர் ஐங்கரா**
தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் தொண்டமானாறு விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரவெட்டி ஐங்கரா விளையாட்டுக் கழகம் மோதியது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய தொண்டமானாறு அணி 10 பந்து பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 83 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக தனுசன் 19 ஓட்டங்களையும் உதயசாந் 17 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஐங்கரா அணி சார்பாக அஜந்தன் 4 இலக்குகளையும் சிவதர்சன், ரமேஸ், வியேந்திரன் மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஐங்கரா விளையாட்டுக் கழகம் 9 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து 88 ஓட்டங்களைப் பெற்று 8 இலக்குகளால் வெற்றிபெற்றது. அதிகபட்சமாக விதுர்சன் 46 ஓட்டங்களையும் ரவிகரன் 16 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் தொண்டமானாறு அணி சார்பாக மது ஓர் இலக்கைக் கைப்பற்றினார். (ம-108)

## சிறிஜெயவர்த்தன – பேரதெனியா இறுதியில் பலப்பரீட்சை

யாழ்ப்பாணம், செப். 7
அனைத்து பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டங்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.
முதலாவதாக இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் யாழ்.பல்கலைக் கழக அணியை எதிர்த்து சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழக அணி மோதிக் கொண்டது. இதில் சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக அணி 32:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவதுஅரையிறுதியாட்டத்தில்கொழும்பு பல்கலைக்கழக அணியை எதிர்த்து பேரதெனியா பல்கலைக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் பேரதெனியா பல்கலைக் கழக அணி 28:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-23)

## வவுனியாவை வீழ்த்தியது திருகோணமலை

யாழ்ப்பாணம், செப். 7
பிறிமா நிறுவனத்தின் அனுசரணையுடன் சிறிலங்கா கிரிக்கெட் நடத்தும் மாவட்ட 15 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையிலான 50 பந்துப் பரிமாற்றங்களைக்கொண்ட துடுப்பாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் வவுனியா மாவட்ட அணியை 72 ஓட்டங்களால் வீழ்த்தியது திருகோணமலை மாவட்ட அணி.
முதலில்துடுப்பெடுத்தாடியதிருகோணமலை மாவட்ட அணி 45.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 192 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக எம்.ஜி.நவடோபு 36 ஓட்டங்களையும், சிகான் 31 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் வவுனியா மாவட்ட அணி சார்பில் சங்கீத் 3 இலக்குகளையும் தனேஸ் மற்றும் பானுசன் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
193 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி பெற்ற இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வவுனியா மாவட்ட அணி 30 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 120 ஓட்டங்களை மட்டும் பெற்றது. அதிகபட்சமாக பானுசன் 36 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் திருகோணமலை மாவட்ட அணி சார்பில் சியான் 4 இலக்குகளை வீழ்த்தினர். (ம-23)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரைக் கைப்பற்றும் முனைப்பில் ஆஸி.

## இரண்டாவது ஒருநாள் ஆட்டத்திலும் இங்கிலாந்து வீழ்ந்தது






இங்கிலாந்து - ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான ஒருநாள் தொடரின் இரண்டாவது ஆட்டத்திலும் ஆஸ்திரேலியா 64 ஓட்டங்களால் வெற்றிபெற்று தொடரில் 2:0 என்று முன்னிலையில் உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்தின் அணித்தலைவர் மோர்கன், முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தர். ஆஸியின் ஆரம்ப வீரர்களாக களத்தில் பேர்ண்ஸ் மற்றும் வோர்ணர். எதிர்கொண்ட முதல் பந்திலேயே உபாதை காரணமாக ஆட்டமிழப்பற்ற ஓய்வை அறிவித்துச் சென்றார் வோர்ணர். தற்பொழுது ஆஸியின் தலைவர் சிமித். மீண்டும் ஒரு அருமையான இன்னிங்ஸ். அணியின் ஓட்டம் 42ஆக இருந்த பொழுது 22 ஓட்டங்களுடன் பின்னின் பந்தில் போல்ட்னார் பேர்ண்ஸ். சிமித்துடன் இணைந்து நிதானித்தார் பெய்லி. சரிவையோ அல்லது கூடுதல் சுமையையோ ஏற்படுத்தக்கூடிய அளவில் நிதானிக்கவில்லை. பந்துப் பரிமாற்றங்களுடன் இணைந்து ஓட்டங்களும் நகர்ந்துகொண்டே சென்றது. சிக்சர்கள் என்பதை காணவே கிடைக்கவில்லை. இணைப்பாட்டமாக 99 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த வேளையில், 54 ஓட்டங்களுடன் விடைபெற்றார். சிறிது நேரத்தில் சிமித்தின் ஆட்டமும் நிறைவுக்கு வந்தது. சிக்சரை ஆரம்பித்து வாண வேடிக்கை காட்டினார் மக்ஸ் வெல். ஆனால் ஒரு ஓட்டத்தால் அரைச்சதத்தை தவறிவிட்டார். பின்வரிசையில் மார்ஸ் விளாசல். 200க்கும் அதிகமான சராசரியில் 31 பந்துகளில் 64 ஓட்டங்களைக் குவித்தார். முடிவில் ஆஸி. 309 ஓட்டங்கள்.

310 ஓட்டங்களை வெற்றியிலக்காகக்கொண்டு களமிறங்கிய இங்கிலாந்துக்கு அதன் ஆரம்ப வீரர்கள் சிறப்பாகவே அடித்தளம் அமைத்துக்கொடுத்தனர்.. கேல்ஸின் பிடியெடுப்பை பாய்ந்து எடுத்தார் சிமித். எதிர்பாராதவிதமான ஆட்டமிழப்பு அரங்கேறியது. 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் றோய். தற்பொழுது களத்தில் ரெய்லர் மற்றும் மோர்கன். மோர்கன் ஒருமுனையில் மிகவும் சிறப்பாக ஆடிக்கொண்டிருந்தார். ஆனால் மறுமுனை மிகவும் பலவீனமடைந்திருந்தது.

இலக்கு நோக்கி வந்த பந்தை கையால் மறித்து களத் தடுப்புக்கு இடையூறு என்ற முறையில் ஆட்டமிழந்தார் ஸ்டோக்ஸ். பின்வரிசை வருபவரும் போவதுமாக. 85 ஓட்டங்களுடன் மோர்கனின் ஆட்டமும் முடிவுக்கு வர முடிவில் இங்கிலாந்து 245 ஓட்டங்களில் சுருண்டு 64 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. (ம)



### பகலிரவு டெஸ்ட் ஆட்டம் மகேல எதிர்ப்பு

பகலிரவு டெஸ்ட் தொடருக்கு பலரும் ஆதரவு தெரிவித்து பந்துகள் உட்பட பல்வேறு பிரத்தியேகத் தயாரிப்புக்கள் மேற்கொண்டுள்ள நிலையில் எதிர்ப்பு தெரிவித்துள்ளார் மகேல ஜெயவர்தன.

பொதுவாக டெஸ்ட் ஆட்டங்கள் பகலில்தான் நடத்தப்படுகிறது. இந்த நேரத்தில் ரசிகர்களுக்கு நேரம் கிடைக்காத காரணங்களால் அவர்களால் மைதானத்துக்கு வரமுடியாத சூழல் ஏற்படுகிறது. இதனால் ரி-20 ஆட்டங்களின் பாணியில் டெஸ்ட் தொடர்களை பகலிரவு ஆட்டமாக நடத்தலாம் என்று முடிவு செய்யப்பட்டது. இந்நிலையில் பகலிரவு ஆட்டங்கள் டெஸ்டின் பாரம்பரியத்தை கெடுத்து விடும் என்று ஜெயவர்த்தனே கருத்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மகேல தெரிவித்ததாவது:- நான் கண்டிப்பாக பகலிரவு டெஸ்ட் தொடரின் ரசிகனாக இருக்கமாட்டேன். பகலிரவு டெஸ்ட் ஆட்டங்களால் டெஸ்ட்டின் பாரம்பரியம் மாறும் நிலை ஏற்படும். புதிய முயற்சி என்பது வரவேற்கத்தக்கது. அதே சமயம் நீண்ட காலம் வெள்ளை உடை, சிவப்பு நிற பந்தில் விளையாடி வரும் டெஸ்ட் ஆட்டங்களில் மாற்றத்தை ஏன் கொண்டு வரவேண்டும்" என்று கேள்வி எழுப்பியுள்ளார். முதல் பகலிரவு டெஸ்ட் தொடர் வருகின்ற நவம்பர் மாதம் அடிலெய்டில் நடக்கிறது. இதில் ஆஸ்திரேலியா - நியூஸிலாந்து அணிகள் மோதுகின்றன. (ம)

## தப்பிப் பிழைத்த மூர்ரே

சர்வதேச ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான அமெரிக்கன் ரென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டமொன்றில் தரவரிசையில் 3ஆவது இடத்தில் இருப்பவரும், 2012 ஆம் ஆண்டின் அமெரிக்க ரென்னிஸ் தொடரைக் கைப்பற்றியவருமான மூர்ரே கடும் போராட்டத்தின் பின்னர் அட்ரியான் மன்னாரினோவை தோற்கடித்து அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

முதல் இரண்டு செற்களையும் 5:7, 4:6 என்று இழந்த மூர்ரே இறுதி மூன்று செற்களையும் 6:1, 6:3, 6:1 என்ற கணக்கில் கைப்பற்றினார். விறுவிறுப்பாக நடந்த இந்த ஆட்டத்தின் முதல் இரு செற்களை மூர்ரே இழந்ததால், அவர் தோற்றுவிடலாம் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் கடைசி 3 செற்களில் ஆக்ரோசமாக ஆடி வெற்றி கண்டார் மூர்ரே. (ம)



## வோஸ்னியாக்கி அதிர்ச்சித் தோல்வி

சர்வதே ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான அமெரிக்கன் ரென்னிஸ் தொடர் நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது.

இந்தத்தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவில் தரப்படுத்தலில் 149 ஆவது இடத்திலுள்ள பெட்ரா செட்கோஸ்காவிடம் அதிர்ச்சித் தோல்வியடைந்துள்ளார் நான்காவது இடத்திலுள்ள முன்னணி வீராங் கனையான வோஸ்னியாக்கி.

வோஸ்னியாக்கி முதல் செற்றை 4.6 என்று இழந்தார். இருப்பினும் இரண்டாவது செற்றை 7:5 என்று கைப்பற்றினார். மூன்றாவது செற் இழுபறியாக நீடித்தது. இதில் 7:5 என்று வீழ்ந்தார் வோஸ்னியாக்கி. வோஸ்னியாக்கியின் விலகல் செரீனாவுக்கு அதிக வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது என்றும் சொல்லிக் கொள்ளலாம். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FRENCH LANGUAGE CENTRE
FOR BETTER FRENCH IN NORTH
பிரெஞ்சு மொழி வகுப்பு
Embassy International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM
MR. V. JEGAN (Trained in France - 2007
University French
DELF A1, A2 Exam இல் 100 % சித்தி French
0779 789 456 / 021 221 7781
No. 40
TP: 021 3202973
Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre

ஆங்கிலம்
இம்முறை A/L எழுதியோர், பல்கலை புகுமுக மாணவர்கள்
தொழில்புரிவோர், இளைஞர், யுவதிகளுக்கானது.
புதிய பயிற்சிநெறி ஆரம்பம் : 12.09.2015
பிரிவு 1 : காலை 08.00-10.00 பிரிவு 2 : முப 10.00-12.00
பிரிவு 3 : பிப 01.00-03.00 பிரிவு 4 : மாலை 03.00-05.00
021 320 88 18
021 3200 607
SAAMSON
077 621 4567
021 320 3313

ஏகமுகவர் தேவை
குடிநீர் (MINERAL WATER) போத்தல்
விநியோகிக்க
ஏக முகவர் தேவை.
மேலதிக தகவலுக்கு
077 278 7076
051 224 4846

VACANCY
FEMALE OFFICE RECEPTIONIST/ ASSISTANT
வெளிநாட்டு உயர்கல்வி நிறுவனம்மொன்றுக்கு ஆங்கிலம், கணினி அறிவுடன் கூடிய அனுபவம் / அனுபவமற்ற பெண் உதவியாளர்கள் தேவை.
உங்கள் விண்ணப்பங்களை 12.09.2015 ஆம் திகதிக்கு முன்னராக நேரில் கையளிக்கவும்.
SIO INTERNATIONAL VISA CONSULTANT
80/37, 1st FLOOR, JMC BUILDING
KASTHURIYAR ROAD, JAFFNA.
072 7385666 - 021 221 7865 www.siojobs.com

## ஐந்தாவது இடத்தில் வேண்டும் ரஹானே


டெஸ்ட் ஆட்டங்களில் இந்திய அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் ரஹானே ஐந்தாவது வீரராக களமிறங்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார் இந்திய 'ஏ' அணியின் பயிற்சியாளரான ராகுல் ராவிட்.

இலங்கைக்கு எதிரான தொடரில் மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது இடங்களில் மாறிமாறி களமிறங்கி அசத்தினார் ரஹானே. இதனால் எந்த இடத்திலும் அசத்தக்கூடியவர் என்று பலரும் பாராட்டி வந்தனர். இந்நிலையில் ரஹானே தொடர்பாக ராவிட் தெரிவித்தாவது– ரஹானே திறமை வாய்ந்த வீரர். அவருடைய திறமைக்கு 5ஆவது வரிசையே பொருத்தமானது. 5வது வீரராக இருந்தால் அவரால் திறனுடன் எதிர்கொள்ள இயலும். அவரின் இடத்தை அணித்தலைவர்கள் உறுதிப்படுத்த வேண்டும். மாறிமாறி களமிறக்கி அவரின் திறமையை வீணடிக்க வேண்டாம் என்றார். (ம)

## தீவுகளின் தலைவரானார் கோல்டர்

மேற்கிந்தியத் தீவுகளின் ஒருநாள் அணியின் தலைவரான கோல்டர், டெஸ்ட் அணியின் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை – மேற்கிந்தியத் தீவுகள் மோதவுள்ள டெஸ்ட் தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணியை, கிளைவ் லாய்ட் தலைமையிலான மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் தெரிவுக்குழுவினர் நேற்று அறிவித்தனர். இதுவரை டெஸ்ட் தலைவராக இருந்த ராம்டினுக்கு பதிலாக புதிய தலைவராக, ஒருநாள் அணியின் தலைவரும் சகலதுறை வீரருமான கோல்டர் நியமிக்கப்பட்டுள்ளார். துணைத் தலைவராக பிராத்வெயிட் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ராம்டின் வீரராக அணியில் தொடருகிறார். (ம)



## மிர்சா - ஹிங்கிஸ் முன்னேற்றம்

நியூயோர்க் நகரில் நடைபெற்றுவரும் சர்வதேச அங்கீகாரம் பெற்ற ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான அமெரிக்க ரென்னிஸ் தொடரின் பெண்கள் இரட்டையர் பிரிவில் சானியா மிர்சா (இந்தியா) – மார்டினா ஹிங்கிஸ் (சுவிட்சர்லாந்து) இணை 3ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றது.

தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள இணையான சானியா – ஹிங்கிஸ் இணை இரண்டாவது சுற்றில் டிமியா (சுவிட்சர்லாந்து) – ஜியாஜங் (சீனா) இணையை வென்றது. (ம)

NEW SCIENCE HALL
கன்னாதிட்டி யாழ்ப்பாணம்
DAY CLASSES
திங்கள்- வெள்ளி
2015 A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்குரியது.
PHYSICS → திரு. S.சோதிலிங்கம், திரு. G.பிரபா
CHEMISTRY → திரு. K.சிவத்திரன், திரு T.உமாசங்கர் (PAST PAPER) (MODEL PAPER); திரு. T.சுசாந்தன், திரு G.BENO
BIOLOGY → வழமையான ஆசிரியருடன்; திரு. T.கெங்காதரன்
COM.MATHS → திரு. P.செந்தில் நாதன்; திரு. S.சிவகரன்
ஆரம்பம்: 15.09.2015 TUESDAY 7.30 AM
தொடர்புகளுக்கு: 077 791 7611

Jaffna College Institute of Technology
Vaddukoddai [JCIT]
மாணவர்களுக்கான கற்கை நெறிகள்
யாவும் 2nd Week of September 2015 ஆரம்பம்
Bachelor's of Information Technology - BIT
External Degree School of Computing, Colombo University
Foundation in Information Technology - FIT
Pre Degree Course Leads to BIT - 6 Months
Certification offered by Colombo University - UCSC Sri Lanka
Diploma Course
Civil Draughtsmanship - 1 Year full time
Information and Communication Technology(ICT) - 6 Months full time
Technician Certificate
Telecommunication & Electronic - 1 Year full time
Craft Certificate Courses
தமிழ்மொழி மூலம் - 6 மாதங்கள் - முழுநேரம்
1.Electrical Wiring - மின் இணைப்பும் நிர்மாணமும்
2.Machine Shop Practice - லேத் வெல்டிங் பிற்றிங் பயிற்சி நெறி
3.Radio, TV & Servicing Practice - இலத்திரனியல் சாதனங்கள் திருத்துதல்
4.Aluminum Fitting & Fabrication - அலுமினியம் பொருத்துதலும் இணைத்தலும்
5.Motorcycle Mechanic - மோட்டார் வாகனம் திருத்துதல்
Computer Certificate Courses
3 Months Part time
1. Microsoft Office (Word, Excel, Access, PowerPoint)
2. Computer Graphic Designer ( PageMaker, CorelDraw, Pho.Shop)
3. Internet & E-mail
4. Computer Hardware Technician
5. AutoCAD 2D & 3D Modeling
6.Web Design
NVQ Level Computer Application Assistant(CAA)
தேசிய வாழ்க்கைத்தொழில் தகைமை முறைமைக்கு அமைவான பயிற்சிநெறி (NVQ Level)
Facilities : Hostel , Library & Sports etc.
A training Institute registered with the Tertiary and Vocational Educational Commission (TVEC) under P25/0014
(மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டது. பதிவு இலக்கம் : P25/0014 )
For More Information, TP: 0212250975/0213213139
Director, JCIT, Vaddukoddai, Sri Lanka.
Established in 1974 under the management council of the Board of Directors of Jaffna College.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.09.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org